**ANGLO ASIAN MINI MART**
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

GB 0.70p

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 8 | 24 — 30 ஏப்ரல் 2002 | முழக்கம்: 380

**FORWARD CONSULTANTS**
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants.co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

மட்டக்களப்பு



அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் பலலாயிரம் மக்கள்

→ 16

யாழ்ப்பாணம்




பொங்கு தமிழ்;
மற்றொரு மக்கள் எழுச்சி

→ 17

## நோர்வே இணக்க முயற்சிக்கு புதிய தடைக்கல்

# இடைக்காலநிர்வாகம் – தடைநீக்கத்திற்கு கடும் எதிர்ப்பு

## பௌத்தபீடாதிபதிகள் - எதிர்கட்சிகள் புதிய கூட்டணி



இன்று கொழும்பில் இடம்பெற்ற பௌத்த பிக்குக்களின் எதிர்ப்பு ஊர்வலம் பொலிசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது. (22.04.2002)

(22.04.02)

விடுதலைப் புலிகளுடனான சிறீலங்கா அரசின் பேச்சுவார்த்தைகளை குழப்புதற்கான கடுமையான எதிர்ப்பியக்கம் சிங்களப் பகுதிகளில் உருவாகி வருகின்றது. பிரதான பௌத்த பீடாதிபதிகள், பிக்குமார் அமைப்புக்கள், சந்திரிகாவின் சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி உட்பட பல அர்சியல் கட்சிகள் என்பன ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு எதிரான இவ்வெதிர்பியக்கத்தில் இணைந்துள்ளன.

வடக்குக்கிழக்கு இடைக்கால அரசு, புலிகளுக்கு எதிரான தடையை நீக்குதல் என்பன போன்ற முக்கிய விடயங்களில் ரணில் விக்கிரமசிங்கவை செயற்படாது முடக்குவதற்கான முயற்சியில் இவ்வெதிர்பியக்கம் ஈடுபட்டுள்ளது. இவ்விடயங்கள் முடக்கப்பட்டால் தற்போது நோர்வே ஏற்பாட்டில் இடம்பெறும் பேச்சுக்கள் முறிவடையும் என்கின்ற நிலையில் சனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆதரவுடன் இம்முயற்சி இடம்பெறுகின்றது.

### ★ இது நாட்டுக்கு அழிவாக முடியும்!

### புதிதாக உருவாகிய சிங்கள எம்.பிக்கள் குழு எச்சரிக்கை

(☞ 31ம் பக்கம்)

### ★ இந்தியாவின் ஆதரவை சந்திரிகா கோருகின்றார்

(☞ 31ம் பக்கம்)

## புலிகள்-அரசு உடன்பாட்டிற்கு ஐ.நாவில் வரவேற்பு

### ஸ்பெயின், கனடா, அவுஸ்திரேலியா நம்பிக்கை தெரிவிப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையேயான போர்நிறுத்த உடன்பாட்டு இயல்புநிலையைத் தோற்றுவிக்கும் என ஸ்பெயின் ஐக்கிய நாடுகள் சபை முன் நம்பிக்கை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு முன் உரையாற்றிய ஸ்பெயின் பிரதிநிதி புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான போர்நிறுத்த உடன்பாட்டை ஐரோப்பிய சமூகம் சார்பாக வரவேற்றார். அதனை முழுமையாக மதித்து நடக்கும் படி அவர் இரு தரப்பையும் கோரியதுடன் அனைத்து மக்களும் விரும்பும் தீர்வை காண உழைக்குமாறு புலிகளையும், சிறீலங்காவையும் கேட்டுக்கொண்டார். சிறீலங்கா அரசு போர்க்காலத்தில் நடந்தது போன்ற மனித உரிமைகளை மீறல்களையும், வன்முறைகளையும் இனியும் அனுமதிக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டதுடன் புலிகளும் தம் வாக்குறுதிகளைக்

(☞ 31ம் பக்கம்)

**தமிழினி** பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900 / Fax: 020 8843 9429

எமது அன்பு வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
2 அமுதம் மிளகாய்தூள் வாங்கினால் 3வது இலவசம்!
2 அமுதம் மா வாங்கினால் 3வது இலவசம்!!
பிரமிட், ஐங்கரன், DVD படால் 1 படம் £10 மட்டும் (Digital இசைத்தென்றல் DVD 5 £10)
லண்டனில் நீங்கள் நம்பமுடியாத விலையில்! ஒரு தடவை வந்து பாருங்கள்!!
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:** K. Jeisanthar
**Impression:**
IMPRIMERIE ROTSUD
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
AMUTHASURABI
Rheinische Str-55, 44137 Dortmund.
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356
டென்மார்க்: EELA MURASU
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588
சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16
பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
பாஸ்கரன் - Tel: 07811040188
இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527
நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
P.O Box 187,
Rosana,
Victoria 3084,
Australia.
Tel: (613) 9457 6347
Fax: (613) 9440 7367
E-Mail:tccsydney@one.net.au
கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave.,
P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041



குறிப்பு
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


# பிரபாவின் அரசியல் ஆளுமை வியப்பளிக்கின்றது நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விபரிப்பு

சமாதான முயற்சிகள் வெகுவாக முன்னேற்றம் கண்டு வருகின்றன. உண்மையில் அந்த முயற்சிகள் அளவுக்கு அதிகமான வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கின்றன என்றே கூறலாம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் துணிச்சலாகச் செயற்பட்டு வருகிறார். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அரசியல் தலைவர் என்ற அவருடைய புதியஸ்தானத்தில் ஆளுமையுடன் மிகவும் இயல்பாக இருப்பது வியப் பளிக்கின்றது என்று நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு செய்தியாளர் சங்கம் கொழும்பில் சனியன்று ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ஹெல்கிஸன் உரையாற்றினார். சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து அப்போது அவர் மிகவும் திருப்தி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு கெரில்லாப் போராட்ட அமைப்பு என்ற நிலையிலிருந்து, அரசியல் அமைப்பாக இப்போது மாறி வருவது கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். 19 ஆண்டு காலமாக இழுபட்டு வரும் இந்தப் பிணக்கைத் தீர்க்க இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் துணிச்சலாகச் செயற்பட்டு வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மோப்பநாய்கள் சகிதம் அமெரிக்கக் குழு

கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் சிறீலங்காவுக்கு உதவுவதற்கென 26 பேர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். சுமார் நான்கு மாதங்கள் அங்கு தங்கியிருந்து கண்ணிவெடிகளை அகற்றுவதில் படையினருக்கு உதவுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கண்ணிவெடிகள் காணப்படும் இடங்களை இனம் காண்பதற்கென விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட 4 மோப்ப நாய்களும் இக்குழுவினரோடு யாழ்ப்பாணம் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

## இந்தியா பேச்சுக்களை ஆதரிக்கும்

### – மீண்டும் உறுதிமொழி –

(22.04.02)

நாங்கள் சிறீலங்கா அரசுக்கும், புலிகளுக்கும் இடையேயான இணக்க முயற்சிகளை மனதார ஆதரிக்கின்றோம் என இந்தியா மீள இன்று உறுதிப்படுத்தியுள்ளது.

இணக்கப் பேச்சுக்களை குழப்புவதற்கு சிங்கள கடும்போக்காளர்கள் முயல்கின்றனர் என்கின்ற வேளையில் பேச்சுக்களை ஆதரிப்பதாக இந்தியா மீள வலியுறுத்தியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்திய பிரதி வெளிவிவகார அமைச்சர் ஓமார் அப்துல்லத ஒரு அயல்நாடாக இருந்தே பேச்சுக்களை ஆதரிப்பதாகக் கூறியதுடன் புலிகளுக்கு எதிரான தடை இப்போது நீக்கப்படும் சாத்தியமில்லை என பிரதமர் வாஜ்பாய் கூறியதை மீள சுட்டிக்காட்டியுள்ளார்.


## மணமகன் தேவை

தாயகத்தில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து குடும்பத்தைச் சேர்ந்த 41வயது ஆசிரியை மணமகளுக்கு அவரது சகோதரர்கள் நற்குணம் வாய்ந்த மணமகனைத் தேடுகின்றனர்.
மேலதிக விபரங்களுக்கு: B.Ravindran
Ammerudgrenda-174,
Leil-780, 0960 Oslo, Norway.
**Tel: 22160507**



## போட்டோ பாலா

★ மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வுகளையும் கணினி மூலம் நவீன முறையில் நிழற்படம் பிடித்துக்கொள்ளவும்.
★ உங்கள் நிழற்படங்களைப் பாதுகாப்பான முறையில் CD க்களில் பதிவு செய்துகொள்ளவும்
மார்கடே பொவசொனியரில் 'போட்டோ பாலா'
★ Film Roll களை இங்கே 20 பிராங்குகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
**Photo Bala**
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.55.12.39




## அருளகம் போட்டோ



உங்கள் மங்கலகரமான நிகழ்வுகள் யாவற்றையும் அதிநவீன முறையில்- துல்லியமாக டிஜிட்டல் தரத்தில் படம் பிடித்துக்கொள்ளவும், உங்கள் பழைய நெகட்டிவ்களை சிடி யில் தெளிவாகப் பதித்துக் கொள்ளவும் நாடுங்கள் **அருளகம் போட்டோ**
தேர்ச்சிபெற்ற படப்பிடிப்பாளர்கள்
*S.Suri*
*Tel: 0208-640 4333 - Mobile: 079 7405 3565*
உங்கள் சிறப்புத் தெரிவுகளை மட்டுமே நாங்கள் பிரதிசெய்து தருகின்றோம்.


## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11.05.1959
உதிர்வு: 23.04.2000

**திரு.வேலையா சுப்பையா (செல்வம்)**
**திதி: 01.05.2002**

உங்களைத் தொலைத்தாலும்
உங்கள் உருவில் நினைவுச்,
சின்னமாய் தந்த நம் செல்வமகளின்
பாசத்தையும் சுமக்கின்ற என் இதயம்,
வண்ணக் கனவுகளாய் நாள்தோறும்
உங்களுடனே வாழும்,
எம் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுடனே சுவாசிக்கும்,
உங்களைத் தேடி யாசிக்கும்,
என்றும் தொலையாத நினைவுப் பூக்களுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி எஸ். பரமேஸ்வரி,
தாய், சகோதர, சகோதரி, மைத்துனர்மார்
05, Rue Mortinat, 92600 Asnieres.
01.40.86.17.39


## S.M.T. Tele Movie



உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் மற்றும் அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் சிறந்த முறையில் வீடியோவில் படம்பிடித்துக் கொள்வதற்கு நீண்ட காலம் படப்பிடிப்பில் அனுபவம் வாய்ந்தவர்களால் நவீன முறையில் கணினி (Computer) மூலம் உங்கள் இல்லங்களின் நிகழ்வுகளைப் பதிவு செய்து தருகின்றார்கள்.
தொடர்புகளுக்கு: 01 34 68 55 31 / 06 13 07 68 30



## Suramya Krishnakumaran llm solicitor

- Residental & Commercial Conveyancing
- Commercial Leases
- Partner ship agreements
- Employment contracts
- Licensing
- Franchising
- Cival Litigation
- Landlord & Tenant

உங்கள் தேவைகளை துரித கதியில் திருப்தியுடன் பூர்த்திசெய்து கொள்ள நாடுங்கள்
**Tel: 02072248110 Fax: 020 72249711 Mobile: 07960012209**
சுரம்மியா கிருஸ்ணகுமரன் LLM
Dhama Douglas
Solicitors
44 Seymour Place
London W1 5 WQ

அண்மையில் உள்ள
Tube Station:
**Marble Arch**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்புநிலை தோற்றுவிக்கப்பட்டு தடைநீக்கப்பட்ட பின்னரே பேச்சு!

## - நோர்வே அமைச்சரிடம் தேசியத் தலைவர் எடுத்துவிளக்கினார் -

சிறீலங்கா அரசு உறுதியளித்தபடி நல்லெண்ண நடவடிக்கைகள் பூரணமாக நிறைவேற்றப்பட்டு, தமிழர் தாயகத்தில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். இவையாவும் செம்மையாக நிறைவேற்றப்பட்டு சுமுகநிலை உருவான பின்னரே - ஜூன் மாத நடுப்பகுதியில் - தாய்லாந்தில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் என விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கடந்த புதனன்று தன்னைச் சந்தித்த நோர்வே அமைச்சர் தலைமையிலான குழுவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது. நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன், நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல் ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக்குழு புதன் காலை 9.15 மணியளவில் விசேட உலங்குவானூர்தியில் கிளிநொச்சி சென்றது.

அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் அடங்கிய புலிகளின் தலைமைப்பீடத்துடன் இக்குழு விரிவான பேச்சுக்களை நடத்தியது. போர்நிறுத்த விதிமுறைகளை நிறைவேற்றுவதில் சிறீலங்கா காட்டும் தாமதங்கள் குறித்து தலைவர் பிரபாகரன் நோர்வேக் குழுவினரிடம் கவலை தெரிவித்தார். புனித தலங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றில் இருந்து இராணுவத்தினர் இன்னமும் வெளியேற வில்லை என்பதை அவர் நோர்வேக் குழுவினருக்குச் சுட்டிக்காட்டினார்.

இது விடயத்தில் நோர்வேக் குழுவினர் தலையிட்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் சீராக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என



அவர் கேட்டுக்கொண்டார். வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பயணஞ்செய்யும் பொது மக்களின் எண்ணிக்கையை முகமாலையில் உள்ள படையினர் கட்டுப்படுத்தியும் மட்டுப்படுத்தியும் வருகின்றனர். இது ஒப்பந்தத்தை மீறும் செயல் என அவர் எடுத்துரைத்தார்.

தலைவர் பிரபாகரனினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக நோர்வேக் குழு உறுதியளித்தது என வன்னியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட ஆனையிறவு, கிளிநொச்சிப் பகுதிகளைச் நோர்வேக் குழு சுற்றிப்பார்வையிட்டது.

## மட்டு.நகரில் நோர்வே குழு ஒப்பந்தம் தொடர்பாக ஆராய்வு

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடாஹெல்கசன், சமாதான அனுசரணையாளர் எரிக் சொல் ஹெய்ம், நோர்வே சமாதானத் தூதுவர் ஜோன் வெஸ்போன் ஆகியோர் கடந்த வாரம் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளனர்.

இக்குழுவினரை மாவட்ட செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப்பரராஜசிங்கம், த.தங்கவடிவேல், ஞா. கிருஸ்ணபிள்ளை, எம்.எல்.ஏ. ஹிஸ்புல்லா, அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் அ.செல்வேந்திரன், வர்த்தக சங்கத் தலைவர் இராஜன்சத்தியமூர்த்தி, மற்றும் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள், மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் சந்தித்துச் சமாதான உடன்படிக்கை தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களில் வணக்கஸ்தலங்களில் இருந்து படையினர் 30 நாட்களுக்குள் வாபஸ் பெறப்பட வேண்டும் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், படையினரது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான வகையில் படை முகாம் அமைந்துள்ள தனியார் வீட்டு உரிமையாளர்களிடம் வீட்டில் தொடர்ந்து இருப்பதற்கான ஒப்புதல் கடிதங்களைக் கட்டாயப்படுத்தி பெற்றுவருகின்றனர் என்பதுடன், மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ்சாலைகளில் இராணுவ முகாம் அண்டிய வீதிகள் உப வீதிகளாகவே உள்ளன இதனை மீண்டும் திறந்துவிட வேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கோரிக்கைகள் அனைத்தையும் கவனமாகச் செவிமடுத்த நோர்வேக் குழுவினர் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தனர். நோர்வே குழுவினர் கருத்துத் தெரிவிக்கையில் தற்போது அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக ஆராயும் பொருட்டே தாம் மட்டக்களப்பிற்கு வருகை தந்ததாகக் கூறினார். இச்சந்திப்பின் பின் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நோர்வேக் குழுவினருடன் கலந்துரையாடினர். விடுதலைப் புலிகளிற்கும் அரசுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சு வார்த்தையின்போது முஸ்லிம்கள் சார்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்துகொள்ளும் விடயம் குறித்து அமைச்சர் றவூப் ஹக்கீம் நோர்வேயின் வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் விடாஹெல்கெசனிடம் தெளிவுபடுத்தியுள்ளார். இச்சந்திப்பின் போது றவூப் ஹக்கீம் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக விரிவாக விளக்கியதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் இருதரப்பினரிற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் நடவடிக்கைகளைப் பற்றி நோர்வே வெளி விவகார அமைச்சிடம் றவூப் ஹக்கீம் தெளிவுபடுத்தியுள்ளார்.

## தலைவர் பிரபாவுடன் றவூப் ஹக்கீம் செய்த ஒப்பந்தத்தில் எந்தப் பயனும் இல்லை! – *சிஹல உறுமய சீற்றம்*

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முன்வந்துள்ள போதும், ஈழக் கோட்பாட்டை அவர்கள் கைவிடவில்லை எனவும் புலிகளின் நோக்கம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஈழ இராட்சியம் ஒன்றை நிறுவுவதே எனவும் சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக்கருணாரத்தின கொழும்பில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்கனவே புலிகள் இயக்கத்திற்கு இடைக்கால நிர்வாகமுறை ஒன்றே கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார் இந்த ஒப்பந்தத்தின் மூலம் புலிகள் இயக்கத்திற்குச் சாதகமான நிலையொன்றே உருவாகியிருப்பதாகத் தெரிவித்த சிஹல உறுமயவின் தலைவர், தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் மூலம் எதுவித பலனும் ஏற்படும் என்று தாம் கருதவில்லை என்றர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வசித்தபின்னர் அகதிகளாய் உள்ள சிங்கள மக்கள் பற்றி அரசாங்கம் எதுவித கவனமும் செலுத்தவில்லை என்றும் வடக்குக் கிழக்குப் பகுதியில் 148,000 சிங்கள மக்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளார்கள். அவர்கள் தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கை பற்றி அரசாங்கம் உறுதியான அறிக்கையொன்றை வெளியிட வேண்டும், என்றும் அவர் கேட்டுள்ளார்.

## எமது படைபலத்தினால் பெற்ற வெற்றியை முழு உலகுக்கும் உணர்த்தியிருக்கிறோம்

### – வாழைச்சேனை வரவேற்பில் விசு பேச்சு

‘கடந்த காலங்களில் போரினால் பெற்ற எமது படைபலத்தின் வெற்றியை அரசுக்கு மட்டுமன்றி சர்வதேச சமூகத்திற்கும் நிரூபித்துள்ளோம். ஆனால் போரினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முன்வந்திருக்கிறோம்’ என்று மட்டக்களப்பு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசியல் துறை பொறுப்பாளர் விசு தலைமையில் வருகைதந்திருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் புதன்கிழமை மாலை வாழைச்சேனையில் பொது மக்களினால் மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது.

வாகரையிலிருந்து சென்ற இவர்கள் மைலங்கரச்சையில் வைத்து பொதுமக்களால் வரவேற்கப்பட்டு ஓட்டமாவடி ஊடாக வாழைச்சேனைச் சந்தி வரை அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து நகர வீதி ஊடாக பாண்ட் வாத்தியத்துடன் பொதுவிளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்பு அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

GLENMORE PROPERTY SERVICES LTD

Sales | Lettings | Management | Mortgage advice

எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்

You have tried the rest, now come to the best

810 Harrow Road, Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040

website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5229

your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

Pub.Lon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் ஏற்றால் பல மாற்றங்கள் வரும் - யாழ். வணிகர் கழகத்தில் இளம்பரிதி

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் கையேற்றால் மக்களின் முன்னேற்றகரமான வாழ்வுக்கான பல விடயங்களில் மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். என யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ். வணிகர் கழக அலுவல்கத்தில் நேற்று இடம்பெற்ற வணிகர் கழகங்களினது நிர்வாகசபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் தெரிவித்தார்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் உட்பட அனைத்து வணிகர் கழகங்களினதும் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

'புலிகளுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள உறவு தாய்க்கும் சேய்க்கும் இடையேயுள்ள உறவு போன்றது என வர்ணித்த இளம்பருதி, புலிகளின் போராட்டம் மக்கள் போராட்டமே. எனவே வர்த்தகர்களாகிய நீங்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். உங்களுக்கென்று ஒரு கொள்கை உணர்வு இருக்கவேண்டும். உங்கள் செயலும் சொல்லும் ஒன்றாக இருக்கவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

பொருள்களுக்கான வரி அறவிடுதல் பற்றிக் கருத்து வெளியிட்ட அவர், எமது மக்களையே இந்த வரிச்சுமை அழுத்துகிறது, படிப்படியாக அதனைக் குறைக்கவே எண்ணியுள்ளோம். எதிர்காலத்தில் அதனை முற்றாக நிறுத்துவதற்கான எண்ணமும் எமக்கு உள்ளது எனக் கூறினார்.

இக்கலந்துரையாடலில் பல்வேறு வணிகர் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 150 உறுப்பினர்கள் வரையில் கலந்துகொண்டு தமது எதிர்கால நடவடிக்கைகள், கடந்த கால செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடினார்கள்.

# ஏ_9 பாதையூடாக 1,500 பயணிகளுக்குகே அனுமதி!

## - இராணுவத்தின் புதிய கெடுபிடி முயற்சி -

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை சோதனை நிலையம் ஊடாகத் தென்பகுதிக்குச் செல்வதற்கு நாளைமுதல் ஆயிரத்து ஐநூறு பயணிகளே அனுமதிக்கப்படுவர் என்று யாழ். இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி திறக்கப்பட்ட ஏ-9 கண்டி வீதியில் முகமாலைச் சோதனைச்சாவடி ஊடாக குடாநாட்டுக்குள் பிரவேசிக்கும் மக்களின் எண்ணிக்கையும் வன்னிப் பகுதிக்குச் செல்லும் மக்களின் எண்ணிக்கையும் கடந்த சில தினங்களாக அதிகரித்துக் காண்பதோடு சில தினங்களில் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் இந்தச் சோதனைச்சாவடியூடாகப் பயணத்தை மேற்கொள்வதால் பயணிகள் யாவரையும் சோதனை செய்வது சிரமமாக இருக்கின்றது. இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக இராணுவம் கருதுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு பயணத்தை மேற்கொள்வதற்குச் சமூகமளிக்கும் பயணிகள், தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதைத் தவிர்க்கும் முகமாக நாளொன்றுக்கு ஆயிரத்து 500 பயணிகளை மட்டும் குடாநாட்டுக்குள் பிரவேசிக்கவும் குடாநாட்டில் இருந்து வெளியேறவும் அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவிப்பு குடாநாட்டில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இது போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் செயலாகும்.

# தமிழ்க் கைதிகள் பற்றி மூவர் குழு ஆராய்வு!

## சிறீலங்காச் சட்டமா அதிபர் விளக்கம்

'பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளைக் கைவிடுவது குறித்து ஆராய சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது'. எனச் சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நிலைமை பற்றிச் சட்டமா அதிபருடன் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா பேசினார். அதனையடுத்தே அமைச்சருக்குச் சட்டமா அதிபர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்குப் பொறுப்பான அரச சட்டத்தரணியை இந்தக் குழு அழைத்துப் பேசும். சந்தேக நபர்கள் தொடர்பான ஆவணங்களையும் குழு பரிசீலிக்கும்.

# பயணத்தை இலகுவாக்க உள்நுழைவு அனுமதிப்பத்திரம்

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்களுக்கு உள்நுழைவு அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்ட பின்னர் பயணிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இலகுவாக்கும் நோக்குடன் புதிய நடைமுறை ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நடைமுறைப்படி - யாழ்ப்பாணத்திலிருந்து செல்வோருக்கு முகமாலை சோதனை நிலையத்தில் வைத்து உள்நுழைவு அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவர்கள் வன்னிக்குள் சென்று திரும்பும்போது முகமாலையில் அந்தப் பத்திரத்தை மீள ஒப்படைக்க வேண்டும்.

வவுனியாவுக்குச் செல்பவர்கள் ஓமந்தைச் சோதனை நிலையத்தில் அந்த அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்து விட்டு மேற்கொண்டு பயணிக்கலாம். ஐந்து நாள்களுக்கு மேல் வன்னியில் தங்கிவிட்டு வவுனியா, கொழும்புக்குச் செல்ல விரும்புவோர் வன்னியில் உள்ள வழமையான நடைமுறைப்படியே அனுமதி பெற்று பயணத்தை மேற்கொள்ள முடியும்.

வன்னியில் ஐந்து நாள்களுக்கு மேல் தங்கிவிட்டு யாழ்ப்பாணம் திரும்புவோர் உள்நுழைவு அனுமதிப்பத்திரத்தை முகமாலையில் கையளித்து விட்டுப் பயணத்தைத் தொடரலாம். இந்த உள்நுழைவு அனுமதிப்பத்திரத்துக்குக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

# தென் தமிழீழம் சிங்கள மேலாதிக்கத்தில் உள்ளதாக சந்திரிகா விபரிப்பு

வடக்கு-கிழக்கு இடைக்கால சபையில் சகல இனங்களின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார்.

சிறீலங்கா ஜனாதிபதியின் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் செய்தியாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதியின் இத்தகவலை அவர் வெளியிட்டார். ஓர் இடைக்கால சபையானது நாட்டின் சகல இனமக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் எனவும், கிழக்கு மாகாணம் கூடுதலாக சிங்கள மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் மேலாதிக்கத்தில் இருப்பதால் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை இந்த இரு சமூகத்தவர்களினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் எனவும் சந்திரிகா விரும்புகின்றாராம்.

ஓர் இடைக்கால நிர்வாக சபையானது சமாதான நடவடிக்கையின் முதற்படி மட்டுமே. இந்தச் சபையை அமைக்க, முன்னர் முயற்சி எடுக்கப் பட்டபோதும் அது பயனளிக்கவில்லை. இதன் காரணமாக இந்த விடயத்தை அணுகும்போது அதனால் எழக்கூடிய பின் விளைவுகள் பற்றி நன்றாகச் சிந்தித்து மிக நிதானமாக அணுக வேண்டுமென ஜனாதிபதி' அரசாங்கத்திற்கு முன் எச்சரிக்கை செய்துள்ளார் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

# மீண்டும் தீவகத்தில் கொடிகள் அறுப்பு! இரவுவேளை சீருடையினர் அட்டகாசமாம்!

விடுதலைப் புலிகளை வரவேற்று தீவகத்தில் கட்டப்பட்டிருந்த பதாகைகளையும் சிவப்பு மஞ்சள் கொடிகளையும் அறுத்தெறிந்தும் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தை உடைத்தெறிந்தும் இனந்தெரியாத குழுவினர் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

நள்ளிரவு 11.45 மணியளவில் 'பிக்கப்' வாகனம் ஒன்றில் சீருடையில் வந்தவர்களே இத்தகைய அடாவடித்தனங்களில் ஈடுபட்டதாகத் தீவுப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வேலணைத்துறையூர், புளியங் கூடல், பொன்னாச்சி கடைச்சந்தி, நாரந்தனை, ஊர்காவற்றுறைச் சந்தி போன்ற இடங்களில் கட்டப்பட்டிருந்த பதாகைகளும் கொடிகளுமே அறுத்தெறியப் பட்டுள்ளன. அத்துடன் அறுத்தெறிந்தபாதகைகளை அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

சின்னமடுச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த தலைவர் பிரபாகரனின் உருவப்படம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் கட்டப்பட்டிருந்த பொங்குதமிழ் பதாகைகளும் அறுக்கப்பட்டுள்ளன. இந்த அடாவடித்தனங்கள் குறித்து தீவுப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் அங்கு ஒருவித பதட்டமான சூழலும் நிலவுகின்றது.

இதற்கிடையில் - அண்மையில் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்ட வேலணை - வங்களாவடி வீதி மீண்டும் மூடப்பட்டுள்ளது. 'வீதித் தடை செய்யப்பட்டுள்ளது' என்று அறிவித்தல் பலகை வீதியில் குறுக்காக வைக்கப்பட்டுள்ளது.




S.K. Rajan Jewellers

24, Rue Perdonnet,
75010 Paris.
தொடர்புகளுக்கு:
Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN
M°: La Chapelle / Gard du Nord

Carte Téléphonique Prépayées

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22Kஇல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

எஸ். கே. ராஜன் ஜுவலர்ஸ்

சகல நாடுகளுக்கும் துரிதகதியில் இணைப்பை ஏற்படுத்தும் தொலைபேசி அட்டைகளையும் மலிவு விலையில் (85F) இங்கு பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளைத் தென்பகுதிகளுக்கு அனுப்ப வாய்ப்புண்டு, வசதி இல்லை.

## — யாழ். மீனவர் சங்கத் தலைவர் கவலை

குடாநாட்டில் இருந்து கடலுணவு வகைகளை ஏ-9 தரை வழிப் பாதையூடாகத் சிறீலங்காவுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள போதும், அவற்றை உடனடியாக எடுத்துச்செல்லக்கூடிய ஆரம்பவசதிகள் எதுவும் இல்லை என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் .களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

தினமும் குடாக்கடலில் பிடிக்கப் படும் கடலுணவுகளைப் பதப்படுத்தி தென்பகுதிக்கு அனுப்பிவைப்பதற்கான குளிரூட்டி வசதிகள் எதுவும் இல்லை எனவும், முன்பு செயற்பட்டு வந்த 15 தொன் 'ஐஸ்' உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை யுத்தம் காரணமாக முற்றாகச் சேதமடைந் திருப்பதே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொங்குதமிழில் பங்குபற்றிய தீவக மக்கள் மீது கடற்படை கெடுபிடி !

'பொங்குதமிழ்' நிகழ்வில் பங்கு பற்றிவிட்டு தீவகம் திரும்பிக்கொண்டிருந்த பொதுமக்கள் மீது அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் கடற்படையினர் கடும் கெடுபிடிகளை மேற்கொ-ண்டனர்.

நிகழ்வில் பங்குபற்றிய தீவுப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களில் சுமார் 300 பேர் தமது இருப்பிடங்களுக்குச் செல்வதற்காக வாகனங்களில் சென்றனர். அவர்களை அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் கடற்படையினர் தடுத்து நிறுத்தினர். அனைவரும் கடும் சோதனை-க்கு உட்படுத்தப்பட்டனர்.

பொதுமக்கள் எடுத்துச்சென்ற தலைவர் பிரபாகரனின் உருவப் படங்கள், பதாகைகள் என்பனவற்றை கடற்படையினர் சேதமாக்கி வீசினர். அவற்றை வைத்திருந்த சிலர் நையப்புடைக்கப் பட்டனர்.

சிலர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். பொங்குதமிழ் நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக யாழ்ப்பாணம் நோக்கிவந்த பொதுமக்கள் கூட கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

# மட்டு.கைதிகளின் உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது !

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இரண்டு தினங்களாகத் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் அமைச்சர் றவூப் ஹக்கீமின் உறுதிமொழியை அடுத்து கைவிடப் பட்டது.

விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், வழக்குகள் உடன் விசாரணை-க்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனக்கோரி கடந்த 17ம் திகதி முதல் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் 31 தமிழ் அரசியற் கைதிகள் நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

அவர்களை பாராளுமன்ற உறுப்பினர் ஞாகிருஷ்ணபிள்ளை உண்ணாவிரதக் கைதிகளை நேரில் சென்று பார்வையிட்ட போது நாங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடமாட்டோம், தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது விடுதலைக்காகக் குரல் கொடு-க்க வேண்டும், எங்களைப் பார்ப்பதற்கு அரசியல்வாதிகள் மறந்துவிட்டார்கள் எனக் காரசாரமாகச் சிறைக்கைதிகள் கூறினர்.

இதனையடுத்து மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை மட்டு. நகருக்கு வருகை தந்திருந்த அமைச்சர் றவூப் ஹக்கீமுடன் சிறைச்சாலையிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அமைச்சர் ஹக்கீமைச் சிறைச் சாலைக்கு வரவழைத்தார்.

உண்ணாவிரதமிருந்த சிறைக் கைதிகளுடன் உரையாடிய அமைச்சர் றவூப் ஹக்கீம் தாம் ஒரு மாதத்தினுள் சட்டமா அதிபரைத் தொடர்புகொண்டு வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதாகவும் உறுதியளித்தார்.

# எதிர்ப்பு ஊர்வலத்துக்கு ஜே.வி.பி. முஸ்தீபு

நான்கு கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அலரி மாளிகைக்கு எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப் போவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படவுள்ள ஜே.வி.பி. யினர் அலரி மாளிகைக்குச் சென்று அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதமொன்றைக் கையளிக்கவுள்ளனர்.

வட-கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்க கூடாது. விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு இரத்துச் செய்யவேண்டும் என அரசாங்கத்தைத் தாங்கள் வலியுறுத்தப் போவதாக ஜே.வி.பி. எம்.பி. விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

# விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் முஸ்லிம்கள் தொழில்

விடுதலைப் புலிகளும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசும் வன்னியில் ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வயல் பிரதேசங்களுக்குப் பெருந் தொகையான முஸ்லிம்கள் சென்று வருகின்றனர்.

கடந்த 12 வருடங்களுக்குப் பின்னர் முஸ்லிம்கள் தமது வயல் நிலங்களுக்குச் சென்றுவருவதுடன் பெரும்போகச் செய்கையை மேற்கொள்ளுவதற்கான வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கிரான், பாலம், செங்கலடிக் கறுத்தப்பாலம், வலையிறவு பாலம், மண்முனைத்துறை ஆகிய பாதைகள் ஊடாகப் பெருந்தொகையான முஸ்லிம்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்கின்றனர்.


## உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலையை விடுங்கள்

இதோ புதிய திருத்தியமைக்கப்பட்ட வடிவத்தில்
ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

**Naturina®**



**முடி உதிர்வு, மெல்லிய முடி, இளநரை, முடிவளர்ச்சி நிறுத்தம், முடியின் வெடிப்புத் தன்மை, பளபளப்பற்ற முடி, நகங்கள் விரைவில் உடையும் தன்மை, கணைவெடிப்பு, போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி !**

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வைத் தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

**இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.**

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.




**இதோ நிவாரணம் அளிக்கின்றது**

ஜேர்மனியில் புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வடிவில்

**Naturina®** *இக்குறைபாடுகளை 3 மாதங்களுக்குத் தொடர்ந்து தினமும் பாவிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.*

**உங்கள் தோலுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களையும் கனியுப்புக்களையும் வழங்குகிறது.**

**Naturina®**

**மேலும் உங்கள் தோல் வரட்சித் தன்மையாகவோ அல்லது எண்ணெய்த்தன்மை கூடியதாகவோ அல்லது மெதுமையான நகங்களுக்கு விரைவில் உடையும் நகங்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது**

**Naturina®** கூட்டுக்குளிகைகள்.

**Naturina®** வால் நிவாரணம் அடைந்த பலர் தினமும் கடித மூலமும் தொலைபேசி மூலமும் எம்மைப் புகழ்ந்துகொண்டே இருக்கின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Nassauer str 33-37, 59065 Hamm-Germany
Tel: 0049 1805 915910 / Fax: 0049 1805 915920
Internet: www.naturina.de

சுவிசில் தொடர்புகளுக்கு:
**Euro Boutique**
Bubernberg Platz 8,
3011 Bern.
Tel. and Fax: 031 3118604

எங்களுடன் தமிழில் மாலை 15.00 மணி முதல் 18.00 மணி வரை தொடர்புகொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறார்கள், போகிறார்கள், எதையும் செயற்படுத்துவதில்லை

## - சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு -

'நான் சிறிய பையனாக இருந்தபோது அன்றைய நீர்ப்பாசன அமைச்சராக தொண்டமானாறு நன்னேரித்திட்டத்தைப் பார்வையிட்டுச் சென்றார். அவர் சென்று 35 வருடங்களாகியும் இத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. குடாநாட்டுக்கு அமைச்சர்கள் வருகிறார்கள். போகிறார்கள். ஆனால், அவர்களால் எதனையும் இங்கு செயற்படுத்துவதில்லை. எனவே இது மாறவேண்டும் அமைச்சர்கள் செயலில் காட்டவேண்டும்' என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணம் கச்சேரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகளின் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்த நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா, சிறு தொழில் அபிவிருத்தி கைத்தொழில் விவகார அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, நீர்ப்பாசன அமைச்சர் எச்டிஜீ. நெல்சன் நீர் முகாமைத்துவ அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்ன ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேலும் பேசுகையில், 'இங்கு வருகிற அமைச்சர்கள் வந்தோம் பார்த்தோம் என்று சொல்லாமல் இங்குள்ள தமது திணைக்களங்கள், மற்றும் அபிவிருத்திகளுக்கு நிதி ஒதுக்கிச் செயற்படுமாறு வேண்டுகிறேன். போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை நேரடியாகவே காணவந்துள்ள அமைச்சர்கள் அதனை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்' என்றார்.

# களுத்துறைக் கைதிகளின் உண்ணாவிரதம் முடிவு

களுத்துறை சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவந்த தமிழ்க் கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர். சட்டமா அதிபரின் சார்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜியன்னி அரச குலரட்ண சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டு கைதிகளுக்கு வழங்கிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் தம்மீதான விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரி 8 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்தக் கோரிக்கை இன்னும் மூன்று மாதத்துக்குள் நிறைவேற்றப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபரால் உறுதிமொழி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக விரைவில் முடிவு?

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் கருணை மனு தொடர்பாக இந்திய அரசு விரைவில் முடிவெடுக்கவுள்ளது. அந்தக் கருணை மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இந்திய அரசு புதன்கிழமை முடிவு செய்தது.

ராஜீவ் கொலை வழக்கில் 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து கடந்த 1998 ஜனவரி 28 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. இது தொடர்பாக மேல்முறையீடு செய்யப்பட்டது. நளினி, முருகன், பேரறிவாளன், சின்னசாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை 1999 மே 11 ஆம் திகதி உறுதி செய்த நீதிமன்றம் மற்றவர்களை விடுவித்தது.

அதே ஆண்டு நவம்பர் மாதம் வேலூர் சிறையில் அவர்களைத் தூக்கிலிட திகதி முடிவு செய்யப்பட்டது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தமிழக ஆளுநரிடம் கருணை மனுக் கொடுத்திருப்பதால் அதன்மீது முடிவு எடுக்கப்படும் வரை தூக்குத்தண்டனையை நிறுத்திவைக்கக் கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதையடுத்து தண்டனையை நிறைவேற்ற நீதிமன்றம் தடை விதித்தது.

கருணை மனுவை ஆளுநர் பரிசீலித்து நளினியின் தண்டனையை மட்டும் ஆயுள் தண்டனையாகக் குறைக்க ஒப்புதல் அளித்தார். ஆனால் அமைச்சரவையின் ஆலோசனையைப் பெறாமல் ஆளுநர் தன்னிச்சையாக முடிவெடுக்க உரிமையில்லை என நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதையடுத்து புதிதாக மனுச் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. அந்த மனுக்களை ஆய்வு செய்த கருணாநிதியின் அமைச்சரவையும் நளினியின் தண்டனையை மட்டும் குறைத்து மற்றவர்களின் தூக்குத் தண்டனையை உறுதி செய்து பரிந்துரைத்தது.

ராஜீவ்காந்தியின் மனைவியும் காங்கிரஸ் தலைவியுமான சோனியா காந்தியும் தண்டனையைக் குறைக்க ஆதரவு தெரிவித்தார். பிறகு 2000 ஏப்ரல் ஜனாதிபதிக்கு குற்றவாளிகள் கருணை மனு அனுப்பினர். அந்த மனுக்களை மத்திய அரசுக்குப் பரிந்துரைத்தார் ஜனாதிபதி. ஆனால் நடவடிக்கை எடுக்காமல் அப்பரிந்துரை கிடப்பில் போடப்பட்டது.

இப்போது இலங்கைப் பிரச்சினை மீண்டும் பரபரப்பு அடைந்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சு நடப்பதற்கான ஏற்பாடுகள் தொடங்கியுள்ளன. பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவரக் கோரி தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் கருணை மனு குறித்து முடிவெடுக்குமாறு சர்வதேச அளவிலும் இந்திய அரசுக்கு நெருக்குதல் வருவதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து இரு ஆண்டுக்குப் பிறகு இந்தக் கருணை மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மத்திய அரசு புதன்கிழமை முடிவு செய்தது. உள்துறை அமைச்சகத்தில் இந்த மனுக்கள் தொடர்பாக சட்ட ஆலோசனை பெறப்படும். பின்னர் மத்திய அமைச்சரவை பரிசீலித்துத் தனது கருத்தை ஜனாதிபதிக்கு அனுப்பும். இறுதியாக ஜனாதிபதி தனது முடிவை அறிவிப்பார்.

# தடை நீக்கப்படுவதால் சர்வதேச ரீதியில் பிரச்சினை எழமாட்டாது!

## - சட்டமா அதிபர் கமலசபேசன் சிங்களவர்களுக்கு உறுதிமொழி -

விடுதலைப்புலிகள் மீதான தடை உள்நாட்டில் நீக்கப்படுவதனால் சர்வதேச ரீதியில் பின்விளைவுகள் ஏற்படப்போவதில்லை எனச் சட்ட நிபுணர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

மேலும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, அமெரிக்கா மீதான பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து இரு தீர்மானங்களை முன்வைத்துத் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலை முன்வைத்தது. இப்பட்டியலில் விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை எனச் சட்டமா அதிபர் கமலசபேசன் அரசுக்கு சுட்டிக் காட்டியுள்ளார். எனவே விடுதலைப்புலிகள் மீதான தடையை உள்நாட்டில் நீக்குவது சர்வதேச ரீதியில் பிரச்சினையைத் தோற்றுவிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புளொட் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முயற்சி

புளொட் இயக்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள முயல்கின்றது. இது பற்றி புளொட் இயக்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இது சம்பந்தமாக உத்தியோகபூர்வமற்ற பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருப்பதாகக் கருதப்படுகின்றது. புளொட் இயக்கம் சென்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடமுயற்சித்தது இராணுவத்துடன் புளொட் இணைந்து செயற்பட்டு வருவதால் தமிழத் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகக் கூறப்பட்டது.

# ஒப்பந்தம் முஸ்லிம்களுக்கு நம்பிக்கை தருகிறது!

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீ முக்கும் இடையில் செய்துக்கொள்ளப்பட்ட உடன்பாடு எமக்கு நம்பிக்கையையும் மகிழ்சியையும் தருகிறது என மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதியமைச்சருமான எம்.எல். ஏம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நோர்வேத் தூதுக்குழுவினருடனான சந்திப்பினை அடுத்துக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய விதத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. எதிர்காலத்திலும் இந்நம்பிக்கையைத் தொடரவேண்டும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஐக்கியமாக வாழும் சூழல் ஏற்படுவதையிட்டு நான் மனமார பாராட்டுகிறேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

# முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து நோர்வேக்குழு ஜனாதிபதிக்கு விளக்கம்

நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கீசன் தலைமையிலான சமாதானத் தூதுக் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்து சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து விரிவாக விளக்கிக் கூறினர். நோர்வே பிரதியமைச்சருடன் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம், கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்றபோர்க் ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். ஜனாதிபதியுடன் வெளியுறவு விவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உடனிருந்தனர்.



'எப்பொழுதுமே மலிவு விலை'
ரதி ஜுவலர்ஸ்
28, Ealing Road, Wembley, Middx HA0 4TL
Tel: 020-2903 3063
Fax: 020-2903 9711
OPEN: 7 Days a Week
Mon - Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைப்பாதை போக்குவரத்தில் தடைக் கற்கள் ஏனோ?

அரசு- புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முன்னெடுப்பதில் காட்டப்படும் உறுதியில்தான் அமைதித் தீர்வுக்கான முயற்சிகளின் வெற்றி தங்கியுள்ளது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகளும், அரசுத் தரப்பும் செய்துகொண்டாலும் கூட, அதன் நன்மை - தீமை புலிப் போராளிகளுக்கும் அரசுத் துருப்புக்களுக்கும் மட்டும் உரியவையல்ல. முக்கியமாக பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

'முதலில் பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம், பின்னர் ஒரு நல்லெண்ணப் புறச் சூழ்நிலையில் அமைதித் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிப்போம்' என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தார்.

அதனடிப்படையில் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகவே புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்கள், பொதுமக்களின் நலன் என்ற நோக்கோடு வியாக்கியானஞ் செய்யப்பட்டு, அதனடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்படி நடைமுறைப்படுத்தப்படுவதுதான் சமாதான முயற்சிகளை வெற்றிகரமான திசையில் வழிநடத்த உதவும்.

இதைச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உணர்ந்து கொள்வது அவசியம். அமைதியையும் சமாதானத்தையும் உதட்டளவில் வலியுறுத்திக்கொண்டு அதற்கு முரணான செயல்களில் ஈடுபடுவது வெறும் அரசியல் நாடகமாகவே மக்களால் கணிக்கப்படும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏ-9 கண்டி வீதி ஊடான போக்குவரத்து முக்கிய விடயமாக அமைகின்றது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் மிக முக்கிய ஒன்றாக விளங்கிய போக்குவரத்துச் சிக்கல் தரைப்பாதைத் திறப்போடு தீர்ந்துவிடும் என்றே பலரும் நம்பினர்.

பலத்த ஆரவாரத்தோடு தரைப்பாதையும் திறந்தாகிவிட்டது. ஆனால், பொதுமக்கள் போக்குவரத்து கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலைமைதான்.

அரசு - புலிகள் இருதரப்பும் காலதாமதமின்றித் தங்களுக்குள் கலந்துரையாடி இந்தப் போக்குவரத்துச் சிக்கலிலுள்ள இடைஞ்சல்களையும், தடைகளையும் களைய முன்வரவேண்டும்.

நீண்ட பன்னிரண்டு ஆண்டுகள் - கால இடைவேளைக்குப் பின்னர் தரைவழிப்பாதை திறக்கப்பட்டிருப்பதால் தங்கள் உயிர் உறவுகளைப் பார்க்கவும் வேறு அத்தியாவசியப் பணிகளைப் பூர்த்தி செய்யவும் இப்பாதை ஊடாகப் போக்குவரத்துச் செய்ய பொதுமக்கள் முண்டியடிப்பர். இதன் காரணத்தை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இந்த மக்களைப் பயணஞ் செய்யவிடாது தடுப்பதை விடுத்து, அம்மக்களுக்குரிய போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதே வழமை நிலை திரும்புவதற்கு வழிசெய்யும் நடவடிக்கை ஆகும்.

முகமாலை ஊடாக குடாநாட்டுக்கும், குடாநாட்டிலிருந்தும் பயணம் செய்வோரின் எண்ணிக்கையை நெருக்கடி கருதி மட்டுப்படுத்துவதாக வடபகுதி இராணுவத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

இது 'சப்பாத்துக்கு அளவாகப் பாதத்தை வெட்டும்' வேலையே அன்றி வேறில்லை.

குடாநாட்டில் யுத்தம் புரிவதற்காகக் குவிக்கப்பட்ட நாற்பதாயிரம் துருப்புக்கள் இன்னும் அங்கு நிலை கொண்டு, தோள்தினவெடுத்த நிலையில் உள்ளன. முகமாலையில் விஸ்தீரணமான இடவசதியும் உண்டு.

இவற்றை வைத்துக்கொண்டு தினசரி ஒரு சில ஆயிரம் பயணிகளை கையாள முடியாதா? இந்த விடயத்தில் அதிக துருப்பினரை ஈடுபடுத்துவதில் என்ன நெருக்கடி? சமாதான காலத்தில் சமாதானப் போக்கைவளர்க்கும் நடவடிக்கைகளில் துருப்புக்களை ஈடுபடுத்தாமல் வேறு என்ன வேலைக்கு பயன்படுத்தப்போகின்றார்களாம்?

ஒருபுறம் மக்கள் போக்குவரத்துக்கு முண்டியடிக்க, மறுபுறம் சனி, ஞாயிறு, புதுவருடம், போயா என்று விடு முறை நாள்களைச் சாட்டுக்கூறி பாதையைத் தடைசெய்யும் கைங்கரியம் வேறு. முன்னர் அரச, வங்கி விடுமுறை நாள்களில்யுத்தம் புரியாமல் படையினர் வீட்டில் ஓய்வா எடுத்துக்கொண்டிருந்தார்கள் - இப்போது மட்டும் விடுமுறை கேட்பதற்கு?

விடுமுறை நாள்களில் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை வழங்காமல் அவர்களது வேலை நாள்களிலா அதற்கு அனுமதிப்பது?

அரசு- புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தப்படி கண்டி வீதி ஊடாகப் பொதுமக்களும், பொருள்களும் கட்டுப்பாடு, தங்குதடையேதுமின்றிப் போய்வர அனுமதிக் கப்படவேண்டும்.

அதைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது, புதிய விதிகளை விதிப்பது போன்றவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல்களாகும்.

அரசு-புலிகள் இருத்ரப்புமே மக்களின் நலன் என்ற கண்ணாடி ஊடாகவே இப்பிரச்சினையை நோக்க வேண்டும். அப்போதுதான் போக்குவரத்து சுமுக நிலைக்கு வரும்.

*(இவ்வாரம் இராணுவத்தின் புதிய பயணிகள் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்ட செய்தி தொடர்பாக யாழ். உதயன் ஏடு வெளியிட்ட கருத்துரைகள்)*

# எமது படைகளை, பலத்தைப் பாதுகாக்க நிதி சேகரிப்பைப் புலிகள் தொடர இருக்கின்றனர்

## - குடாநாட்டில் இளம்பரிதி அறிவிப்பு -

எமது படைகளைப் பராமரிப்பதற்காகவும் எமது நிலைகளைத் தக்கவைப்பதற்காகவும் நிதிசேகரிப்பைத் தொடரவிருக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி. கொக்குவில் பொற்பதி வீதியில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே தெரிவித்தார். கடந்த திங்கள் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான அலுவலகத் திறப்பு விழா நிகழ்வில் முதலில் மாவீரர் ஜொனியின் தந்தை ஈகச் சுடரேற்றினார். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை இளம்பரிதி ஏற்றிவைத்தார். போராளிகள் மலரஞ்சலி செலுத்தினர். அதன்பின்னர் சமயப் பெரியார்களும் பிரமுகர்களும் சுடரேற்றினர். மாவீரர் சுக்கிளாவின் தாயார் அலுவலகப் பெயர்ப் பலகையைத் திறந்துவைத்தார். அதைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார். யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் உபஅதிபர் க.சிவராமலிங்கம் தலைமையில் கூட்டம் இடம் பெற்றது.

'வலிகாமத்தைக் கைப்பற்றிய பின்னர் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை யாழ். நகரில் சிங்கக் கொடியை ஏற்றினார் அச்சமயம் அங்கு உரையாற்றிய அவர் 75 சதவீதம் புலிகளை அழித்து விட்டோம் என்றும் கூறியிருந்தார். பின்னர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர் சாவகச்சேரியில் கொடியேற்றிய சமயம் 85 சதவீத புலிகளை அழித்து விட்டோம் என்று அவரே மீண்டும் கூறினார்.

கடந்த 8ம் திகதி நாம் முகமாலை ஊடாக யாழ்ப்பாணம் வருவதற்காக எமது நிலைகளில் நின்று கொண்டிருந்தோம். அச்சமயம் அங்கு வந்த யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, முகமாலையில் நிற்கும் 18 விடுதலைப் புலி உறுப்பினர்களையும் உடனே அனுப்புங்கள். இங்கு உள்ள 85 சதவீத மக்களின் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று சொன்னார்.

மக்களின் எழுச்சி குடாநாட்டில் எந்தளவு இருக்கின்றது என்பதை நாம் அன்று கண்டோம். அவர்களின் எழுச்சிக்கு நாம் தலைவணங்குகின்றோம். எமது தலைவர் பிரபாகரன் ஒவ்வோர் பிரச்சினைக்கும் ஒவ்வோர் தீர்வு உண்டு என்று அடிக்கடி கூறுவார். ஒவ்வொரு கட்டங்களிலும் தலைவர் எடுத்த முடிவுகள் தேசியத்தைப் பலப்படுத்தியுள்ளன. தேசியப்பலம் பெருக தாயக நிலை வலுப்பெறும். தாயகநிலை வலுப்பெறும்போது சுயநிர்ணயம், வாழ்க்கைநிலை ஆகியன மேம்படும். இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை மேலோங்க வேண்டியது அவசியம். அதனடிப்படையிலேயே எமது அரசியல் நடவடிக்கைகள் அமையப் போகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு நாம் வந்தவுடன் புலிகள் ஆள்களைத் திரட்டுவார்கள், நிதிதிரட்டுவார்கள் என்று பேசுகிறார்கள். ஆட்களை நாம் திரட்டத் தேவையில்லை. எம்முடன் இணையத் தாமாகவே விரும்பிவருவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு போகின்றது. எம்மிடம் பட்டியல்கள் வந்துகுவிகின்றன. அத்துடன் பலர் நேரடியாகவும் வருகிறார்கள். அவர்களுக்கு அறிவியல் மற்றும் கல்வி சார்ந்த பயிற்சிகளை வழங்கத் திட்டமிடுகின்றோம். சர்வதேச நாடுகளுடன் போட்டிபோடக்கூடிய வல்லமையுள்ள சமூகமாக எமது இளம் சமூகத்தைக் கட்டி எழுப்பப்போகின்றோம். எமது படைகளைத் தொடர்ந்து பாதுகாக்கவும் நிலைகளை தொடர்ந்து தக்கவைக்கவும் எமது மக்களின் வளங்களிலேயே நாம் தங்கியிருக்க வேண்டியவர்களாக உள்ளோம். வன்னியிலும் வேறு இடங்களிலும் நிதி சேகரிப்பை மேற்கொண்டுள்ளோம். மக்கள் விரும்பாத வகையில் இந்த நிதிசேகரிப்பை நாம் மேற்கொள்ளவில்லை. எமது நிதி சேகரிப்பு தொடர்ந்து இடம்பெறும். எமக்குத் தேவையான வளங்கள் வேறுவழிகளால் கிடைக்கும்போது இந்த நிதி சேகரிப்பை நிறுத்திவிடுவோம்' என இளம்பருதி தெரிவித்தார்.

# தமிழீழத்தைப் பெறும் பிரபாகரனின் மறைமுக திட்டம் அரங்கேறப் போகிறது

## - ஜே.வி.பி. கூச்சல் -

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்துள்ள சமாதான உடன்படிக்கை மூலம் நாட்டு மக்களை அவர் அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார். பிரபாகரன் தமிழீழத்தை நேரடியாகக் கேட்காமல் இடைக்கால நிர்வாக மூலம் தமிழீழத்தைப் பெற்றுக் கொள்ளும் மறைமுகமான அவரது திட்டத்துக்குத் தற்போது நோர்வே மூலம் ரணிலில் ஆதரவுடன் அரங்கேறப் போகிறது.

என ஜே.வி.பி.யின் பரப்புரைச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ வியாழக்கிழமை கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

'தற்போதைய அரசியல் சூழ்நிலையும் ஜே.வி.பியின் நிலைப்பாடும்' என்ற தலைப்பில் நிப்போன் ஹோட்டலில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

இதற்கு அமெரிக்காவும் உறுதுணையாகச் செயற்படுகிறது எனக் குற்றம்சாட்டிய அவர், எமது அண்டை நாடான இந்தியா இதற்குத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இந்தியாவைப் பகைத்துக் கொண்டு நோர்வே மற்றும் மேற்குலக நாடுகளின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் பிரபாகரன் கேட்பவைகளைப் பிரதமர் ரணில் கொடுத்துவிட்டு தனது இலட்சியங்களை நிறைவேற்றவுள்ளார் எனக்கூறினார்.

சில மேற்குலக நாடுகள் ஊடுருவி நாட்டை இரண்டாகப் பிரித்து மக்களை அந்நியப்படுத்த உதவுகின்றன. இதன் முதற் கட்டமாக புரிந்துணர்வு ஒப்பந்தமும், அடுத்த கட்டமாக பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாடும் அமைகின்றன. இந்த நாட்டைக் கூறுபோடும் தமது நிலைப்பாட்டில் இருந்து விடுதலைப் புலிகள் சற்றும் விலகிக் கொள்ளவில்லை. அதேபோல, மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து சொந்த நாட்டைப் பாசிசவாதிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் ஐ.தே.முன்னணி அரசாங்கமும் மக்களை திசை திருப்பும் நடவடிக்கையாக இந்த சமாதானத்தைச் செய்துள்ளது. இது ஒரு போலி சமாதானமே. விடுதலைப்புலிகள் தமிழீழம், பாரம்பரிய தாயகம், பிரதேசம், சுய நிர்ணய உரிமை ஆகிய வற்றை இன்னமும் கைவிடவில்லை. அதே போல அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்காத நிலையில் இடைக்கால நிர்வாகத்தைக் கேட்டும், தம் மீதான தடைகளை நீக்கக் கோரியும் தமது பாஸிஸவாத அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றனர். அத்துடன் தமிழீழத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் பிரபாகரனே என்று சூளுரைத்துள்ளனர்.

பிரதமர் தனது அமைச்சர்களையும் பிரபாகரனிடம் அனுப்பி விடுதலைப்புலிகளுக்கு பந்தம் பிடித்து வருகிறார். போர் நிலவிய காலத்தை விட தற்போது பொய்யான சமாதானத்தின் மூலம் வடக்கு, கிழக்கில் பிரபாகரன் வெளிப்படையாக ஆட்சி செய்து வருகிறார். வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்றுவரும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்வதுடன் பிரபாகரனின் கட்டளைகளுக்கும் அடிபணிந்து செயற்படுகின்றனர்.

பிரபாகரன் அதிக அதிகாரம் பெற்றவர் போல இங்கு வந்து அவர்கள் கூறுகின்றனர். கொலைகார, பயங்கரவாத கும்பலான விடுதலைப்புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளைச் சில அமைச்சர்கள் மேற்கொள்கின்றனர். எமது கட்சியைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகளை யுத்தத்தின் மூலம் வெற்றி கண்டு அவர்களை தோல்வியடைச் செய்த பின்னரே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் போக வேண்டும். அப்போதுதான் இலங்கை ஒரே நாடாக சகல இனங்களும் சம அந்தஸ்துடன் வாழும் நிலையேற்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரச முயற்சிக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று சந்திரிகாவிடம் வாஜ்பாயும் சோனியாவும் வலியுறுத்த வேண்டும் - டாக்டர் ராமதாஸ்

சந்திரிகாவின் இந்திய வருகை பல்வேறு சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது. இருந்தாலும் சமரச முயற்சிக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று சந்திரிகாவிடம் பிரதமர் வாஜ்பாயும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் வலியுறுத்த வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கடந்த 16ம் திகதி பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 25 இலட்சம் ஈழத் தமிழர்களுக்கு வாழ்வுரிமை அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ள சமரச முயற்சிக்கு அது இடையூறு விளைவிக்கும் என்று பலத்த கண்டனம், எதிர்ப்புக்கு மத்தியில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்தநாளே சந்திரிகா இந்தியா வருகின்றார் என்று அறிவிக்கப்படுகின்றது. இந்தியத் தலைவர்களுடன் அவர் பேசும்போது பேரவைத் தீர்மானம் அவருக்கு ஒரு கூடுதல் ஆயுதமாகப் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை. ஜெயலலிதா முதல்வரானதும் மரபுகளை மீறி அவருக்குச் சந்திரிகா நீண்ட வாழ்த்துக் கடிதம் அனுப்பிவைத்தார். அதைத் தொடர்ந்து அவரது ஆலோசகர் சென்னைக்கு வந்து ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார். இப்போது டில்லி வருகின்றார். இவற்றை எல்லாம் பத்திரிகைகளில் படித்த மக்கள் என்ன நடந்திருக்கும்? பின்னணிகள் என்ன? என்பதை ஊகித்துத் தெரிந்துகொண்டிருப்பார்கள்.



தனது பதவிக்காலத்தில் இலங்கைத் தமிழர் பகுதிகள் மீது இராணுவத்தை அனுப்பி படையெடுத்து அவர்களது உரிமைப் போராட்டத்தை ஒடுக்கியவர் சந்திரிகா. உள்நாட்டுக்குள்ளேயே பொருளாதாரத் தடைகளை விதித்து இலங்கைத் தமிழர்களைப் பட்டினியால் சாகடித்தவர். இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான தாக்குலை 'அமைதிக்கான சண்டை' என்று வியாக்கியானம் செய்து உலகை ஏமாற்றியவர். தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்காமல் சண்டையை நடத்தி வந்தார். ஆனால் 'சாத்தான் வேதம் ஓதுகின்றது' என்பார்களே அதைப்போல் டில்லிக்கு வந்து 'ஜனநாயகமும் மோதலுக்கான தீர்வும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்ற வருகின்றார்.

'சமரசம் வேண்டாம் சண்டைதான் வழி' என்று இலங்கையில் போர்ப்பிரகடனம் செய்யும் சந்திரிகா, இலங்கைத் தமிழருடன் எந்த வகையிலும் சமரசம் செய்துகொள்ளாதீர்கள் என்று இன்றைக்கும் புதிய அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றார். சந்திரிகாவின் இரட்டை வேடத்தை பிரதமர் வாஜ்பாயும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் நன்றாகவே புரிந்து வைத்திருப்பார்கள். இலங்கையில் நடந்துவரும் நீண்டகால மோதலுக்கும் அப்பாவித் தமிழர்கள் பலியாகி வருவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்கள் தாயகம் திரும்பி சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும். இதற்காக, இப்போது இலங்கையில் தொடங்கியிருக்கும் பேச்சுவார்த்தைக்கு எந்த வகையிலும் முட்டுக்கட்டை போடக்கூடாது என்றும், பேச்சுமூலம் தீர்வு ஏற்படுவதற்கு உறுதுணையாக இருங்கள் என்றும் சந்திரிகாவிடம் வலியுறுத்தும்படிக் கோரி வாஜ்பாய், சோனியா காந்திக்குத் தந்தி அனுப்பியுள்ளேன்.

டில்லியில் வாய்ப்புக் கிடைத்தால் பா.ம.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் சந்திரிகாவை நேரில் சந்தித்து இது பற்றி வலியுறுத்தும்.

*(சந்திரிகாவின் இந்திய விஜயம் குறித்து பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை)*

# நான் வலிமை பெறுவதைக் கண்டு இந்தியா அச்சப்படுகிறது - முஷாரப்

ஜனாதிபதிப் பதவியில் மேலும் 5 ஆண்டுகள் நீடிப்பதற்கான கருத்துக்கணிப்பில் தான் வெற்றிபெற்று வலிமை பெறுவதைக் கண்டு இந்தியர்கள் அச்சப்படுகின்றனர் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் பாகிஸ்தானின் 'தி நியூஸ்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். எல்லையில் ஏற்பட்டுள்ள பதட்டம் இந்தியா தனது துருப்புக்களை வாபஸ்பெற்றால்தான் தணியும் என்றும் தெற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதட்டத்திற்கு இந்தியாவே காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். அதிபர் பதவியில் நீடிப்பது தொடர்பாக கருத்துக்கணிப்பு நடாத்துவது குறித்து இந்தியத் தரப்பில் கடும் விமர்சனம் செய்யப்படுவதாகவும் தனது செல்வாக்கைக் குறைக்கவும் பாகிஸ்தான் வலிமையான நாடாவதைத் தடுக்கவும் இந்தியா முயல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அது ஒருபோதும் வெற்றிபெறாது என்று குறிப்பிட்ட முஷாரப் கருத்துக் கணிப்பு நடாத்துவதில் அரசியல் சட்டமீறல் ஏதும் இருப்பதாகத் தான் கருதவில்லை என்றும் இது தேர்தல் இல்லை என்றும் ஜனாதிபதிப் பதவியில் இருப்பதற்கான ஒப்புதலைப் பெறும் பொதுக் கருத்துக்கணிப்பு என்றும் கூறியுள்ளார்.

ஒக்டோபர் பொதுத் தேர்தலுக்குப் பின் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் சட்டவிதிகள் பின்பற்றப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க.வினர் மீது பொய்வழக்கு

## - சென்னையில் மேயர் ஸ்டாலின் உண்ணாவிரதம்



தி.மு.க.வினர் மீது அ.தி.மு.க. அரசு பொய் வழக்குகளைப் போட்டுக் கைதுசெய்யும் நடவடிக்கையைக் கண்டித்துச் சென்னையில் வரும் 23 ஆம் திகதி சென்னை மேயரும் தி.மு.க. இளைஞரணிச் செயலாளருமான மு.க.ஸ்ராலின் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்துகிறார். சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே இந்தப் போராட்டம் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியச் செய்திகள்

# கருணாநிதிக்கு உலகத் தமிழ் செம்மல் விருது

20.04.2002 கருணாநிதிக்கு 'உலகத் தமிழ் செம்மல்' விருது மே மாதம் இரண்டாம் திகதி நடக்கவிருக்கிற உலகத் தமிழ் மாநாட்டில் வழங்கப்படவிருக்கிறது. பன்னாட்டுத் தமிழுறவு மன்ற வெள்ளி விழாவையொட்டி 5-வது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் மாநகர் சாலையில் உள்ள கல்லூரி விடுதியில் அடுத்த மாதம் 2ம் திகதி தொடங்குகிறது. அன்று மாலை 5.30 மணிக்கு மாநாட்டு தொடக்க விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் கலந்து கொண்டு மாநாட்டைத் தொடங்கி வைக்கிறார். மாநாடு தொடர்ந்து 5ஆம் திகதி வரை நடக்கிறது.

மாநாட்டையொட்டி கருத்தரங்கம், கவியரங்கம், ஆய்வரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாநாட்டையொட்டி 4ம் திகதி ஆயிரக்கணக்கான பேர் கலந்து கொள்ளும் பேரணி நடக்கிறது. அன்று காலை திருக்குறள் அறிஞர்கள் 10 பேருக்கு விருதுகள் வழங்கப்படுகிறது.

அன்று மாலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு உலக தமிழ் செம்மல் விருது வழங்கப்படுகிறது. 5ம் திகதி மாலையில் மாநாட்டு நிறைவு விழா மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நடக்கிறது. 100 தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள். மாநாட்டில் மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, தெ. பொ. மீனாட்சி சுந்தரம், டாக்டர் மு. வரதராசனார், வ.சுப.மாணிக்கம், கார் மேகனார், ஔவை துரைசாமி ஆகியோரின் படத் திறப்பு விழா நடக்கிறது.

இவர்களது படங்களைத் தமிழ் அறிஞர்கள் திறந்து வைக்கிறார்கள். சிங்கப்பூரிலிருந்து தமிழ் அறிஞர் சிங்கன், கனடாவிலிருந்து தமிழ் அறிஞர் செல்லையா, அமெரிக்காவிலிருந்து தமிழ் அறிஞர் ராம்மோகன் உள்பட உலகம் முழுவதிலிருந்து தமிழ் அறிஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். மேலும் இந்தியா முழுவதிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் ஆயிரம்பேர் கலந்து கொள்கிறார்கள். சபாநாயகர் காளிமுத்து, காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே. எஸ். இளங்கோவன், முன்னாள் காங்கிரஸ் தலைவர் குமரிஅனந்தன், த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன், பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. விடுதலைச் சிறுத்தைகள் இயக்க பொதுச்செயலாளர் இரா. திருமாவளவன், நீதிபதிகள் வள்ளி நாயகம், வேணுகோபால், கவிஞர்கள் வைரமுத்து, மு.மேத்தா, மூதறிஞர் வ.செ. குழந்தைசாமி, டாக்டர் அவ்வை நடராஜன், வலம்புரிஜான் உள்பட பலர் கலந்துகொள்கிறார்கள்.

# தமிழக அரசு தீர்மானம் துர்ப்பாக்கியவசமானது

## - தினமணி நாளேடு தலையங்கம் -

புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவுக்குக் கொண்டுவர மத்திய அரசு உடனடியாக இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் தமிழக அரசு முன்னின்று நிறைவேற்றி வைத்துள்ள தீர்மானம் துர்ப்பாக்கியவசமானது என்று தினமணி நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் வருமாறு:

இலங்கை பிளவுபடுவதற்கு இடமில்லாமல்-தமிழர்களின் உணர்வுகளுக்கு ஈடு தரக்கூடிய விதத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசு முனைந்துள்ளது. இவ்வளவு காலம் தனி ஈழம் கோரிவந்த விடுதலைப் புலிகளும்-தமிழருக்கு தேசிய இன அங்கீகாரம், சொந்தத் தாயகம், சுய நிர்ணய உரிமை அடிப்படையில் அரசியல் தீர்வுக்குச் சம்மதித்திருக்கிறார்கள். ஆக, இலங்கையின் இருண்ட வரலாற்றில் புத்தொளி தோன்றத் தொடங்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், 'புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவுக்குக் கொண்டு வர மத்திய அரசு உடனடியாக இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று சட்டப்பேரவையில் தமிழக அரசு முன்னின்று நிறைவேற்றி வைத்துள்ள தீர்மானம் துர்ப்பாக்கியவசமானது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாகப் பிரபாகரன் கருதப்படுவது உண்மை. அப்படு கொலை, தமிழக வரலாற்றில் களங்கமாகப் பதிந்து விட்டிருப்பதும் உண்மையே.

அதேசமயத்தில் இக் கொலையைக் கருத்திற்கொண்டு அந்தக் கோணத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை அணுகுவது பொருத்தமற்றது. இலங்கை அந்நிய நாடு. அங்கு நமது இராணுவத்தை அனுப்ப முடியுமா என்பது வேறு விடயம். இப்பொழுது திடுமென இப்பிரச்சினையை எழுப்புவதால் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய ஆரோக்கியச் சூழல் பாதிப்புக்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது. இலங்கை நாடாளுமன்ற விவகார அமைச்சர் முகமது அஸ்வர் கூறியிருப்பது போல 'புலிகளின் கடந்த காலத்தை இலங்கை அரசே மறந்துவிட்டு எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடித்து வரும் இச் சமயத்தில்' அதுவும் திடீரென இத்தகை தீர்மானத்தைத் தமிழகச் சட்டப்பேரவை நிறைவேற்றுவது அவசியம்தானா? இத் தீர்மானத்தை எதிர்த்து பா.ம.க, இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சீய கம்யூனிஸ்டு ஆகிய மூன்றும் வெளிநடப்புச் செய்துள்ளன. இதன் மூலம் தங்களுடைய அரசியல் தெளிவை மட்டுமன்றி பிரச்சினையின் தார்மீகத்தை உணர்ந்திருப்பதையும் புலப்படுத்தியுள்ளன. காங்கிரஸ் பாரம்பரியக் கட்சிகள் அனைத்தும் தீர்மானத்தை ஆதரித்துள்ளன. ஆனால் தி.மு.க.வோ 'நடுநிலை' வகித்துள்ளது. தீர்மானத்தை ஆதரிக்கவும் முடியவில்லை. எதிர்க்கவும் முடியவில்லை. எதிர்ப்போடு கூடிய ஆதரவு அல்லது ஆதரவுடன் கூடிய எதிர்ப்பு என்ற சாமர்த்தியமான நடுநிலை இது! இவை அனைத்துக்கும் மேலாக (ராஜீவ் படுகொலையுண்ட கடந்தகால) சோக நிகழ்ச்சியுடன் 25 இலட்சம் ஈழத் தமிழர்களின் எதிர்காலத்தைத் தமிழக சட்டப்பேரவை முடிச்சுப் போடுவது விசித்திரம் மட்டுமல்ல. விபரீதமானதும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் இன உணர்வை அடக்க முயற்சித்தால் விபரீத விளைவுகள் உண்டாகும்


- வை.கோ

'பிரபாகரனைக் கைது செய்யக் கோரித் தீர்மானம் நிறைவேற்றுவதா? இளைஞர்களை உணர்ச்சிவசப்படவைக்க எத்தனை நேரம் ஆகும்? தமிழகத்தில் இன உணர்வை அடக்க முயற்சித்தால் தீவிரவாதம் வளரும்— விபரீதவிளைவுகள் ஏற்படும்.

ம.தி.மு.க.வுக்குத் தமிழக அரசியலில் முக்கியத்துவம் கொடுத்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகிற 28ந் திகதி ம.தி.மு.கவின் பொதுக்குழுக் கூட்டம் ஈரோட்டில் நடைபெற இருக்கிறது. அதிற் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட உள்ளன. எங்கே நீதி மறுக்கப்படுகிறதோ அநீதி தாண்டவமாடுகிறதோ அங்கு ம.தி.மு.க. குரல் கொடுக்கும். அதுபோலத்தான் உலக நாடுகள் கவனத்தை எல்லாம் ஈர்த்துள்ள ஈழப்பிரச்சினை குறித்தும் பேசுகிறோம்.

உலகில் எந்த சக்தியும் எங்களை மிரட்ட முடியாது. உணர்வு பூர்வமாக எது நியாயமோ அதைச்சொல்கிறோம். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் போன்றவர்கள் நாங்கள். சட்டசபையிலே தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். நியாயம்தானா? அந்த நாள், துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் உரிய நாள். நான் வன்முறைக்கு ஆதரவாளன் இல்லை. கடந்த 8 ஆண்டுகளில் எங்கள் கட்சி நடத்திய எந்த நிகழ்ச்சியிலும் வன்முறை கிடையாது. திடீரென அவசரம் அவசரமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர அவசியம் என்ன? ஈழப்பிரச்சினை எப்படி உருவானது என்று ஆரம்பத்தில் இருந்து விவாதிக்கத் தயாரா? நான் தயார். பழைய சம்பவத்தைக் கிளறவேண்டாம் என்றால் ஒட்டு மொத்த பழைய சம்பவத்தையும் கிளறக்கூடாது. ராஜீவ் படுகொலை துன்பமான சம்பவம்தான். அதை ஒருபோதும் நியாயப்படுத்த மாட்டோம். இலங்கை அமைச்சரே இப்



போது ஒற்றுமைக்கான முயற்சி நடக்கிறது அதைக் கெடுத்து விடாதீர்கள் என்று கூறி இருக்கிறாரே? அங்கு அனைத்து அமைப்புக்களும் விடுதலைப் புலிகள் தலைமையில் ஒன்றுபட்டு நிற்கின்றன. செல்வாவுக்குப் பிறகு இப்போதுதான் அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அங்கு நல்ல நிலைமை உருவாகி உள்ளது. கனிந்து வரும் நிலையில் இந்தத் தீர்மானத்தை இங்கு போட்டது ஏன்? 6 மாதத்துக்கு முன் ஏன் போடவில்லை? ஆண்டிப் பட்டியில் வெற்றி பெற்று முதல்வரான உடனே ஏன் அவசர சட்டம் போடவில்லை? 6 கோடி தமிழர்களும் எதிர்ப்பாக இருப்பது போல அல்லவா இந்தத் தீர்மானம் அமைந்துள்ளது? பின் லாடனுடன் அவர்களை எப்படி ஒப்பிட்டுப் பேசலாம்? நேதாஜி தனிப்படையையே நடத்தினாரே? அவர்கள் எல்லாம் விடுதலைக்காகப் போராடினார்கள். அப்படித்தானே இதுவும். இந்திரா காந்தி கொல்லப்பட்டபோது யாழ்ப்பாணத்தில்' யாரும் சமைக்கவில்லை. வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றினர்.

அவர் (பிரபாகரன்) தன்னைத் தலைவர் மாதிரிச் சித்தரித்துப் பேசுகிறார் என்று அம்மையார் கூறி இருக்கிறார்.

அவர் ஒன்றும் அப்படிப் பேசவில்லை. அங்குள்ள மக்கள் அவரைத் தான் தலைவராக நினைக்கிறார்கள். அவரது பேட்டி எல்லா பத்திரிகையிலும் வந்திருக்கிறதே? ஏன் அதைத்தடுக்கவில்லை? இந்தியாவில் எங்கும் அனுமதிக்கக்கூடாது என்கிறார்கள். பாலசிங்கம் 2 சிறுநீரகமும் மாற்றப்பட்டு அவதிப்படுகிறார். இந்தப் பேச்சுவார்த்தைக்கு அவர் எவ்வளவு அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். சிறுகடல் விமானத்தில் அவர் 3 மணி நேரத்துக்கு மேல் பயணம் செய்வதால் அவரது உடலுக்குக் கேடு ஏற்படும் என்பதால் சிகிச்சை அளிக்க வேண்டும் என்கிறோம். அதை மனிதாபிமானத்தோடு பரிசீலிப்போம் என்ற பிரதமர் வாஜ்பாய்க்கு நன்றி தெரிவிக்கிறோம். லட்சுமண் கதிர்காமர் டெல்லி அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரே? இந்தியர்களைக் கொன்று குவித்த உல்பா தீவிரவாதி லால்டங்காவுடன் உட்கார்ந்து பேசவில்லையா? தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் உட்கார்ந்து பேசவில்லையா? 600 இற்கு மேற்பட்ட இந்திய வீரர்களைக் கொன்று குவித்த கார்கில் போருக்குக் காரணமான முஷாரப்புக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்படவில்லையா? பிரதமர் வாஜ்பாய்க்கு இல்லாத தேசப்பற்று, நாட்டுப்பற்று அம்மையாருக்கு வந்துவிட்டதா? இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காக இந்தத் தீர்மானம் என்று முதல்வர் பேசுகிறார். இளைஞர்களை உணர்ச்சிவசப்பட வைக்க எவ்வளவு நேரம் ஆகும்? இந்தியாவின் ஒருமைப்பாடு எப்படி உடைந்துவிடும் என்று நினைக்கிறீர்கள்? அதற்கு அங்கு யாரும் நிச்சயமாக முயற்சிக்கவில்லை.

தீர்மானத்துக்கு நியாயமான காரணம் இல்லாததால் இப்படிப் பொய்யாகக் குற்றம் சாட்டுகிறார். ராஜீவ் படுகொலை கண்டிக்கத்தக்கது. அதற்காக ஈழத்தமிழர்களை ஒட்டுமொத்தமாக கைகழுவிவிட முடியாது. சந்திரிகாவின் முயற்சிக்கு ஆதரவாகத்தான் இந்தத் தீர்மானத்தை முதல்வர் போட்டுள்ளார். என்மீது இராஜ துரோகக் குற்றம் சுமத்துவோம் என்கிறார்கள். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. பொடா சட்டம் என்ற ஏவுகணையைப் பயன்படுத்துவோம் என்கிறார்கள். தாராளமாக ஏவுங்கள். கவலையில்லை. நான் ஏற்கனவே மிசாவில் 12 மாதம் சிறையில் இருந்தவன்தான். எங்கள் ஜீவாதார உரிமையைப் பறிக்க முடியாது. தீவிரவாதத்துக்கு எதிராகத்தான் பொடாச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதை அரசியல் காரணத்துக்குப் பயன்படுத்தக்கூடாது. இதைக்காட்டி எங்களை மிரட்டுவது என்றால் அது நடாக்காது. ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளோடு விளையாடக்கூடாது. காலமெல்லாம் தமிழர்களுக்காகச் சங்கநாதம் எழுப்பிய காளிமுத்து அவைத்தலைவராக இருந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதை நினைத்து நான் வருத்தப் படுகிறேன். இந்தப் பிரச்சினையில் கோடிக்கணக்கான மக்கள் அடிமனதில் அனுதாபம் இருக்கிறது. இந்தத் தீர்மானம் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய துரோகம்.

எனவே மத்திய அரசு, பாலசிங்கம் இங்கு வந்து சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும். தமிழகச் சட்டமன்றத் தீர்மான-த்தை நிராகரிக்க வேண்டும். இது எங்களது கோரிக்கை. ஈழத் தமிழர்கள் வாழ்வில் இருள் மறைந்து நல்லதீர்வு வரட்டும். இதை திசைதிருப்பும் பிரச்சினையில் ஈடுபடுகிற ஆளுகிற அரசின் கருத்துகளை மக்களே செவிமடுக்க வேண்டாம். தமிழகத்தில் தீவிரவாதம் கூடாது என்பது எங்கள் கருத்து. ஆனால் நீங்கள் எதிர்மறையான நடவடி-க்கை எடுத்தால், கருத்துச் சொல்வதைத் தடுத்தால். அப்படிப்பட்ட தீவிரவாத உணர்வு இங்கும் வந்துவிடக்கூடாது. அந்த உணர்வு இங்கும் கொளுந்துவிட்டு எரிந்துவிடக் கூடாது. அடக்க நினைத்தால் அது உடைத்துக்கொண்டு வரும். அடக்குமுறை ஆயுதத்தை கையில் எடுத்தால் விபரீத விளைவுகள் ஏற்படும். இங்கு எனது பேச்சைப் பதிவு செய்யவும், வீடியோ எடுக்கவும் பொலீஸ் துறையினர் வந்திருக்கிறார்கள். அதை யார் போட்டுக் கேட்டாலும் பார்த்தாலும் நான் பேசியதில் உள்ள நியாயத்தை உணரமுடியும்.

**(வட சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் ஜெயலலிதா அரசு கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து வை.கோ பேசியது)**

## பிரபாகரனைக் கைது செய்யக் கோரும் தீர்மானம் தமிழ்நாட்டுக்குத் தலைகுனிவு

- பழ. நெடுமாறன்

தமிழீழ தேசயத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைதுசெய்யக்கோரும் தீர்மானம் தமிழ்நாட்டுச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது, தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமரசப் பேச்சுக்களைச் சீர்குலைக்க ஜனாதிபதி சந்திரிகா செய்துவரும் முயற்சிகளுக்குத் தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா துணைபோவதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழன் என்ற உணர்வுடன் துணிந்துநின்று தீர்மானத்தை எதிர்த்த பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரிகளைப் பாரட்டுகிறேன் என்றும் கூறிய நெடுமாறன், நெருக்கடியான கட்டத்தில் நடுநிலை என்ற பெயரால் கி.மு.கழகம் சென்றது வரலாற்றில் படிந்துவிட்ட கறையாகும் என்றும் கூறியுள்ளார். ஜெயலலிதாவினதும் ஜனாதிபதியினதும் இந்நடவடிக்கைகளைப் பல இலங்கை, இந்திய நாளேடுகள் உட்படப் பலர் கடுமையாகக் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் பிரதமர் சந்திரசேகருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

சட்ட விரோதமாக அரசு நிலத்தைப் பெற்ற முன்னாள் பிரதமர் சந்திரசேகருக்கு உயர் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. மக்கள் சொத்து அபகரிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு நீதி மன்றம் சும்மா இருக்காது என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர். இவர் ஒரு அறக்கட்டளை ஒன்றை நடாத்துவதற்காகத் தனது பதவியைப் பயன்படுத்திச் சட்டவிரோதமாக நிலம் பெற்றுக்கொண்டார் என்று தொடரப்பட்ட வழக்கொன்றில் மேற்கூறப்பட்ட தீர்-ப்பு விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்துக் கருத்து வெளியிட்ட அவர் தீர்ப்பு எதிர்பாராதது என்றும் நீதிமன்ற உத்தரவுப்படி நடப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் தனித்துவமான உணவகம்

சுவை அருவி

உங்கள் திருமண, பிறந்தநாள், மங்கலகரமான வைபவங்களுக்கு சுவைமிக்க உணவு வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும் இடம்!!

Suvai Aruvi
96, High Street,
Colliers Wood
London SW19 2BT

Srilankan & South Indian Restaurant

Tel: 020 8286 6677/020 8543 6266



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளிகாம்பாள்



## ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பெருமாள் சாஸ்திரி அவர்கள் கைரேகை, முகநாடி ஆகியவற்றைக்கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஹிந்தியில் கூறுவார்.



உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி, ஆரோக்கியம், குடும்பப்பிரச்சினை சீக்கிரம் வருவதற்கு விசா, ஆன்மீகம் ஆரோக்கியமாக இருக்க, பொறாமை, கண் திருஷ்டி, ரோஷம் ஆகியவை பற்றி விபரமாக அறிந்துகொள்ள இன்றே அவரை நாடுங்கள்.

**ONE STOP**

218, High street North Eastham,
London e6 2JA
Tel: 020 84711042
Mob: 07984020955 (for appoinments)

Consultation Days
**Wednesday, Thu, Fri, Saturday**

**S.S. Supermarket**

No. 12,plumstead Road
Woolwich
London Se18 7bz
Tel: 020 88549154

Consultation Days
***Sun, Mon, Tuesday***

---

**உங்கள் வைபவங்களுக்கு**

Wedding and Birthday Invitations
Printed in 48 hours

**DESIGN AND PRINTING**
Posters Stationary etc..

Convert your VHS and DV to Video CDs
Digital Video Editing (NLE)
VideoTitling in Tamil
Phone: 0208 2038587
Mobile: 07780978027

BaseDesigns

---

SML



Royal Jewellery

*287. High Street North East Ham.*
*Manor Park, London E12 6SL*
*Tel - 020 8472 5500*
*Fax - 020 8472 5687*

---

RESTAURANT

**Palm Beach**

Finest South Indian & Sri Lankan Cuisine



10% OFF
ALL TAKE
AWAY ORDERS

P.Sivarupan
*Proprietor*

17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA

Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

---

சீலன்ஸ்

இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**Seelans**

*332 & 334. High Street North*
*East Ham, London E 12-6Ph*
*Tp & Fax- 020 8471 5733*

---

**Fair Cut Barbers**



தமிழில் கதைத்து உங்கள் முடிகளை திருத்துவதற்கு ஆள் இல்லை என்று கவலைப்பட்டதுண்டா? கவலையை விடுங்கள் Fair Cut ஐ நாடுங்கள்.

15 London Road, Tooting, London Sw17 9JR.
Tel: 0208 7673578
Mob: 079 49 723 603

---

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

**VICTOR SARL**

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக் கொண்டு அமைத்துக்கொள்ள

**VICTOR SARL**
**25bis, Rue des Chaufourniers,**
**75019 Paris.**
**Tel: 01 42 06 59 19**
**Fax: 01 42 06 61 19**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"


# சிறைக்கூண்டுகள் திறக்கட்டும் குறைப்பானைகள் நிரம்பட்டும்

*ஒரு புறத்தே விடுதலைப் புலிகளுடன் கைகுலுக்கிக் கொண்டு சமாதானத்தைத் தேடப்போவதாக கூறிக் கொள்ளும் சிறீலங்கா அரசு மறுபுறத்தே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பேரில் கைதான அப்பாவித் தமிழ் மக்களை விடுதலை செய்யாமலோ அல்லது உரிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யாமலோ அசமந்தம் காட்டுவது அதன் சமாதான நோக்கில் சில வினாக்களை எழுப்ப வைக்கிறது.*

*தமிழர்களாக பிறந்த ஒரே ஒரு காரணத்தால் சிறீலங்காவின் கூண்டுகளுக்குள் வருடக் கணக்காக இருண்ட சூனியத்தை அனுபவித்து வரும் இவர்கள் தற்பொழுது உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விடுதலை செய் அல்லது விசாரணைசெய் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இக் கைதிகள் பல தடவைகள் போராடியிருக்கின்ற போதிலும் இப்போது அவர்கள் போராடும் சூழ்நிலை வித்தியாசமானது. சமாதானம்பற்றி எங்கும் பேச்சுக்கள் எழுந்திருக்கும் நேரத்தில் இவ் அப்பாவிகளின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க வேண்டியது சிறீலங்கா அரசின் கடமையாகும், சிறீலங்காவின் கூண்டுகளுக்குள் வாடும் இவர்கள் செய்த பாரிய குற்றம்தான் என்ன?*

*சிறீலங்காவின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இனவாதக் கண்களில் இவர்கள் பயங்கரவாதிகளாக தென்பட்டமை மட்டும்தானோ இவர்கள் இழைத்த குற்றம்? இன்று சமாதானம் பற்றி இந்த அரசு சில கதைகளை அளக்க முயல்கின்றது. ஆனால் அக் கதைகளை அளப்பதற்கு முன்னர், இவ்வாறான அப்பாவிகளின் விடுதலைக்கு ஆக்க பூர்வமான நடவடிகளை எடுப்பதன் மூலமும் சமாதான செயல் திட்டத்தில் அது கொண்டிருக்கும் அக்கறையை ஓரளவு வெளிப்படும். புரிந்துணர்வு உடன்படிக்கையிலேயே சிறீலங்கா அரசு நிரப்ப வேண்டிய குறைப்பானைகள் இன்னமும் பல இருக்க, இந்த அப்பாவிகளின் அநியாய தடுத்து வைப்பும் இன்னொரு குறைப்பானையாவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாடார்கள். காலம் காலமாகவே சிறீலங்கா அரசுகளை தொடர்ந்து வரும் நடமுறைப் படுத்தா அசமந்த நோய், இந்த அரசையும் தாக்கி விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.*

*புரிந்துணர்வு - இணக்கம் - சமாதானம் போன்ற பதங்கள் வெறும் வாய் மொழி உச்சரிப்பு பதங்களானவை அல்ல. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய பதங்கள். எனவே இச் செயற்பாடுகளை தமிழர் தாயகம் போலவே சிறீலங்கா அரசும் செய்து காட்ட வேண்டும் இதுவே பேச்சு வார்த்தைக்கு ஆரோக்கியமானதும் கூட.*

## இந்தியா: கேள்விக்குறிகளுடன் ஓர் உறவு

தமிழீழத் தேசியத் தலைவரின் ஊடகவிளலாளர் சந்திப்பு இந்திய - தமிழீழ உறவு தொடர்பான பல்வேறுபட்ட விவாதங்களை உருவாக்கியது. பலதரப்பு மக்களையும் சென்றடையும் விதத்தில் மிக நிதானமாகத் தலைவரால் வழங்கப்பட்ட செய்திகள் தவிர்க்க முடியாத கேள்விகளையும் இந்தியாவினுள் எழுப்பியுள்ளது.

புலிகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையே உறவுகள் மீள உருவாகுமா என்கின்ற கேள்வி முன்பிலும் பலமாக இப்போது எழுந்துள்ளது. இடைக்கால அரசைப் பொறுப்பேற்று இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஓர் அரசாகச் செயற்படவுள்ள புலிகளை முற்றுமுழுதாகப் புறக்கணிப்பது இந்தியாவின் நலன்களுக்கு உதவுமா என்கின்ற கேள்வியும் கூடவே எழுந்துள்ளது. திருமலையில் எண்ணைக்குதத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ள இந்தியாவும், அமெரிக்காவும் அதனை குத்தகைக்குப் பெற முயலுகையில் அங்கு புலிகளின் பிடி எத்தகையது என்பதை அறியாதவர்களாக இருக்க முடியாது. இது ராஜீவ் கொலை வழக்குக்கும் அப்பால் இந்தியாவின் புவிசார் அரசியல் - இராணுவ கோட்பாடுகள் சம்பந்தமானது.

புலிகள் தமது நிலையைத் தெளிவுபடுத்தி விட்டனர். இந்தியா தனது காய்களை முழுமையாக இன்னமும் வெளிக்காட்டவில்லை. ஜெயலலிதா போன்ற அரைவேக்காட்டுத் தலைவர்களின் மட்டரக அரசியல் நோக்குக் கொண்ட செயற்பாடுகளை இந்தியாவின் வெளிவிவகாரச் சமிக்ஞைகளாகக் கொள்வதா என்பதைக் கூட இந்தியா தெளிவுபடுத்தவில்லை. புலிகளை எதிர்க்கும் உள்நாட்டுச் சக்திகளினை இந்தியாவின் அனைத்துலக நலன்கள் தீர்மானிக்க அனுமதிக்கப் போகிறார்களா என்பன்தயும் டில்லி அதிகாரபீடம் தெளிவுபடுத்தவில்லை.

ஆனால், தென்னாசியா பற்றிய தனது நோக்கங்களை அமெரிக்கா வெளிப்படுத்த தொடங்கி விட்டது. மத்தியஆசியாவின் எண்ணைக் கால்வாய்களைத் தனது செல்வாக்கினுள் வைத்திருத்தல் என்ற வணிக நலன்களையும், ஆசியாவின் மையக் கடற்பாதையைக் கட்டுப்படுத்தும் இராணுவ எண்ணங்களையும் அமெரிக்கா மறுக்க முயலவில்லை. முன்பு இந்தியா இத்தகைய பகிரங்கமான கருத்துக்களை மிகுந்த திடகாத்திரமாக எதிர்த்தது. தன்னைப் பிராந்தியத்தின் வல்லரசாகக் கருதிய காலத்தில் பிற தரப்புக்களின் வெறும் அரசியல் தலையீடுகளைக் கூட இந்தியா சகிக்க மறுத்து. ஆயினும் புதிய உலகச் சூழலில் இந்தியாவின் இப்போக்கு மாற்றங்களுக்குட்படுகின்றது.

ராஜீவ் சீனிவாசன் எனும் ஆய்வாளர் இணையத்தளம் ஊடக இச்சூழலை ஆராய்ந்தார். இந்தியா தனது கடற்பலத்தைத் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில் இந்தியா பிரபாரனைப் பகைப்பது புத்திசாலித்தனமானது எனக் கருதவில்லை எனக் கூறுகின்றார். அண்மையில் கொச்சி அல்லது விசாகபட்டினம் நகர்களின் அமெரிக்காவின் கடற்படைக்கு இடம்கொடுப்பது தொடர்பான கருத்தை தான் அமெரிக்க அதிகாரியொருவருடன் விவாதித்த போது அவர் அது தேவைப்படாது எனக் கூறினாார் எனச்சுட்டிக் காட்டிய சீனிவாசன், ஆனால் நாங்கள் இருவரும் திருகோணமலை பற்றிக் கதைப்பதைத் தவிர்த்துவிட்டோம் எனவும் கூறுகின்றார்.

இத்தகைய பின்னணியில் பிரபாகரன் திருகோணமலையைத் தலைநகராகக் கொண்டு ஆளமுற்பட்டால் என்ன செய்வது எனக் கேள்வியெழுப்பிய அவர், இந்தியாவின் தேசிய நலன்களுக்காகப் பிரபாகரனுடன் நல்ல உறவை வைத்திருப்பது முக்கியம் என விடையும் தருகின்றார்.

மேற்கூறிய ஆய்வாளரின் சேதியை ஒருபுறம் வைத்துக்கொண்டு தமிழகச் சட்டசபையில் ஜெயலலிதா நிறைவேற்றிய தமிழீழத் தேசியத் தலைவருக்கு எதிரான பிரேரணையைப் புலிகளை எதிர்க்கும் அதேவேளை அமெரிக்காவையும் எதிர்க்கும் கம்யூனிஸ்டுக்கள் எதிர்த்தமை ஏதோ ஒன்றைச் சொல்லாமல் சொல்வதாகவுள்ளது.

## பார்வை

★ ★ ★

அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த இரு சிறீலங்கா அமைச்சர்கள் புலிகளுக்கு எதிராகத் தாங்கள் தடையை நீக்கினால் நீங்கள் நீக்காதீர்கள் என்கின்ற பாணியில் ஒரு வாக்குறுதியை வாங்கி வந்துள்ளனர். இது, ரணிலின் பாணி அரசியலை மீளக் கேள்விக்குள்ளாக்குகின்றது. உள்ளத் தூய்மையுடன் பேச்சுக்களை அணுகாமல் தந்திரோபாய உத்திகளைப் பாவித்து விவகாரங்களைக் கையாள்வது இணக்க முயற்சிகளுக்கு எப்போதும் பாதிப்பையே தந்துள்ளது. பிரபாகரன் இத்தகைய தந்திரங்களை இலகுவில் புரியம் திறன்மிக்கவர் என்பதும் கூட உலகப்பிரசித்தம்.

ரணில் அரசு புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எடுக்கும் கால அவகாசம் சில சிரமமான கேள்விகளை எழுப்புகின்றது.

1. **தடையை நீக்கும் விவகாரத்தைத் தீர்க்கமாகக் கையாளாது சந்திரிகா போன்ற கடும்போக்காளர்கள் விவகாரத்தைத் திசைதிருப்ப ரணில் வழிவகுக்கின்றரா?**
2. **தடையைப் புலிகளிடம் பேரம் பேசுவதற்கான விடயமாக ரணில் கருதுகின்றரா?**
3. **ரணில் பயப்படுகின்றரா?**

ஆனால், தடையைப் புலிகள் மிக முக்கிய விவகாரமாகப் பார்க்கின்றனர். தமிழர்களின் அரசியல் அந்தஸ்த்து, கௌரவம் என்பன இதில் தங்கியுள்ளன.

*- ராஜா*

## பிறர் கருத்து

## இயல்பு நிலையைத் தோற்றுவியுங்கள் - செய்தி ஆய்வு

சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட அரசாக ஐ.தே.க தன்னை அடையாளப்படுத்திய போதும், சமாதான முன்னெடுப்புக்களுக்குத் தடையாகவிருக்கும் விடயங்களை வெட்டி அகற்றி, பேச்சுவார்த்தையை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்கான முயற்சியில் அரசு மந்த கதியிலேயே செயற்பட்டு வருவதாகத் தமிழ்ச் சமூகம் கவலை தெரிவிக்கிறது.

அண்மையில் வன்னிக்குச் சென்ற நோர்வே வெளியுறவுத்துணையமைச்சர் கொண்ட குழுவினிடம் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்திய போது வடக்கு – கிழக்கில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றி ஓர் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதுடன் விடுதலைப்புலிகள் மீதான தடையும் நீக்கப்பட்டபின்னரே சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயார் என உறுதிபடக் கூறியுள்ளனர்.

இதே கூற்றையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் சமாதானப்பேச்சுக்கான இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

பாடசாலைகள், அரச கட்டடங்கள் என்பவற்றில் இருந்து படையினர் வெளியேறவில்லை. இதே போன்று இந்து ஆலயங்கள் பலவற்றிலும் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற போர்வையில் பல வருடங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் தமதுவிடுதலைக்காகச் சாகும் வரை உண்ணாவிரதம் நடத்த வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு எத்தனையோ சம்ப வங்களுக்குத் தொடர்ந்து தமிழ்ச் சமூகம் முகம் கொடுத்து வருகிறது. இவ்வாறான ஒரு நிலையில் தாய்லாந்தில் சமாதானப் பேச்சு நடைபெறும் என்று அரசு கூறிக் கொண்டு இருந்தால் மாத்திரம் பேச்சுவார்த்தையோ சமாதானமோ ஏற்படப் போவதில்லை. புலிகள் வலியுறுத்துவது போன்று புலிகளின் தடையை நீக்கி வடக்கு கிழக்கில் அரசு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.

*(மட்டக்களப்பில் வெளிவரும் தினக்கதிரில் வெளிவந்த ஆசிரியர் கருத்துரை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பியச் செய்திகள்

# பிரான்சின் அதிர்ச்சி தரும் தேர்தல் முடிவுகள்

ஏப்பிரல் 21 ஞாயிற்றுக்கிழமை நடந்த முதல் சுற்று ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் பிரெஞ்சு மக்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. முதல் சுற்றுத் தேர்தலில் பதவியில் இருக்கும் ஜனாதிபதி ஜக் சிராக்கும்-பிரதமர் லயனல் ஜொஸ்பனுமே வெற்றி பெறுவர் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் எதிர்பார்ப்புக்களை எல்லாம் தகர்த்தெறியும் விதத்தில் 19.67% வாக்குக்களைப் பெற்று ஜக் சிராக்கும், அவருக்



கடுத்ததாக 17.02% வாக்குகளைப் பெற்று தீவிர வலதுசாரியும், குடிவரவுக்கொள்கையில் கடும்போக்காளரும், இனத்துவேசக் கொள்கையாளருமான 73 வயதான யோன்—மரி—லு பென் என்பவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மே 5ம் திகதி இரண்டாவது சுற்றில் லு பென்னுக்கு வெற்றி கிடைத்து ஜனாதிபதியாகப் பதவி ஏற்க முடியாவிட்டாலும், யூன் 9ம் திகதியும் 16ம் திகதியும் நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் கணிசமான இடங்களை அவர் கைப்பற்றலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரான்சின் 40 மில்லியன் வாக்காளர்களில் 28 வீதமானோர் வாக்களிக்கவில்லை. இதுவும் லயனல் ஜொஸ்பனின் தோல்விக்கு ஒருகாரணம் என்றும், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களில் அதிகமானோர் இடதுசாரிகளாக இருந்ததால், இடதுசாரி வாக்குக்கள் பிரிக்கப்பட்டன என்றும், ஜொஸ்பனின் சோசலிசக் கட்சி-முதல் சுற்று வாக்கெடுப்பில் மித மிஞ்சிய நம்பிக்கைகொண்டு இரண்டாம் சுற்றிற்கே அதிகம் ஆயத்தங்கள் செய்தார்கள் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதல் சுற்று வாக்கெடுப்பில் தோல்வியைத் தழுவிய ஜொஸ்பன், இத்தோல்விக்கான முழுப் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்வதாகவும் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு முடிந்ததும் அரசியல் வாழ்வில் இருந்து ஒதுங்கப் போவதாகவும் 21.04.02 அன்று இரவு அறிவித்தார். தேர்தலின் பின் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பின் அடிப்படையிலேயே இந்த அறிவித்தலை முதல் முறையாக அவர் அறிவித்திருந்தார். பின் 90% வாக்குகள் எண்ணப்பட்டதும் அதை உறுதி செய்தார்.

இரண்டாம் சுற்றில், ஜொஸ்பனின் சோசலிச வாக்காளர்களை ஜக் சிராக்குக்கு வாக்களித்து பிரான்சை இனவாதத்தில் இருந்து காக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பெற்றி




ருக்கும் லு பென்னின் வெற்றியைக் கேட்ட பிரான்ஸ் வாழ் மக்கள் பாரிஸ், லியோன், மார்சேயில் போன்ற பெரு நகரங்களில் வீதிகளில் வந்து லு பென்னுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். 'லு பென்! வெளியேறு'— 'லு பென் பாசிஸ்ட்' என்று கோசமிட்டனர்.

## கிசிஞ்சரை விசாரிக்க விரும்புகிறார் ஸ்பெயின் நாட்டு நீதிபதி

முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹென்றி கிசிஞ்சருக்கு, முன்னாள் தென்னமெரிக்க சர்வாதிகார ஆட்சியாளர்களுடன் இருந்த தொடர்பு பற்றி ஆராயவிருப்பதாக லண்டன் உள்நாட்டமைச்சுக்கு அறிவித்திருப்பதாக, யுவான்கிறாஸ் என்ற முன்னாள் சிலி நாட்டின் சர்வாதிகாரி பினாசேயின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.


தென்னமெரிக்கச் சர்வாதிகாரிகள் தங்கள் எதிரிகளைக் கள்ளத்தனமாக அழிதொழித்தார்கள் என்றும், இவ்விடயத்தில் ஜனாதிபதி றிச்சார்ட் நிக்சன் காலத்தில் 1969—1973 தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் 1973—1977 வரை இராஜாங்க அமைச்சராகவும், கடமையாற்றிய திரு.ஹென்றி கிசிஞ்சர்—தொழில் அதிபர்கள் மாநாட்டிற்கு ஏப்பிரல் 24 லண்டன் வர இருக்கிறார். அவ்வேளை அவரை விசாரிக்க விருப்பம் தெரிவித்து—ஸ்பெயின் தேசிய நீதிமன்றத்தின் புலன்விசாரணை நீதிபதி காசோ லண்டனுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். நீதிபதி காசோ, உள்நாட்டு வெளிநாட்டு போதைப்பொருள் கடத்தல், பயங்கரவாதச் செயல்களை விசாரிப்பதில் தேர்ச்சிபெற்றவர். 1998ல் சிலிநாட்டு முன்னாள் சர்வாதிகாரி பினாசே லண்டனுக்கு வைத்திய சிகிச்சைக்காக வந்தபொழுது அவரைக் கைது செய்யக்கோரிக்கை விடுத்து அதில் வெற்றியும் கண்டவர்.

பயங்கரவாதத்துக்கெதிரான நடவடிக்கையில் ஒத்துழைப்பதாகக் கையெழுத்திட்ட நாடுகள், ஐரோப்பிய ஒன்றியக் கோட்பாட்டிற்கிணங்க முன்னாள் இராசாங்க அமைச்சராக இரண்டு ஜனாதிபதிகளுக்காக உழைத்த ஹென்றி கிசிஞ்சரை விசாரிக்கப் பிரித்தானியா உதவி செய்யவேண்டும் என்று சட்டத்தரணி கிறாஸ் கூறியுள்ளார்.

## மிலானின் 30 மாடி கட்டடத்தினுள் விமானம் புகுந்தது

கடந்த 18ம் திகதி வியாழக்கிழமை மாலை 5.45 மணி அளவில் மிலானின் அதி உயர் மாடிக்கட்டடமான 30 மாடிகளைக் கொண்ட 'பெரெலி' என்ற கட்டடத்தின் 27ம் மாடியில் தனி ஒரு விமான ஓட்டியுடன் உல்லாசப் பயணிகளின் விமானம் ஒன்று மோதி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மிலான் மக்கள் தாம் திரும்பவும் ஒரு செப்டெம்பர் 11 நிகழ்ச்சியைப் பார்க்கிறோமோ என்று பயந்தார்கள். இச்சம்பவத்தில் விமான ஓட்டியும், கட்டடத்தில் இருந்த மூவரும் கொல்லப்பட்டனர். 70க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

உலகில் உள்ள கொங்கிறீற்றால் கட்டப்பட்ட ஒரு சில கட்டடங்களில் இந்த உயர் மாடிக் கட்டடமும் ஒன்றானதால், விமானத்தின் தாக்குதலால் விமானம் மோதிய மாடி தவிர்ந்த ஏனைய கட்டடப்பகுதிகள் பாதிக்கப்படவில்லை. தீயணைக்கும் படையினர் ஒரு சில நிமிடங்களுக்குள் தீயைக் கட்டுப்படுத்தியதால் பாதிப்புப் பெரிதாக இருக்கவில்லை.



இந்தத் தாக்குதல் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் அல்ல என்று இத்தாலிய பொலிசாரும் வெளிநாட்டமைச்சும் உறுதி செய்தாலும், இது ஒரு விபத்து என்பதைப் புலனாய்வுத் துறையினர் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கின்றனர். 68 வயதான லூயிஜி பசூலோ 30 வருட அனுபவமுள்ள சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு விமான ஓட்டி. எனவே இது ஒரு தற்கொலைச் செயலாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அவருடைய பணக் கொடுக்கல் வாங்கலில் 175 மில்லியன் ஈரோக்கள் பண மோசடியால் பாதிக்கப்பட்டு மனமுடைந்த அவர் தற்கொலை செய்திருக்கலாம் என்று அவர் மகன் கூறுகிறார்.

## முன்னாள் யூகோஸ்லாவிய இராணுவ ஜெனரல் சரணடையத் தயார்

கொசோவோவின் யுத்த குற்றங்களுக்காகத் தாம் ஹேக்கில் சரணடையத் தயார் என்று முன்னாள் இராணுவ ஜெனரல் Dragoljub Oj Dani அறிவித்துள்ளார். ஹேக் நீதிமன்றத்துடன் ஒத்துழைத்து யுத்த குற்றம் புரிந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 23 பேரை நீதிமன்றத்திற்குக் கையளிப்பதென யுகோஸ்லாவிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதை அடுத்தே ஜெனரல் D.Oj Danic சரணடையப்போவதாக அறிவித்துள்ளார். 1998—1999ல் இராணுவப் பொறுப்பதிகாரியாய் இருந்த ஜெனரல், தாம் கையளிப்புக்கான ஆயத்தங்கள் செய்வதாகவும் ஆனால் தாம் அவசரப்படவில்லை என்றும் ஜேர்மன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அறிவித்துள்ளார்.

தம்மை ஹேக் நீதிமன்றத்திற்கு கையளிப்பதன் மூலம் தாம் எப்படி NATO குண்டுத் தாக்குதலின்போது எதிரியை எதிர்த்து நாட்டைப் பாதுகாத்தாரோ, அதேபோல் நாட்டின் தீர்மானத்திற்குத் தான் மதிப்பளித்தே நீதிமன்றத்தில் சரணடையப்போவதாக அப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ரஷ்யா மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் இருந்து மயிரிழையில் தப்பியது

ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற செச்சினியாவில், ரஷ்ய இராணுவத்தினர் செய்த மனித உரிமை மீறல்களை ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுமுன் குற்றஞ்சாட்டியிருந்தது. வழமைக்கு மாறாக 16:15, அதாவது ஒரு வாக்கினால் இந்தக் குற்றச்சாட்டு ரஷ்யாவுக்குச் சாதகமாகத் தோற்கடிக்கப்பட்டது. இவ் வாக்கெடுப்பில் 22 அங்கத்தவர்கள் கலந்துகொள்ளவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக ரஷ்யாவைக் கண்டித்து ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. ஐநாவின் நிரந்தரப் பாதுகாப்புச்சபை அங்கத்தவர்களில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் கண்டிக்கப்பட்ட ஒரே நாடு ரஷ்யாவாகும்.

செச்சினியாவில் ரஷ்ய இராணுவத்தின். சித்திரவதைகளும், கண்மூடித்தனமான இராணுவ பலமும் அப்பாவி மக்கள் மேல் பாவிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

PAPAYA
MODERN CEYLON CUISINE
Restaurart



குறைந்த விலையில்
குன்றாத மனநிறைவு

* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாறக் காத்திருக்கின்றோம்.

15 Village Way East,
Rayners Lane,
Harrow,
Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெனிசுவேலா சதியில் தோல்வியடைந்த புஷ் நிர்வாகம்

இலத்தின் அமெரிக்க நாடான வெனிசுவேலாவில் ஒரு சதிப் புரட்சி இடம்பெற்று ஆட்சி மாற்றத்திற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் சதியில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு மீண்டும் முன்னையவரே ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

வெனிசுவேலா உலகின் பிரதான மசகு எண்ணெய் ஏற்றுமதி நாடுகளுள் ஒன்று ஆனால் அமெரிக்காக் கண்டத்தின் ஏழ்மையான மக்கள் சமூகத்தையும் அது கொண்டுள்ளது. அமெரிக்காவிற்கு எண்ணெய் வழங்கும் நாடுகளில் மூன்றாவதாக வெனிசுவேலா உள்ளது. அண்மையில் வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஹீகோ சாவேஸ் இற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் திடீர் திடீர் என முளைத்தன. அரசின் உடமையான வெனிசுவேலா எண்ணெய் அகழ்வு நிலையத்திலும் அதன் வேறு சில பகுதிகளிலும் பல மோசடி நடிவடிக்கைகள் நடந்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டையடுத்து பலர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டனர். இதனை எதிர்பார்த்திராக சாவேசுக்கு எதிரான அமைப்பினரும், வர்த்தக பிரதானிகளும் ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு விடுத்தனர். ஜனாதிபதி சாவேசிற்கு எதிரான ஆயுதந்தாங்கிய படையினர் நகரின் சில பகுதிகளில் நிலைகெண்டிருந்தனர். இவர்களால் சாவேஸ் ஆதரவாளர்கள் ஏழுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தலைநகர் கரக்காஸ் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் துப்பாக்கி மோதல்களும் இடம் பெறத் தொடங்கின. இப்போதுதான் அரசினைக் கவிழ்க்கும் சதி ஆரம்பமாகியது. ஏற்கனவே கரக்கானில் நிலைகொண்டிருந்த விமானப்படையின் தளபதி பதவியை இராஜினாமாச் செய்தார். அவரும் அவரால் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவை உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். தீவொன்றில் சிறை வைக்கப்பட்டிருந்த சாவேஸ் மீண்டும் வெற்றி வீரனாக கரத்தாஸ் திரும்பினர். இவரது மீள்பதவியேற்பிற்கு உதவி ஜனாதிபதி மற்றும் சாவேசின் நம்பிக்கைக்குரிய உதவியாளர்கள் பங்காற்றினார்கள். இத்துடன் வெனிசுவேலா சதி நாடகம் முடிவடைந்தது. ஆனால் இதில் ஏன் அமெரிக்கா பின்னணியில் செயற்பட்டது. எப்படி மூக்குடைப்பது ஏன் இது நிகழ்த்தப்பட்டது என்பவைதான் இனி வருபவை,

அமெரிக்காவிற்கு எண்ணெய் வழங்கும் நாடுகளின் வரிசையில் மூன்றாவதாக வெனிசுவேலா உள்ளதும், தனது வாசற்படியில் உள்ளதும் அமெரிக்காவிற்கு மிக முக்கியமான நெருக்கமான நாடாக வெனிசுவேலா இருக்கவேண்டிய தேவை இருந்தது. ஆனால் அங்கு நடந்த தேர்தலில் அமெரிக்காவுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்ட முன்னாள் விமானப்படைத் தளபதியொருவர் பதவிக்குத் தெரிவாகினார். இவர் கியுபா அதிபர் பிடல் காஸ்ட்ரோவுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருந்தார். சலுகை விலையில் கியூபாவுக்கு எண்ணெய் விநியோகம் அவரால் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அமெரிக்காவுக்கு தலையிடியாக இருந்துவரும் ஈராக்கிற்கு இவர் விஜயம் செய்தார். ஐக்கிய அமெரிக்கா எண்ணெய் தட்டுப்பாட்டாலோ விலை அதிகரிப்பாலோ திண்டாடக் கூடாது. என்பது அதிபர் புஷ்சின் ஆசை. ஆகவே ஈராக்கின் எண்ணெய் வயல்களும் மற்றும் அமெரிக்காவுக்கு எண்ணெய் விநியோகிக்கும் நாடுகளும் தனது நட்புக்கரங்களாக இருக்கவேண்டும் என அவர் விரும்பினார். பாலஸ்தினர்களின் அழிவுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதியை ஒரு மாதத்துக்கு நிறுத்திவைப்பது என்று பல நாடுகள் முடிவெடுத்தன. இதனால் எண்ணெய் விலை அதிகரித்தது. இது நடந்து ஐந்து நாட்களில் வெனிசுவேலாவில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றது. அமெரிக்காவுக்கான ஏற்றுமதி மீண்டும் ஆரம்பமாகின. மசகு எண்ணெயின் விலை 6 சதத்தால் குறைந்தது. கியுபாவுக்கான ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. இவற்றையடுத்து உடனடியாக புதிய அரசு நியமனத்தை அமெரிக்கா அங்கீகரித்தது. இங்குதான் அமெரிக்காவின் தலையீடு உள்ளது அம்பலமாகியது. மீண்டும் சாவேஸ் ஆதரவாளர்கள் பதவிக்கு வந்தவுடன் சந்தேகத்துக்கு இடமான பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பல அமெரிக்கர்களும் அடங்கினர். அமெரிக்க மத்திய உளவு நிறுவனத்தின் அதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டனர். அமெரிக்காவினால் 80 களில் மேற்கொள்ளப்பட்ட 'அசிங்கமான' பல யுத்தங்களில் பங்காற்றிய பலர் மத்திய அமெரிக்காவின் கொலைக் குழுக்களுடன் தொடர்புகொண்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ரேகனின் நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றியவர்களில் ஒருவரான 'எலியட் ஆபராமஸ்' வெனிசுவேலாவின் சதி நடவடிக்கையில் பெரும் பங்கு கொண்டிருந்தார். வெனிசுவேலா சதி நகர்வுகள் பல மாதங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சதியின் முக்கியஸ்தர்கள் அமெரிக்காவில் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி புஷ்சின் லத்தின் அமெரிக்காவுக்கான கொள்கை வகுப்பாளரான ஒட்டோ றெயிச்சினால் வரவேற்கப்பட்டார். முன்னைய அமெரிக்க ஜனாதிபதி றீகனின் நிர்வாகத்தின் கீழ் இராஜாங்கத் திணைக்களத்தில் முக்கிய இடத்தினை வகித்த றெயிச் கியூப அமெரிக்கராவார். இவர் வெள்ளைமாளிகையில் றீகனின் தேசியப் பாதுகாப்பு உதவியாளரான ஒலிவர்நோத்தின் விவகாரங்களில் தலையிட்ட குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருந்தார். இவர் நிக்கரகுவாவின் மாக்சிச அரசிற்கு எதிரான கொன்றா தீவிரவாத அமைப்பிற்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்திலும் சம்பந்தப்பட்டிருந்தார். 86ம் ஆண்டில் அமெரிக்காவின் வெனிசுவேலா தூதுவராகக் கடமையாற்றினார். இவருக்கும் அண்மையில் சதியில் ஈடுபட்டு ஜனாதிபதியாக தன்னைப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட கார்மோனாவிற்கும் நெருங்கிய தொடர்புகள் நீண்டகாலமாகவே இருந்துவந்தன. இதன் ஒரு வடிவமாகவே அவர் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்டிருந்தார். மேற்கண்ட சதியில் ஈடுபட்ட மற்றொரு நபராக இலத்தீன் அமெரிக்காவின் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரான ஜோன் நெக்றோ பொன்டே அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரும் 81 முதல் 85 வரை ஹொண்டுராசில் இயங்கிய அமெரிக்கப் பயிற்சி பெற்ற கொலைக்குழுவிற்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர். இவரும் இவ்வருட ஆரம்பத்தில் சாவேசிற்கு எதிரான செயற்பாடுகளிற்காக கரக்காசில் நிலைகொண்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது.




*மீண்டும் சாவேஸ் ஆதரவாளர்கள் பதவிக்கு வந்தவுடன் சந்தேகத்துக்கு இடமான பலர் கைது செய்யப் பட்டனர். அவர்களில் பல அமெரிக்கர்களும் அடங்கினர். அமெரிக்க மத்திய உளவு நிறுவனத்தின் அதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டனர். அமெரிக்காவினால் 80 களில் மேற்கொள்ளப்பட்ட 'அசிங்கமான' பல யுத்தங்களில் பங்காற்றிய பலர் மத்திய அமெரிக்காவின் கொலைக் குழுக்களுடன் தொடர்புகொண்டுள்ளனர்.*

அமெரிக்க உளவு நிறுவன அதிகாரிகள் சாவேசிற்கு எதிரான இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் சாவேசைக் கைதுசெய்யும் நடவடிக்கையை மேற்கொண்டனர். அதே வேளை வர்த்தக அமைப்புக்களின் தலைவரான அமெரிக்க சார்பு பெட்ரோஸ் கார்மோனா புதிய அதிபராக பதவியேற்றார். அத்துடன் சாவேஸ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முடிவடைந்தன. ஆனால் மறுநாள் மீண்டும் சாவேஸ் ஆதரவு மக்கள் எழுச்சி ஆரம்பமாகின. வெனிசுவேலாவின் பிரதான விமானப்படைப் பிரிவு புதிய அரசின் நியமனத்தை ஏற்க மறுத்தது. அத்துடன் மக்களுக்கு ஆதரவான தாக்குதல் நகர்வுகளுக்கும் தான் தயாராவதாகக் கூறியது. இதற்கிடையே சதியில் ஈடுபட்ட பல கீழ் நிலை அதிகாரிகள் புதிய அரசுக்கு தாம் வழங்கி வந்த ஆதரவினை விலக்கிக்கொண்டார்கள். ஜனாதிபதி மாளிகை மக்களால் சூழப்பட்ட நிலையில் அதிபராக தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட கார்மோனா பத

வெனிசுவேலாவில் இடம்பெற்ற சதி நடவடிக்கையின் முன்பும் பின்புமாக 100 பேர்வரை கொல்லப்பட்டனர். தலைநகர் கரக்காசில் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் ஐவருக்கு வீட்டுக்காவல் தண்டனையும் பிரிவினைவாதத்திற்கான மேலதிக விசாரணைகளுக்கும் உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதியினை பதவியிலிருந்து அகற்றும் சதி நடவடிக்கைகளில் மேற்கண்ட இராணுவ ஜெனரல்களும் உள்ளூர் செய்தியூடகங்கள் சிலவும் அமெரிக்காவில் உள்ள சாவேசிற்கு எதிரான குழுக்களும் ஈடுபட்டன என ஹுகோ சாவேசின் பிரதான ஆலோசகர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

**– உதயன்.**

உலகெங்கும் துரிதகதியில் உங்கள் பணத்தை உரியவர்கட்குச் சேர்த்திட

**WORLD WIDE MONEY TRANSFER** | **IITAG Holding/ Innovative Independent Trust AG**

இது ஒரு வரையறுக்கப்பட்ட சர்வதேச கூட்டு நிறுவனம். இவற்றின் கிளைகள் உலகெல்லாம் பரந்துள்ளன.

ஒரு மணித்தியாலத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் உங்கள் பணம் சேரவேண்டியவர்களிடம் அனுப்பிவைக்கவும். பிரயாண காசோலைகளை பெற்றுக்கொள்ளவும். அனுமதிபெற்ற நிறுவனம். இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து, டென்மார்க், முதலிய நாடுகளுக்கு சட்டபூர்வமாக அனுப்பிவைக்கவும், பெற்றுக்கொள்ளவும்...

தொலைபேசி இலக்கங்கள்: தலைமை அலுவலகம் சுவிற்சர்லாந்து 0041 81 354 99 11, 354 99 12. ஜேர்மனி 069 24 00 49 80 இலங்கை 0094 74 51 67 43

நீங்கள் உங்கள் இடங்களிலிருந்தே எங்கள் வங்கிக்கணக்கிற்குப் பணத்தைச் செலுத்தி தபால் மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ பற்றுச்சீட்டையும் பணம் சேரவேண்டியவர்களினுடைய விபரங்களையும் அனுப்பிவைத்தால் குறித்த நேரத்தில் எங்கள் கிளைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

சில வங்கிகளின் விபரம்,
**Swiss:** UBS AG Chur, 208_929016.06D, **Germany:** Commerzbank Frankfurt 6030043 00 **BLZ** 500 400 00, Postbank: 17279_604 **BLZ** 500 100 60

**IITAG Holding / Innovative Independent Trust AG**

7002 Chur _ Switzerland http//:www.iitag.com, Email: iitag@iitag.com

[illegible] Fax: ++41 81 354 99 10

அல்லது அந்நாடுகளிலுள்ள எமது கிளைகள் அல்லது பிரதிநிதிகளிடம் தொடர்பு கொள்ளவும்.

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம்

# நீர்க்குமிழியின் ஆயுளா? நிரந்தர ஆயுளா?

கடந்த ஐந்து தசாப்தங்களாக அரசியல் ரீதியாக பல ஏற்ற இறக்கங்களையும் பல இன்னல்களையும் கண்ட ஈழத் தமிழினம் தற்போது கொண்டுள்ள மிடுக்கினையும், கூர்மதி நுட்பத்தையும் கண்டு சர்வதேசம் ஆச்சரியப்பட்டு நிற்கும் காலமிது. இதுவரையும் சிறீலங்கா அரசுடனான இராணுவ ரீதியான போராட்டத்தில் முத்திரை பதி-த்த விடுதலைப் புலிகள் தற்போது எடுத்துவரும் இராஜதந்திர வியூகத்தின் தமிழர் தாயகத்தோடு இத்தரப்புகள் ஒத்துழைத்து தமது 'பலியாட்டுத்' தன்மைகளை மறுதலிக்குமேயானால் பலன்கள் நல்லவையாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

இது ஒருபுறமிருக்கச் சிறீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடிப்பேச்சுக்கள் தாய்லாந்தில் எதிர்வரும் யூன் மாத நடுப்பகுதியிலேயே ஆரம்பமாகும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கீசன் தெரிவித்திருக்கிறார். இருதரப்புப் பேச்சுக்கள் அடுத்த மாதமே ஆரம்பமாகக் கூடுமென முன்னர் எதிர்வு கூறப்பட்டாலும், தற்போது நோர்வேத் தரப்பு பேச்சுக்கள் யூன்மாத நடுப் பகுதியிலேயே ஆரம்பமாகும் எனத் தெரிவித்திருப்பதற்கும் காரணமில்லாமலில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் சிறீலங்கா அரசு இதுவரை செய்து முடிக்க வேண்டிய பல அம்சங்கள் இன்னமும் பூரணப்படுத்தப்படவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து ஏறக்குறைய இருமாதங்களாகும் நிலையில், உடன்படிக்கையிலுள்ள சில அம்சங்களில் சிறீலங்கா 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடும்' போக்கினை கடைப்பிடிப்பதால் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பம் தாமதப்படுகிறது. உடன்படிக்கை அம்சங்களின் நிறைவேற்றுவிடயத்தில் சிறீலங்கா அரசு சமச்சீரற்ற தன்மையுடன் நடந்துகொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமல்ல, அதன் முடிவெடுக்கும் ஆளுமையிலும் சில வினாக்களைத் தொடுப்பதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இது மட்டுமல்ல இந்த சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி உண்மையான இலக்கான நிரந்தர சமாதானத்தை உள சுத்தியோடு தேட முற்படாது பிரதமர் ரணில் தனது தேசத்தின் பொருளாதார நலன்களைக் கட்டியெழுப்ப முயன்றாலும் அதன் பலாபலன்கள் நீரின் அடிமட்டத்திலிருந்து எழும்பும் வாயுக்குமிழியின் வாழ்வு நேரத்தைப்போன்றதாகிவிடும் அபாயமும் இருக்கிறது.

இலங்கைத் தீவின் கட்டுமானம் சிறீலங்கா, தமிழர் தாயகம் என்ற இரு தேசங்களினூடாகவே கட்டியெழுப்ப முடியுமே தவிர, சிறீலங்கா அரசு தரப்பு மட்டுமே அதனைக் கட்டியெழுப்ப முடியாது. தமிழர் தாயகத்தின் 'நிம்மதியே' சிறீலங்காவினையும் சுபீட்சமாக்கும். இது கடந்தகால வரலாறு உணர்த்தியுள்ள உண்மையும் கூட. ஆனாலும் சிறீலங்கா அரசிற்கு இன்று இருக்கும் நெருக்கடியும் புறந்தள்ளக் கூடியவை அல்ல என்றாலும், அதனைச் சமாளிக்க வேண்டியதும் இந்த அரசின் பணிகள்தான். ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்திவரும் சமாதானத்திற்கெதிரான வெளிப்பாடுகள் மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியிருக்கும் சிங்கள பேரினவாத செயற்பாடுகள் ஆகியவற்றைச் சமாளித்தபடியே, அவர் சமாதானப் பாதையில் சென்றாக வேண்டிய நிலை.. எது எப்படியோ உறுதியான விடயங்கள் பல எடுக்கப்படவேண்டிய சூழ்நிலைகள் இலங்கைத் தீவில் தோன்றியிருக்கின்றன என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

அதிர்வலைகள் எங்கும் வியாபிக்கத் தொடங்கியுள்ளன என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒரு கூற்றுமல்ல.

தமிழில், 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு' என ஒரு முதுமொழியுண்டு. இம்முதுமொழியைப் போலவே ஒரு காலத்தில் போராட்டக் களத்தில் தமிழினத்தின் காலைவாரிவிட்டுச் சென்ற பல சக்திகள் இருக்கின்றன. தமிழினத்தின் பேரில் 'வாஞ்ஞை' கொண்டவர்கள் போல வெளியே காட்டிக்கொண்டு, சிறீலங்காவின் கொடிய சட்டமூலங்கள் அதன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்போது ஆதரவு காட்டிய பல கையுயர்த்திகளும் இவர்களுள் அடக்கம். ஆனால் வரலாற்றுச் சக்கரத்தின் சுழற்சியில் இப்போது அந்தக் குற்றங்கள் குறைகளை மன்னித்து அவ்வாறானவர்களையும் தமிழ் தேசியத்தின் தலைமைத்துவம் அரவணைக்கிறது.

இந்த வகையில்தான், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கிம் தேசியத் தலைவருடன் செய்துகொண்ட ஒப்பந்தம், மலையக தலைவர்களுடனான சந்திப்பு என்பன அமைகின்றன. இவ்வளவு காலமும் தலைவர் பிரபாகரனை ஒரு தலைமறைவு போராளித் தலைவராகக் கண்ட சர்வதேசம், தற்போதுதான் அவரது அரசியல் சாணக்கியத்தைப் பார்க்கிறது. தமிழர் தாயகம் 'தேடி' வந்து நடைபெற்ற இந்நிகழ்வுகள் யாவுமே இன்று விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் செயற்பாட்டு வடிவத்தில் வெளிப்படுத்தியுள்ளன.

> இலங்கைத் தீவின் கட்டுமானம் சிறீலங்கா, தமிழர் தாயகம் என்ற இரு தேசங்களினூடாகவே கட்டியெழுப்ப முடியுமே தவிர, சிறீலங்கா அரசு தரப்பு மட்டுமே அதனைக் கட்டியெழுப்ப முடியாது.

இதுவரையும் சிறீலங்கா பேரினவாதத்தால் அதன் வியூகங்களால் பிளவுபடுத்தப்பட்டு ஆழமாக்கப்பட்ட முரண்பாடுகளை, தற்போது தமிழர் தாயகம் சீர்படுத்த ஆரம்பித்திருக்கிறது. இப் பிரச்சினையில்

## இருபத்து எட்டு வருட அவசரகாலநிலை இருபத்து மூன்று வருட பயங்கரவாதச் சட்டம் சிறிலங்கா ஆட்சியாளர்கள் அமுலாக்கியுள்ளனர்

**– ஐ.நா.வில் சர்வதேச சமாதானசபை**

ஜெனிவாவில் தொடர்ந்து நடந்து வரும் ஐக்கிய நாடுகள் சபையின் 58வது மனித உரிமைக் கூட்டத்தொடரில், கடந்த செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 16ம் திகதி உரையாற்றிய தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் திரு. ச.வி. கிருபாகரன் கூறியதாவது;

சிறிலங்கா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை 28 வருடகால அவசரகால நிலையுடன் கூடிய 23 வருட காலங்களாகப் பயங்கரவாதச் சட்டம் சிறிலங்காவின் வேறுபட்ட அரசாங்கங்கள் அமுலாக்கியுள்ளதாகக் கூறினார்.

ஐ.நா. கூட்டத் தொடரில் சர்வதேச சமாதான சபையின் சார்பில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

'இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது கடந்த ஐம்பத்து நான்கு வருடகாலமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் முதல் கட்டமாகத் தற்போதைய சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கைச்சாத்திட்டதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

'கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீதான பல விதமான அரச வன்முறைகள், அரச படுகொலைகள், கொலை பாலியல் வன்முறைகள், பொருளாதாரத் தடைகள், சிங்களக் குடியேற்றங்கள் போன்றவை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெரிதும் பாதித்தன.'

'புதிய அரசு பதவியேற்றிருந்தாலும், தமிழ் மக்கள் மீதான பாரிய மனித உரிமைக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளும், மற்றவர்களும் இன்றும் பதவியிலிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்விராணுவ அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கவேண்டியது தற்போதைய அரசின் தலையாய கடமையாகும்.

'தமிழ் மக்கள் மீதான மாபெரும் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த சிறிலங்காவில் அமுலில் உள்ள பயங்கரவாதச் சட்டம் (PTA) மற்றும் அவசரகால நிலை ஆகியவற்றைத் தற்போதைய அரசு நீக்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

'கடந்த 1983ம் ஆண்டிலிருந்து இன்றுவரை 70,000 மேற்பட்ட தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டும், 80,000 மேற்பட்டோர் உள்நாட்டில் இடம் பெயர்ந்தும், 400,000க்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியும் உள்ளனர். இவை யாவும் சிறிலங்கா அரசின் தமிழ்மக்கள் மீதான போரின் விளைவுகளே!

'கடந்த பல ஆண்டுகளாக தமிழர் மனித உரிமைகள் மையம் (TCHR) இலங்கைத் தீவில் தமிழீழ மக்கள் மீதான மனித உரிமை மீறல்களை அறிக்கையாகப் பட்டியலிட்டு இக்கூட்டத்தொடருக்குச் சமர்ப்பித்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

'இலங்கைத் தீவில் ஒரு நிரந்தர சமாதானம் உருவாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை உடன் நீக்குவதன் மூலம், சிறிலங்கா அரச சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் நிலையை உருவாக்கலாம்.

'இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தும் அதேவேளை, தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பரிகாரம் காண்பது மிக அவசியம்.' ஆகையால் இந்த ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசை வேண்டிக்கொள்ளும்படிக் கேட்கும் அதேவேளை,

சிறிலங்கா சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை உடன்விடுமாறு நாம் இங்கு வேண்டுகிறோம்.'

Experienced Tamil Jeweller in London



western Jewellers

வெஸ்டன் ஜுவல்லர்ஸ்

230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445

Opening hours,
Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கான ரணிலின் பாலம்



இராமேஸ்வரத்திற்கும் தலை மன்னாரிற்கும் இடையில் தரை வழிப்பாதை அமைக்கப் படும் என்று பிரதமரானவுடன் இந்தியாவிற்கு முதல் விஜயம் மேற்கொண்ட ரணில் புதுடெல்லியில் வைத்து இதனை முதல் முறையாகத் தெரிவித்தார்.

கி.மு. 20,000 ஆண்டுகளுக்கு முன்பு இப்படியொரு தரைவழிப்பாதை இயற்கையாகவே இருந்துள்ளமைக் கான எச்சங்கள் காணப்படுவதாகப் புவியியலாளர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவின் முதுபெரும் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் இலங்கை வேந்தன் இராவணனுக்கு எதிராகப் படையெடுக்க இப்படி ஒரு பாலம் இராமனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

'சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம். சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என்று 20ம் நூற்றாண்டில் பாரதியார் பாடினார்.

பாலம் சாத்தியமா இல்லையா? அது எப்படியாயினும் இருக்கட்டும். ஆனால் இதை இராஜ தந்திர நோக்கு நிலையில் இருந்து நோக்குவோமானால் இராமர் அணை இந்தியாவிற்கு ஓர் இலட்சியம். சிங்கள அரசிற்கு இப்போது ஓர் அரசியல் வழிமுறை.

ரணிலைப் பொறுத்தவரை இந்தியா அவருக்கு ஒரு பக்க இறகு. அமெரிக்கா மறு பக்க இறகு. இவ்விரு இறகுகளைக்கொண்டு அவரால் எழும்பிப் பறக்கமுடியும் என்பதே அவரின் நிலை. இந்தியாவிற்குப் பாலம். அமெரிக்காவிற்குப் பிராந்தியச் சந்தை. பாலம் ஓர் இறகு- பிராந்தியச் சந்தை வேறு இறகு. இதிகாசத்தில் அணில்

> *ரணில் தனது விஜயத்தின்போது தான் முதலில் சந்தித்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவையும் இந்நாள் பிரதமர் வாஜ்பாயையும் சந்தித்தார். வாஜ்பாயுடனான சந்திப்பின்போதுதான் பாலம் கட்டும் இனிய கதையை ரணில் வெளியிட்டார். இராம பக்தர் வாஜ்பாய்க்கு இராமர் அணை எத்துணை இனிய கனவுகளைத் தூண்டியிருக்கும். இந்திய சாம்பிராச்சியவாதிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இது ஒரு மன நிறைவளிக்கும் செய்தியாகும்.*

மணல்புரட்டியதோ இல்லையோ வரலாற்றில் ரணில் பாலம் கட்டுவாரோ இல்லையோ நிகழ்கால அரசியலில் அவர் எழும்பிப் பறக்க பாலம் எனும் அபின் அவருக்குக் கைகொடுக்கும் என்பது மட்டும் உண்மை. பதவிக்கு வரு முன்பே ரணில் சமாதான நடவடிக்கைகள் பற்றி நம்பிக்கை தொனிக்கப் பேசினார். ஆனாலும் இந்தியா அதனைக் குழப்பிவிடும் என்று பரவலாகப் பேசப்பட்டது. அதனை மீறியும் ரணில் நம்பிக்கை வெளியிட்டார். ஆதலால் இந்தியாவை வளைக்கவல்ல ஏதோ ஒரு திட்டம் 'இராஜதந்திர மெருகுமிக்க' சிங்கள இராஜதந்திரிகளின். மிகப் பிந்திய வாரிசான ரணிலிடம் உண்டு என்று எண்ண வைத்தது.

ரணில் பிரதமரானதும் தனது முதலாவது விஜயத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டார். புதுடெல்லியில் ஊடகவியலாளர்கள் அவரைச் சூழ்ந்து மேற்படி விஜயத்திற்கான நோக்கத்தைக் கேட்டனர். அப்போது ரணில் 'நான் முதல் முறை பிரதமரானதும் எனது முதலாவது வெளிநாட்டு விஜயம் இந்தியாவிற்குத்தான். இம் முறை பிரதமரானதும் எனது முதலாவது வெளிநாட்டு விஜயம் இந்தியாவிற்குத்தான். எனது இரு முதல் வெளிநாட்டு விஜயங்களும் இந்தியாவிற்குத்தான் என்பதில் ஒரு செய்தி இருக்கின்றது' என்று கூறினார். இது இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கும், தலைவர்களுக்கும் தலையில் பால் வாத்தாற்போல் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ரணில் தனது விஜயத்தின்போது தான் முதலில் சந்தித்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவையும் இந்நாள் பிரதமர் வாஜ்பாயையும் சந்தித்தார். வாஜ்பாயுடனான சந்திப்பின்போதுதான் பாலம் கட்டும் இனிய கதையை ரணில் வெளியிட்டார். இராம பக்தர் வாஜ்பாய்க்கு இராமர் அணை எத்துணை இனிய கனவுகளைத் தூண்டியிருக்கும். இந்திய சாம்பிராச்சியவாதிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இது ஒரு மன நிறைவளிக்கும் செய்தியாகும்.

இந்தியத் தலைவர்களினதும் கொள்கை வகுப்பாளர்களதும் அடி மனதிலிருக்கும் பேரவாக்களில் ஒன்று இப்படி ஒரு பாலம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே அமைக்கவேண்டுமென்பதாகும். காப்பியக் கனவு மிக்க இந்தியத் தலைவர்களுக்கு இப்படி ஓர் அவாவை ஊட்டித் தமிழருக்கு எதிராக இந்தியாவை வளர்த்தெடுக்கலாம் என்று சிங்கள இராஜதந்திரிகள் எண்ணுகிறார்கள் என்று சந்தேகிப்பது நியாயமானதே. ஏனெனில் காலங்காலமாக ஒடுக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டுவரும் அப்பாவித் தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து இதனை நியாயபூர்வமாகவே சிந்திப்பது தவிர்க்கமுடியாது. தமிழருக்கு எதிராக இந்தியாவை வளைத்துப்பிடித்து இறுதியில் தங்கள் இலாபத்தை ஈட்ட சிங்கள இராஜதந்திரிகளுக்கு நிறையவே தெரியும்.

தமிழீழப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளைப் புதுடெல்லியும் மற்றாசும்தான் என்று அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் புல்லின்கின் கொழும்பில் நிகழ்ந்த கருத்தரங்கம் ஒன்றில் தெரிவித்தார். இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திரா காந்தி இவருடன் அவ்வப்போது கலந்துரையாடியது துண்டு. இக்காலகட்டத்தில் சிங்களப் புத்திஜீவிகள் பரவலாக இக்கருத்தை அழுத்திக் கூறலாயினர். இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் 1983 ஜூலை இனப்படுகொலையின் பெயரால் ஜே.வி.பி. தடைசெய்யப்பட்ட போது கைதுசெய்யப்பட்ட ஜே.வி.பி. யினருள் ஒருவர் லண்டனில் இராணுவக் கல்வி பயின்றிருந்தார். அதனை அறிந்துகொண்ட லலித் அக்கைதியுடன் உரையாடிய போது மேற்படி புதுடெல்லியையும், மற்றாசையும் கையாள்வதுதான் ஒரே வழி என்று அவர் கூறியதாகச் செய்தியுண்டு. லலித் இக்கருத்துடன் உடன்பாடுள்ளவராக இருந்தபோதிலும் அவர் இதனை இலங்கை இந்தியா ஆகிய இரு அரசுகளுக்கும் இடையிலான ஒரு கொள்கை நிலைப்பாட்டால் கையாள நினைக்காது உளவு நடவடிக்கைகள் மூலம் கையாள முனைந்தார். இந்தியாவின் அரசியலில் தீர்மானம் எடுக்கவல்ல அதிகாரிகளை கைக்குள் போடுவதன் மூலம் புதுடெல்லியையும், சென்னையையும் குழப்பலாம் என்றும் அல்லது தமக்குச் சாதகமான முறையில் தீர்மானம் எடுக்க வைக்கலாமென்றும் நம்பினார்.

மகாவலித் திட்டமிட்டபடி அதிகாரிகளை ஏறக்குறைய நெருங்கிவிட்டார். அரசியற் தலைவர்களையும் அவ்வாறு நெருக்கலாமென நம்பினார். சென்னையில்

வன்னியிலிருந்து
**மு.திருநாவுக்கரசு**

அதிகாரிகளைக் கைக்குள் போடத்தக்க 'பொக்கற்றுக்களை' ஸ்தாபித்தார். அரசியல்வாதிகளை நோக்கியும் நகர்த்தத் தொடங்கினார். ஆனால் நிலைமைகள் அவரின் கையை மீறிப்போயின. கொள்கை நிலைப்பாட்டாலன்றி உளவு நடவடிக்கைகளால் கையாளமுடியாதளவிற்கு நிலைமையில் கனமும் வளர்ச்சி வேகமும் காணப்பட்டன. கடந்த ஒன்றரை தசாப்தகால இலங்கையின் உளவுத்துறை வளர்ச்சியின்படி இலங்கை அரசிற்குப் புதுடெல்லியிலும் சென்னையிலும் இப்படி அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் கையாளவல்ல உளவுத் தளம் பலமுற்று வருவதுபோல் தெரிகின்றது. ஆனால் தற்போதைய உடனடித் தேவைகளில் இருந்து பார்க்கும் போது கொள்கை நிலைப்பாடும் இராஜதந்திர நகர்வும் தான் நிறைவானதும், பலமானதுமான பலாபலன்களை நமக்குத் தேடிக்கொடுக்குமென்று சிங்கள இராஜதந்திரிகள் நம்புகின்றனர் எனத் தெரிகின்றது. எனவே புதுடெல்லியும் சென்னையும்தான் தமிழீழப் போராட்டத்தைக் கையாள்வதற்குரிய ஆடுகளம் என்பதில் சந்திரிகாவிடமோ அல்லது ரணிலிடமோ வேறுபட்ட அபிப்பிராயம் இல்லை. இவ் இருவருக்குமிடையில் நடவடிக்கை முறைகளில்தான் மாற்றம் இருக்குமே தவிர முடிவில் இல்லை. இந்த வகையில் புதுடெல்லியையும் சென்னையையும் கையாள்வதற்குரிய ரணிலின் வழிவகைகள் என்னவெனில் இந்தியாவிற்கு எந்தவிதத்திலும் ஆத்திரமூட்டும் வழிகளன்றி சாந்தமான வழிகளில் அமெரிக்காவைப் பயன்படுத்தி புதுடெல்லியையும், சென்னையையும் வசீகரப்படுத்துதல் தனது கொள்கை நிலைப்பாட்டாலும் இராஜதந்திர நகர்த்தல்களாலும் புதுடெல்லியையும் சென்னையையும் தன்பால் கவர்ந்தெடுத்தல் உளவு நடவடிக்கைகளையும் இவற்றிற்கு உதவியாகப் பயன்படுத்துதல் என்பனவாகும். இந்த வகையில் சமாதானமும் பாலமும் என்பன இந்தியாவை நோக்கிய ஒரு கொள்கை நிலைப்பாடும், இராஜதந்திர நகர்த்தலுமாகும். தீர்வை முன்வைக்கவில்லையேல் ஐக்கிய இலங்கையில்லை. சிங்கள அரசிற்குச் சர்வதேசச் சமூகத்தின் ஆதரவுமில்லை. இலங்கைக்கு அபிவிருத்தியுமில்லை. அத்துடன் தீர்வின்மை அமெரிக்க வர்த்தக பொருளாதாரத்திற்கும் இடையூறானது. இவற்றின் பின்னணியில் உள்ள தீர்வின் அடிப்படையில் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு ஒரு பாலம் என்பதும் புதுடெல்லியை அகமகிழ வைத்திடவே சிங்கள அரசுடன் இந்திய அரசு அதிகம் ஒட்டிக்கொண்டுவிட்டது.

பாலம் சாத்தியமோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால் பாலம் எனும் செய்தி இப்போது இந்தியக் கொள்கை வகுப்பாளரின் அபிலாசையாகி விட்டது. உணர்ச்சி வசமுற்ற கொள்கை வகுப்பாளர் இதனைக் குழப்பிக்கொள்ள விரும்பமாட்டார்கள். பிரச்சினை உணர்ச்சிவசமிக்க கொள்கை வகுப்பாளரின் கைக்கு சிக்குமிடத்து அதன் உணர்ச்சிவசத்திற்கேற்ப இதில் தளம்பல்கள் அமையமுடியும். சர்வதேச நிலவரம் தமிழீழப் போராட்டம் உள்நாட்டு நெருக்கடிகள் ஆகிய அனைத்தும் இணைந்து ஒரு பாடம் புகட்டுகின்றன. அதாவது தலைபோவதை விட தலைப்பாகை போவதுடன் தப்புவது மேல் என்ற நிலையில் ஐக்கிய இலங்கையைக் காப்பதற்கு ஓர் அரசியல் தீர்விற்குப் போகவேண்டுமெனச் சிங்கள இனவாதிகள் பெருமளவு உணரத்தொடங்கியுள்ளனர்.

'தீர்வு' தான் ஐக்கிய இலங்கையைப் பேணுவதற்குரிய ஒரேவழி என்பதை இருபெரும் சிங்களக் கட்சிகளும் இப்போது உணர்கின்றன. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் இரு பெரும் கட்சிகளாலும் நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை பெறமுடியாத நிலையும் தீர்வை முன்தள்ளும் காரணிகளுள் ஒன்றாகும். இப்பின்னணியில் 'தீர்வு' என்பது முதன்நிலைத் தீர்மானமாகும். தீர்வை எப்படிக் காண்பது என்பதில் சமாதான வழிமுறை என்பதே ரணிலின் முதலாவது தெரிவாகும். ஏனைய தெரிவுகள் இரண்டாம், மூன்றாம் பட்சமானவை. எவ்வாறான தெரிவிற்கும் பாலத்தை ஒரு துருப்புச் சீட்டாக ரணில் கருதுகிறார். ரணிலைப் பொறுத்தவரை பாலம் பற்றிய திட்டம் ஒரு சர்வரோக நிவாரணியாக அமையுமென நினைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் பல்லாயிரம் மக்கள்

## - பௌத்த தேரர் அன்னை பூபதியின் நினைவாலயத்தைத் திறந்து வைத்தார் -

அன்னை பூபதியின் நினைவு தின இறுதி நிகழ்வு அன்னை பூபதியின் நினைவுச் சமாதி அமைந்துள்ள நாவலடியில் சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு மட்டு. கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அலிசாகீர் மௌலானா, பொன். செல்வராசா, குருநாகல் மகா கல்கடவல புண்ணியதார தேரர், கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மூக்கையா, கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரப் பீடாதிபதி அம்மன்கிளி முருகதாஸ், விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் காயா, மட்டு. அம்பாறை அரசியற் பொறுப்பாளர் விசு, துணைப் பொறுப்பாளர் துரை, வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, மட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் அ.செல்வேந்திரன், மட்டு. திருமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.



அன்னை பூபதி எழுச்சிப் பேரணி கல்லடி திருச்செந்தூர் ஆலய முன்றலில் இருந்து மாலை 3.15 மணியளவில் ஆரம்பமானது. இப்பேரணி மாலை 6.15 மணியளவில் அன்னை பூபதியின் சமாதி அமைந்துள்ள நாவலடிப் பிரதேசத்தைச் சென்றடைந்தது. இவ்விடத்திற்குச் சென்ற பேரணி, அன்னை பூபதியின் சமாதியைத் தரிசித்த பின்னர் இப்பகுதி இந்து இளைஞர் மன்றச் செயலாளர் கண்ணன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாயின.

தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடியினை விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மகளிர் அரசியல் பொறுப்பாளர் காயா ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வின் போது அன்னை பூபதியின் நினைவாலயத்தினைக் குருநாகல் மகாகடவல புண்ணியதார தேரோ திரை நீக்கம் செய்து வைத்தார். இதனையடுத்து அன்னை பூபதியின் புகழ்பாடும் ஒலிப்பேழை வெளியீட்டு விழா இடம்பெற்றது. இவ்வொலிப் பேழையின் முதற் பிரதியைத் தமிழீழ இசைக் குழுவின் முக்கியஸ்தர் ஈஸ்வரநாதனின் தாயார் மயில்வாகனம் சந்தானம்பிள்ளை பெற்றுக் கொண்டார். இரண்டாவது ஒலிப் பேழையை விடுதலைப்புலிகளின் மட்டு.மாவட்ட முதலாவது மாவீரர் லெப்ரினன்ட் பரமதேவாவின் தாயார் திருமதி ராமலிங்கம் சார்பாக அவரது சகோதரி பெற்றுக் கொண்டார்.

அடுத்து கிழக்குப் பல்கலைக்கழக இசை, நடனக் கல்லூரி மாணவிகளின் நடனம் மற்றும் வாத்திய இசை நிகழ்வுகள் இடம் பெற்றன.





## இந்தியப் படை மீண்டும் 'வருவது' கண்டனத்துக்குரியது!

### காந்தி சேவா மன்றத் தலைவர்

தமிழ் நாட்டு அரசு இலங்கைக்கு மீண்டும் இந்தியப்படையை அனுப்புவதற்கு முயற்சிப்பது கண்டனத்துக்குரிய செயலாகும் என மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளர் கதிர்பாரதிதாசன் தெரிவித்துள்ளார். அன்னைபூபதியின் 14வது ஆண்டு நினைவையொட்டி நேற்று மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்ற உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கதிர்பாரதிதாசன் இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் படை மண்ணில் நிலைகொண்டிருந்த வேளை எமது அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதற்கு இலங்கை இந்திய அரசுகள் நீதி விசாரணை நடத்தவில்லை. இந்தியப் படை எம் மக்களுக்குச் செய்த கொடூரத்தை நாம் மறந்துவிடவில்லை அந்தக் கொடூரம் எம்மண்ணில் தொடரக் கூடாது என்பதற்காகவேதான் அன்னைபூபதி அறப்போர் செய்து உயிர் நீத்தார். தற்போது அரசும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வுடன் சமாதானத்திற்காகச் செயற்படும் வேளையில் தமிழ் நாட்டு அரசு குழப்ப முயல்வதை உலக நாடுகள் கண்டிக்க வேண்டும் எனவும் கதிர்பாரதிதாசன் மேலும் தெரிவித்தார்.

## தமிழீழச் சட்டப்படி ஜெயலலிதாவை கைதுசெய்து கொண்டுவந்து தண்டிக்க வேண்டும்

### அன்னைபூபதி நினைவு வைபவத்தில் சந்திரநேரு

'இராணுவத்தை அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்து இந்தியா கொண்டுவரவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதாவைத் தமிழீழச் சட்டப்படிக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டுவந்து தண்டனை வழங்க வேண்டும்' என வெள்ளிக்கிழமை திருக்கோவில் கிராமத்தில் நடைபெற்ற அன்னைபூபதியின் பதினான்காவது வருட நினைவு இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு கூறினார்.

'பிரபாகரனைக் கைது செய்யவேண்டுமெனத் தமிழக சட்ட சபையில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியதன் மூலம் தமிழக முதல்வர் ஜெயலலிதா இன்று உலகத் தமிழர்களின் பொது எதிரியாக மாறியுள்ளார் எனக் கூறிய அவர், ஒவ்வொரு தமிழ் மகனும் இதனை நினைவில் எப்போதும் கொள்ளவேண்டும். ஜெயலலிதாவின் கொடும்பாவியை உலகெங்கும் எரிக்கவேண்டும். உலகிலேயே வல்லமை பொருந்திய இந்திய இராணுவத்தால் முடியாமல் போன ஒரு கருத்தைச் செய்து விடலாமென ஜெயலலிதா இதன் மூலம் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றார்.

## யாழ்நகர் - வவுனியாவில் சிறப்புற நடைபெற்ற அன்னைபூபதி நினைவு நிகழ்வு

உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் நீத்த அன்னைபூபதியின் 14 ஆவது ஆண்டு நினைவு தின விழா வவுனியா நகரசபை மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. கடந்த வியாழக் கிழமை மாலை வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்திலிருந்து அன்னை பூபதியின் உருவப்படம் அடங்கிய ஊர்தி புறப்பட்டு வவுனியாவின் முக்கிய இடங்கள், கிராமங்கள் ஊடாக சென்று வெள்ளிக் கிழமை மாலை நகரசபை மைதானத்தை வந்தடைந்தது. எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இதேபோல, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளிலும் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெற்ற அன்னைபூபதி விழாவில் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி, தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் உரையாற்றினார்கள். நீண்ட காலத்துக்குப் பிறகு தமிழீழ இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இதிலும் பெரும் திரளானவர்கள் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு தமிழ்: மற்றொரு மக்கள் எழுச்சி

## மருத்துவபீட மைதானத்தில் பல்லாயிரம் மக்கள் திரண்டனர்

### - யாழ். குடா எழுந்ததைக் கண்டு சர்வதேச ஊடகங்கள் வியப்பு -

தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை இவற்றை வலியுறுத்திக் குடாநாட்டில் கடந்த புதனன்று நடத்தப்பட்ட மாபெரும் பொங்குதமிழ் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணி திரண்டு பங்கேற்றனர். மும்முனைகளில் இருந்து பேரணியாக வந்த



சனத்திரள் யாழ். பல்கலைக்கழக வளாகப் பிரதேசத்தை நிறைத்துக்கொண்டது.

இதன் முடிவான நிகழ்வாக மருத்துவபீட மைதானத்தில் நடந்த பொங்கு தமிழ்ப் பிரகடன நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் வான் அதிர உரிமைக் குரல் எழுப்பினர். அங்கு தமிழ் உணர்வு பொங்கிப் பிரவகித்தது. மட்டக்களப்பு, வவுனியா, திருமலை ஆகிய தமிழர் பிரதேசத்தின் தலைநகரங்களில் மிகப் பிரமாண்டமான அளவில் நடத்தி முடிக்கப் பட்ட பொங்குதமிழ் நிகழ்வுகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போன்று யாழ். பொங்குதமிழ் நிகழ்வு அமைந்தது.

பொங்குதமிழ் பொதுக் கூட்டத்திலும், அதை ஒட்டி குடா நாடு எங்கும் நடந்த எழுச்சி நிகழ்வுகளிலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பங்குகொண்டதாக மதிப்பிடப்பட்டது. தமிழர் எழுச்சியை வெளிப்படுத்துவதற்காகக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த மக்கள் மூன்று இடங்களில் ஒன்றுதிரண்டு பின்னர் அந்த இடங்களில் இருந்து பேரணியாகப் புறப்பட்டுப் பொங்குதமிழ் நிகழ்வு நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை அடைந்தனர்.




யாழ். மத்திய பஸ் நிலையம், நல்லூர் கந்தசுவாமி கோயில், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய மூன்று பேரணிகளில் திரளாகக் கலந்துகொண்ட மக்களில் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருமே தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படத்தை தமது கைகளில் எடுத்துச் சென்றனர். தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தும் பல்வேறு கோசங்களையும் அவர்கள் உரத்து எழுப்பினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் பலவர்ண 'கட்அவுட்'டுகள் வைக்கப்பட்ட பல ஊர்திகள் வாகனப் பேரணியில் சென்றன. மும்முனைப் பேரணிகளும் மருத்துவபீட மைதானத்தை அடைந்ததும் அங்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.



கஜேந்திரன் தலைமையில் மாபெரும் எழுச்சி நிகழ்வு ஆரம்பமானது. அதற்கு முன்பாக அங்கு பல்கலைக்கழக மாணவர்களின் எழுச்சிப் பாடல்கள் இடம்பெற்றன. மாணவர்களோடு சேர்ந்து மக்களும் பாடல்களை இசைத்த காட்சி மிகவும் உணர்வு பூர்வமாய் அமைந்தது. 'ஈழநாடே எழில் சூழும் நாடே' எனும் பாடல் பாடப்பட்டபோது திரண்டிருந்த மக்கள் மெய்மறந்து ஆடிப்பாடிக் குதூகலித்தனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகப் பிரதேசத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கமே மக்கள் திரளத் தொடங்கிவிட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்துவதில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் மற்றும் தொண்டர் படைப்பிரிவுகளைச் சேர்ந்த தொண்டர்களும் ஈடுபட்டிருந்தனர்.

### விரைவில் கட்டுநாயக்கா ஒலி நாடா

கடந்த ஆண்டு ஜூலையில் கட்டுநாயக்கா, சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனோடு இணைந்த விமானப் படைத்தளம் என்பவற்றின் மீது பெருத்த எடுப்பில் நடத்தப்பட்ட வியத்தகு தாக்குதல் குறித்த பாடல்கள் அடங்கிய ஒலிநாடா விரைவில் வெளியிடப்படவுள்ளது.

மயிர்க்கூச்செறியும் அந்தத் தாக்குதல் சம்பவத்தை விடுதலைப் புலிகள் ஒளிப்படமாக்கியுள்ளனர். விரைவில் அது மக்களின் பார்வைக்காக வெளியிடப்படும். யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் உரையாற்றிய புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இதனைத் தெரிவித்தார்.

## தேசக் கட்டுமானப் பணிக்காக இளைஞர்களே அணி சேருங்கள்!

### - பொங்குதமிழ் நிகழ்வில் புலிகள் அழைப்பு -

*(பொங்குதமிழ் நிகழ்வில் புலிகளின் கலை பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு.புதுவை இரத்தினதுரை அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியிது)*

கடந்த ஆறு வருட கால அஞ்ஞாத வாசம் முடிந்து, உங்கள் முற்றத்தில் வந்து நிற்கின்றோம். 90ஆம் ஆண்டு முற்றவெளியில் நடந்த முத்தமிழ் விழா, 91இல் நடந்த மேதினம் ஆகியவற்றில் கண்ட மக்கள் கூட்டத்தை மீண்டும் இன்று இங்கு பார்க்கிறேன்.



இன்று மக்களின் எழுச்சியைக் கண்டு அதற்குத் தலைசாய்க்கிறேன், தலைவரின் நன்றிகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த எழுச்சிக்குக் காரணமான பல்கலைக்கழகச் சமூகத்துக்கு எமது அமைப்பின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

ஆறு வருடங்களுக்கு முன்னர் – அதாவது 95ஆம் ஆண்டுக்கு முன்னர் – இந்த மக்களின் இன்ப, துன்பங்களில் கலந்து நின்றோம். பொருளாதாரத் தடை, மின்சாரத் தடை ஆகியன இருந்தபோதும் மக்கள் முகத்தில் மலர்ச்சியைக்கண்டோம்.

வரி வாங்கினோம், பவுண் வாங்கினோம், படங்களை வெட்டினோம் அவற்றையிட்டுக் கவலை கொள்ளாது முகமலர்ச்சியுடன் அவற்றை ஏற்றுக்கொண்ட மக்கள், இன்று மலர்ச்சி அற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

'எமது வாழ்க்கையை வேறு ஒருவர் எழுத இடமளிக்க மாட்டோம். நாமே எமது வாழ்க்கையை எழுதப்போகிறோம்' என்று இந்த மக்கள் தயாராகிவிட்டதை இன்று உணரும் போது சந்தோசம் அடைகிறேன். விடுதலைப் புலிகள் இங்கு இல்லாதபோது மக்கள் எழுச்சியுடன்தான் இருந்துள்ளார்கள். முகாம்களைத் தகர்க்கவும், வீதியில் போடப்பட்ட முள்ளுக்கம்பிகளை அகற்றவும் தயாரான நிலையில் இங்குள்ள மக்கள் இருந்துள்ளனர். அந்த எழுச்சியின் உச்சக்கட்டம்தான் இன்று வெளிப்பட்டுள்ளது.

நாளை வன்னியில் தலைவரிடம் இந்தச் செய்தியைக் கூறுவேன். அத்துடன் மக்களின் அன்பை, ஆதரவை, எழுச்சியை நெஞ்சத்தில் பதிவுசெய்து செல்வேன். நாடாளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிப்பது, கோயிலுக்கு கோபுரம் கட்டிக் கொடுப்பவர்கள் பின்னால் நிற்பது, சமுர்த்தி வேலை வாய்ப்புக்குப் பின்னால் செல்வது, சந்திரிகாவுக்கு கடலை வடை கொடுப்பது போன்ற செயல்களில் எமது சமூகம் ஏமாறவில்லை என்பதைப் பார்க்கும்போது பெருமைப் படுகின்றோம்.

நாம் தேர்தலுக்கு வாக்குக்கேட்க இங்குவரவில்லை. இன்று ஏற்பட்டுள்ள சூழலில் அரசியலில் பணிபுரிய வந்துள்ளோம். களங்கள் பல ஆடி சாதனைபுரிந்த இளம்பரிதி, பாப்பா ஆகியோர் இங்கு வந்துள்ளனர். அவர்கள் மக்கள் இன்னல்களைத் தீர்க்க உதவுவர். 95 ஆம் ஆண்டு இங்கு வசித்த மக்கள் படையினரின் தாக்குதலில் உயிர் இழக்கும் ஆபத்து இருந்ததால் அவர்களை இடம்பெயரும்படி கேட்டோம். அதன்பின் தென்மராட்சியில் இருந்து வன்னிக்கு வரும்படி மக்களை நாம் அழைக்கவில்லை. மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்தே இந்தக் கோரிக்கையை விடுக்கவில்லை.

இங்கு எமது உறுப்பினர்களைப் பராமரித்த மக்களை நாம் மறக்கமுடியாது. இந்த மண்ணில் சுமார் நூறு போராளிகளை இழந்தபின்தான் இங்கு வந்தோம். ஆனால், மக்களின் உணர்ச்சி எம்மை மகிழ்வுறச் செய்துள்ளது. 1995 இல் வன்னி சென்ற நாம் அங்கு பெரும் வரலாறு ஒன்றைப் படைத்துத்தான் திரும்பியுள்ளோம்.


வடக்கு – கிழக்கு நிர்வாகத்தை ஏற்கப் போகின்றோம். மக்களின் துயரங்களை, இழப்புக்களை ஓரளவு நீக்குவதற்காகவே இந்த முடிவுக்கு வந்துள்ளோம். இந்த நிர்வாகத்தைக் கட்டியெழுப்ப – மக்கள் மயமாக்க – முடிவு செய்துள்ளோம். இதற்கு ஆளணி தேவை. இளைஞர், யுவதிகளே! உறுப்பினர்களாகச் சேருங்கள். தேசத்தைக் கட்டியெழுப்ப – தேசத்தை நிர்மாணிக்க – இளைஞர், யுவதிகளும் துறைசார்ந்தவர்களும் எம்முடன் இணையவேண்டும். இதற்கு அழைப்பு விடுக்கின்றோம்.

இங்கு நாம் தொடர்ந்து நிற்போம். சிங்கள மக்களுக்கு ஒரு செய்தியை விடுக்க விரும்புகிறேன். 'சமாதானத் துக்கான கடைசி பஸ் புறப்படுகின்றது. இதில் தொற்றிக் கொள்ளுங்கள்' என்பதே அந்தச் செய்தியாகும். இந்த பஸ்ஸை சிங்கள மக்கள் தவறவிட்டால், பாண்டவர்களைத்தான் சந்திக்க நேரிடும்.

### பிரபாவுக்கே நன்றி செலுத்தவேண்டும்

#### - பொங்குதமிழில் மௌலவி யாமின் -

*கடந்த பல வருடங்களாக இன்னல்கள் அனுபவித்து வந்த தமிழ்மக்கள் எழுச்சிகொண்டு அனுட்டித்த பொங்கு தமிழ் நிகழ்வில் தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் பங்கேற்க வாய்ப்பு இன்று ஏற்பட்டுள்ளது. இந்த வாய்ப்பு எமக்குக் கிடைக்க உதவிய பெருமை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கே உரியது என யாழ். பள்ளி வாசல் மௌலவி யாமின் கூறினார். நேற்று பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.*



*யாழ் குடாநாட்டு எழுச்சியை அங்கு தங்கியிருந்த சர்வதேச செய்தியாளர்கள் வியப்புடன் பதிவு செய்துள்ளனர். யாழ் நகரம் வெறிச்சோடிப் போய் மக்கள் வெள்ளம் பல்கலைக்கழகத்தை சுற்றி நின்றது என றொயிட்டர் செய்தி நிறுவனம் விபரித்துள்ளது. இது புலிகளின் செல்வாக்கை வெளிக்காட்டும் நிகழ்வு என அது விபரித்தது.*

*தேசியதலைவரின் செவ்விக்காக வன்னி சென்ற ஊடகவியலாளர்கள் யாழ். குடாவிற்கும் சென்று அங்கு நிலைமைகளைப் பதிவு செய்தமையினால் யாழ். எழுச்சிக்கு சர்வதேசக் கவனத்தைக் கொடுத்தது.*

*யாழ். எழுச்சிகளின் நிழற்படப் பதிவுகள் பல்வேறு சர்வதேச பட நிறுவனங்கள் வாயிலாக வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி காயத்திரி வசந்தகுமாரன், செல்வன் ம.சுகந்தன், செல்வன் சி. சுகந்தன், செல்வன் அசோக் குலதாசன் ஆகியோரைப் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## விடுகதை முற்றம்

1. அக்கா வீட்டுக்குத் தங்கை போகலாம். தங்கை வீட்டுக்கு அக்கா போக முடியாது. அது என்ன?
2. அச்சு இல்லாத சக்கரம். அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
3. அடித்தால் வலிக்கும். கடித்தால் இனிக்கும். அது என்ன?
4. அடிக்கடி தாவுவான். அரசியல்வாதி அல்ல. அவன் யார்?
5. அரிசிபோல் பூப்பூக்கும். அம்மாடி என்று காய் காய்க்கும். அது என்ன?
6. அடித்து நொருக்கி அனலில் போட்டால் அழகாய் மணக்கும், புகையாய் பறக்கும். அது என்ன?
7. அடிமேல் அடிபட்டும் அசராத சின்னப் பையன். குறிவைத்த இடம் பார்த்து தப்பாமல் சேருவான். அது யார்?
8. அம்மா கொடுத்த தட்டில். நீர் ஒட்டவில்லை. அது என்ன?

*(விடைகளை அடுத்தவாரம் சரிபார்த்துக்கொள்ளவும்)*

## தகவல் முற்றம்

1941– ரவீந்திரநாத தாகூர் மறைந்தார்
இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரண்டு நாடுகளுக்கான தேசிய கீதத்தை வழங்கிய பெருமை இவருக்குண்டு.

1942– லிபியா நாட்டின் அதிபர் கடாபி பிறந்தார்.

1942– நேபாம் குண்டு உருவானது.

1942– சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது.

1942– இந்தியாவில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மான -த்தை மும்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாடு நிறைவேற்றியது.

1945– இரண்டாம் உலகப் போருக்கு மூலகாரணமாக இருந்த கிட்லர் தற்கொலை செய்துகொண்டார். முசோலினி எதிரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாண்டு அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும் நோயினால் இறந்தார்.

## முயன்று பாருங்கள்

### சொல்வளம்

கடந்த வார விடை

1. இக்கரை – அக்கரை.
2. நாகரிகம் – அநாகரிகம்.
3. ஒற்றுமை – வேற்றுமை.
4. இலாபம் – நட்டம்.
5. ஆயுதன் – நிராயுதன்.

*பின்வரும் சொற்களுக்கான எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.*

1. பெருமை -.................................
2. இளமை -.................................
3. பிறப்பு -.................................
4. வெற்றி -.................................
5. வீரன் -.................................

## புதிர் முற்றம்


### கடந்தவார விடைகள்:

1. I. பௌதீக மாற்றம்.
   II. இரசாயன மாற்றம்
2. அகவும்
3. 60 விதமாக
4. I. சீன மொழி
   II. ரோமன் கத்தோலிக்க மதம்.
   III. இந்தோனேசியா
   IV. சோவியத் ரஷ்யா.

### இவ்வாரப் புதிர்கள்

1. பொருள்களின் திணிவை அளக்கப்பயன்படும் அலகு எது?
2. கோணங்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
3. ஒரு சதுரத்தின் சுற்றளவைக் கண்டறியும் முறை யாது?
4. ஒரு சதுரத்தின் ஒரு பக்கத்தின் அளவு 24 செ.மீற்றர் எனில் அதன் பரப்பளவு எவ்வளவு?

விடை அடுத்தவாரம்




## கதை முற்றம்

### வாத்துக் குஞ்சு

புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து, முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்ற வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக்கொண்டிருந்தன. இந்த வாத்திற்கு மற்ற வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை. முட்டைகள் உடைந்து வாத்துக்குஞ்சுகள் ஒவ்வொன்றாக 'ட்சிக், ட்சிக்' என்று வெளிவந்தன. தாய் வாத்து 'குவா, குவா' என்று கத்தியது. குஞ்சுகள் மெதுவாக எழுந்து நின்று பச்சை இலைகளைப் பார்த்தன. ஒரு முட்டையிலிருந்து மட்டும் குஞ்சு இன்னும் வரவில்லை. தாய் வாத்து அதன் மேல் உட்கார்ந்து அடைகாத்தது. வயதான வாத்துச் சொன்னது, 'நன்றாகப் பார். இது வான்கோழி முட்டையாக இருக்கும். அது உனக்கு ஏன்? குஞ்சுகளை அழைத்துக்கொண்டு நீந்தப் போ!' என்றது. தாய் வாத்து அதைக் கேட்கவில்லை. கடைசியாக முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்தது.

குஞ்சு பெரிதாகவும் விகாரமாகவும் இருந்தது. மற்ற வாத்துக் குஞ்சுகளைப் போல் அது இல்லை. அது வான்கோழிக் குஞ்சாக இருக்குமோ? தண்ணீரில் விட்டால் தெரிந்துவிடும். வாய்க்காலுக்குச் சென்று 'குவா, குவா' என்று சொல்லி நீந்தியது. குஞ்சுகளும் தண்ணீரில் இறங்கி நீந்தின. அழகில்லாத பெரிய குஞ்சும் நீந்தியது. 'இது வாத்துக் குஞ்சு தான்; வான்கோழிக் குஞ்சு இல்லை. என்னுடன் வாருங்கள், குஞ்சுகளா, பூனைகள் ஜாக்கிரதை' என்றது தாய் வாத்து.

தாய் வாத்து வாத்துக் குஞ்சுகளுக்கு நடக்கக் கற்றுக்கொடுத்தது. ஒரு வாத்து பறந்து வந்து அவலட்சணமான குஞ்சின் மேல் உட்கார்ந்து கழுத்தைக் கொத்தியது. 'குஞ்சை ஒன்றும் செய்யாதீர்கள்' என்றது தாய் வாத்து. 'அழகில்லாவிட்டால் என்ன? நல்ல குஞ்சு, நன்றாக நீந்துகிறது. முட்டையில் நீண்ட நேரம் இருந்ததால் இப்படி இருக்கிறது' என்றது.

கோழிகளும் பெரிய வாத்துக்களும் குஞ்சைக் கேலி செய்தன. கடித்தன, கொத்தின. கூடப் பிறந்த குஞ்சுகளுக்கும் அதனைக் கண்டால் பிடிக்கவில்லை. 'உன்னைப் பூனை கவ்விக்கொண்டு போகட்டும்' என்று சபித்தன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமி குஞ்சை உதைத்துத் தள்ளினாள். குஞ்சு தப்பித்து புதர்கள் நிறைந்த இடத்திற்கு வந்தது. வேறு சில வாத்துக்கள் 'நீ யார்? உன்னைப் பார்த்தாலே வெறுப்பாக இருக்கிறது. உன்னை யார் கல்யாணம் செய்து கொள்வது?' என்று கேலி செய்தன. அந்த இடத்தை விட்டு காட்டிற்கு வந்தது குஞ்சு. ஒரு பழைய குடிசைக்குப் பக்கத்தில் நின்றது. களைத்துப் போனதால் நிற்கவே முடியவில்லை. வாலில் பலமாக ஊன்றி நின்று கொண்டது. குடிசையில் ஒரு கிழவியும் பூனையும் கோழியும் வசித்து வந்தார்கள்.

பூனை வாத்துக் குஞ்சைப் பார்த்து, 'மியா, மியா' என்று கத்தியது. கோழி 'கொக்கரக்கோ' என்றது. கிழவி வெளியேவந்து வாத்துக் குஞ்சைக் கையில் எடுத்துக்கொண்டாள். *(மிகுதி அடுத்த வாரம்)*

## கவிதை முற்றம்

### ஆதிப் பொதுமைவாதி

*கதவை ஒருவன் திறத்தல் போல்*
*காலை வந்து விடிகிறது.*
*கதவை அவன் பின் பூட்டல்போல்*
*இரவு வந்து கவிகிறது.*

*பூட்டும் திறப்பும் யார் கையில்*
*கதிரோன் என்னும் பெரியவனே*
*வீட்டுக்காரன்–அவன் நாளும்*
*கதவைத் திறந்து பூட்டுகிறான்.*

*மனிதன் விலங்கு பறவையினம்*
*எறும்பு பூச்சி ஊர்வனவும்*
*கதிரோன் வீட்டில் குடியிருப்போர்*
*கூலி எதுவும் கொடுப்பாரோ.*

*கூலி இல்லா பெருவீடாம்*
*கதிரோன் தனையே குடிகளுக்கு*
*மேலும் வழங்கி சமதர்மம்– அதில்*
*பொதுமை இயற்றுகிறான்*
*அவனைப் போற்றி வியப்போமா*

- கவிஞர் மு.பொ.

## குறுக்கெழுத்துப் போட்டி

### கடந்த வார விடை

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ 1 | பி 2 | ரி 3 | க் 4 | கா 5 |
| ப 6 | ஞ் 7 | சு 8 | ■ | ர் 10 |
| ர 11 | சு 12 | பா 13 | தை 14 | மே 15 |
| ண 18 | ■ | வி 18 | ல் 19 | க 20 |
| ம் 21 | ■ | ம 23 | ன 24 | ம் 25 |

### குறுக்கெழுத்துப் போட்டி – 08

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 8 | 9 | 10 |
| 11 | 12 | ■ | 14 | 15 |
| 18 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

*இடமிருந்து வலம்*

1] 1–5 இவ்வருடம் உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப்போட்டி நடைபெறவிருக்கும் இரு நாடுகளில் ஒன்று.
2] 8–10 ஆரம்பகாலத்தில் எம் மக்கள் மீது குண்டுகளை வீசிய Y–8 ரக விமானங்களை எமது மக்கள் இப்படித்தான் அழைத்தனர். இங்கே எழுத்துக்கள் மாறியுள்ளன.
3] 11–12 கேட்பதற்கான உறுப்பு.
4] 16–20 இது வரைவதற்கு உங்கள் எல்லோருக்கும் ஆசைதான். இங்கே எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
5] 21–25 வர்த்தகம் என்றும் சொல்லலாம். எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
6] 14–15 கட்சியில் 'பி'யை சேர்த்தால் நீரை இறைக்கும்.

*மேலிருந்து கீழ்*

1] 1–21 ஆசியாவின் தெற்கே உள்ள நாடுகளை இப்படிச் சொல்லலாம்.
2] 12–22 பயிர் முளைப்பதற்கு இது தேவை. எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
3] 3–8 தர்மம் செய்வதைக் குறிக்கும்.
4] 4–19 ஏழு சுரங்களில் ஒன்று
5] 18–23 வரி என்றும் சொல்லலாம்.
6] 5–15 முற்காலத்தில் முனிவர்கள் செய்த வேள்வி.

விடைகளை அடுத்த வாரம் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# பிஞ்சுகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சாந்தி, பிள்ளைகளின் மனக் காயங்களுக்கு ஒத்தடம் கொடுத்து, தான் மனதுக்குள் அழுதாள்.

அப்பா பற்றியும் அடுத்தடுத்து புகார் அடிக்கிக்கொண்டு போனார்கள்.

'தொலைபேசி எடுத்தால் மணிக்கணக்கில் பேசுவார். அடுப்பில் உணவு எரிந்து மூக்கில் மணம் நுழையும் வரை'.

'தொலைக்காட்சி பார்த்தால் எமக்கு வீட்டுப் பாடம் கூடச் சொல்லித்தரமாட்டார்.'

அப்பாவின் உழைப்பை உயர்த்திக் குறைகளைத் தாழ்த்தினாள். அப்பாவைப் பற்றிக் குழந்தைகளின் மனதில் தப்பான எண்ணத்தைப் போக்க நினைத்தாள். குறைகளைத் தானே ஜீரணித்துக்கொண்டாள்.

அன்றும் சாந்தி வீட்டுக்கு வந்தாள்...

வீட்டின் நிலைகண்டு தன்னை சுதாகரித்துக்கொண்டாள். அறைவிளக்குகள் அனைத்தையும் அணைக்கும் முன், தூக்கம் குமரனை அணைத்துவிட்டது. மின் விளக்குகளை அணைத்தாள். குழந்தைகளுக்கு நித்திரையில் முத்தமிட்டாள். சமையல் அறை சென்று அனைத்தையும் சுத்தம் செய்தாள். உணவுக் குழையலுடன் குமரனை எழுப்பினாள். வழமையாக 'வச்சிட்டு போம் சாப்பிடுறன்' என்று சொல்பவன் அன்று வழக்கத்துக்கு மாறாகக் கையை நீட்டினான். அவள் உருட்டிக்கொடுத்தாள். குமரன் நிறையச் சாப்பிட்டான். சாந்தி சந்தோசப்பட்டாள்.

அன்று குமரன் மிகத் தெளிவாக இருந்தான். தூக்கத்தில் இருந்து மட்டுமல்ல, விழிப்பு... உண்மையான விழிப்புணர்வுடனும் இருந்தான். 'சாந்தி உம்மோடு கொஞ்சம் கதைக்க வேணும்.' அடுத்த சில நிமிடங்களில் சாந்தி அவனருகில் இருந்தாள்...

வாரும் 'பெட்'றூமில் போய்க் கதைப்பம். குழந்தைகள் எழும்பியிடுங்கள்'

இருவரும் படுக்கையறையினுள் நுழைந்தனர். படுக்கை அறை அன்று பரீட்சைக்களமாகியது. முதன் முறையாக அன்று குமரன் சுய விமர்சனத்துக்குட்பட்டு திறந்த ஜன்னலானான்.

நடந்தது. நடப்பது. நடக்க இருப்பது யாவற்றையும் இருவரும் மனம் விட்டுப் பேசினர். 'புலம்பெயர் மண்ணில் குழந்தைகள் வளர்ப்பு' கலந்துரையாடல் பற்றியும் குமரன் சாந்திக்குக் கூறினான். நடந்த தவறுகளுக்குக் குமரன் வருந்தினான். சாந்தி புத்தி சொல்ல, குமரன் கேட்டான். வார்த்தைகள் தேடிக் குமரன் தோற்றான். வார்த்தைகள் கொண்டு சாந்தி ஜெயித்தாள். சுமைகளை இறக்கி வைத்து குமரன் பஞ்சானான். சாந்தி விக்கி, விக்கி அழுதாள். குமரன் தலை கோதிவிட்டான்.

இறுதியில் குழந்தைகளுக்கான ஒழுங்கு நிரலை இருவரும் இணைந்தே நெறிப்படுத்தினர். புலம்பெயர் நாட்டில் குழந்தைகளின் எதிர்காலம்?

'பிஞ்சுகள் வெம்பலாம்'
'பிஞ்சுகள் காயாகிக் கனியலாம்'
'பிஞ்சிலேயும் பழுக்கலாம்'...

இதுவிடயத்தில் தங்களின் பாத்திரம் என்ன என்பதை இருவரும் புரிந்து கொண்டனர். இப்படிப் படுக்கை அறையில் பயனுள்ள விடயங்கள் பற்றிப் பலமணி நேரம் பேசி அயர்ந்து தூங்கினர்.

பொழுது விடிந்தது...

சாந்தி குழந்தைகளுக்கான கவனிப்புக்கு நேரம் போதாமையைக் காரணம் காட்டி வேலை நேரத்தைக் குறைந்திருந்தாள். குமரன் இரண்டாவது வேலையை விட்டிருந்தான். அடுத்த கலந்துரையாடலுக்கான நாளை இருவரும் ஆவலுடன் காத்திருந்தனர். பிஞ்சுகளுக்கு விடியல் கிடைக்கும் என நாமும் நம்புவோம்.

★ ★ ★

தாயக மண்ணில்...

அகிலன் 6வது தடவையாக இடம் மாறியிருந்தான். இடங்களைச் சொல்லவே அவனுக்கு நாத் தடம் புரண்டது. காலுக்கு 'சொக்ஸ்', சப்பாத்து. வெள்ளைச் சேட், நீலக் காற்சட்டை எனச் சீருடையில் சென்றவன் இப்போது வெளிறிய காற்சட்டை ஒன்றுடன் அரைநிர்வாணமாக இடம்பெயர்ந்த இடத்தில் 'மரநிழல்' பாடசாலைக்குச் சென்றுகொண்டிருக்கிறான்...

அகிலன் அப்பு (தாத்தா)... ஐயா, அம்மா, தங்கச்சி தம்பி என மகிழ்ச்சியான குடும்பமாய் இருந்தவன். ஆனால் இப்போது...

தாயை இழந்து... தந்தையின் ஒரு காலை இழந்து, தங்கையின் மனநிலை குழம்பி... கூடு கலைந்த குடும்பமாய் தெருவீதி எங்கும் அலைந்து தற்போது மரநிழலைக் கூரையாக்கிக் குடிசை அமைத்து வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

யுத்தம் உருவாக்கிய குழந்தை அவன்...

யுத்தம் உருவாக்கி யுத்தம் வளர்த்து, யுத்தம் வழி நடத்திக்கொண்டிருக்கும் வரலாற்றுக் குழந்தைகள் தான் இன்று தமிழீழம் எங்கும். அவர்களின் ஐம்புலன்களும் யுத்தத்தால் காயப்பட்டிருந்தன.

தங்கராஜா, மகேஸ்வரி, சாதியில் சேரமுடியாத இரு துருவங்களாய் இருந்தவர்களைக் காதல் சேர்த்து வைத்தது..

கைத்தறிக்குச் சென்ற மகேஸ்வரியைத் துரத்திச் சென்றான் தங்கராசு.

அவள் கோயிலுக்குச் சென்ற தட்டிவானில் இவன் தொத்தி ஏறினான். தண்ணி அள்ளவரும் வழியில் தவம் இருந்தான். சந்தைக்குச் சென்றவளை சைக்கிளில் துரத்திச் சென்று எட்டி அடித்து தடம் புரண்டு...

ஒரு வழியாகத் தன்னில் அவள் கவனத்தைக் குவியச் செய்தான்.

காதல்... பல சாம்ராஜ்ஜியங்கள் சரிய, உருவாகக் காரணமாயிருந்தது. சாதாரண படிப்புப் படித்திருந்த தங்கராசுவைச் சங்கக்கடை முதலாளியாக்கியது. வழமையான எதிர்வுகள் விசுவரூபம் எடுத்தன. அவனது தந்தை சாதித் தடிப்பில் மார்பில் தட்டினார். குடித்து விட்டுச் சென்ற சில தடித்த மனிதர்கள் மகேஸ்வரியின் வீட்டுவேலியை எரித்தனர். 'மகேஸ்வரி தங்கராசுவுடன் ஓடிப்போனாள்' என மாறிச் சொல்லி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். தந்தை மகன் இறந்ததாகச் சொல்லி தலை முழுக்குப் போட்டார். கிராமம் கடந்த 'காதல் பறவைகள்' தம்பதிகளாகித் தனிக் குடித்தனம் நடத்தினர். முத்துக்கள் மூன்று சொத்தாகக் கிடைத்தன.. மூத்தவன் 'அகிலன்' அடுத்து அகிலா, அரவிந்தன். சமூகத்தில் தலைநிமிர்ந்து மகிழ்ச்சியாக இருந்தனர்.

நாட்டுப் பிரச்சினைகள் குடும்பத்துடன் கூடவே பயனித்தது. பூதாகரமாக ஏதும் நடக்காதவரை அவர்களைப் பாதிக்காமல் இருந்தது. ஆனால் இயல்புநிலை பாதித்தே இருந்தது. தாக்குதலும், இடப்பெயர்வும் அடிக்கடி நடந்தன. உணவு, உடை, உறைவிடம் என அடிப்படைத் தேவைகள் கேள்விக் குறியாகியது. இவற்றையும் மீறி கல்வி தமிழர்களின் உயிர் மூச்சாக இருந்தது. எனவே தொடர்ந்து வந்தது. அகிலன் தங்கை தம்பியுடன் இடம் பெயர்ந்த இடங்களிலும் பாடசாலைக்குச் சென்றே வந்தான்.

யுத்தக் குழந்தைகள் பலவற்றை அறியாமலேயே இருந்தனர். 'ஓடும் ரயிலும் சேராத தண்டவாளமும் புரியாத புதிராக இருந்தது அகிலனுக்கு..

பறக்கும் விமானம் உயிர் குடிக்கும் இயந்திரமே தவிர பயணிகள் பறப்பதற்கு அல்ல' என அகிலாவின் ஆழ்மனம் சொல்லிற்று'...

கம்பியூட்டரும் 'மவுஸ்' சும் வேற்றுக் கிரகத்தரின் சிலேட்டும் சோக்கும் என அரவிந்தன் அதிசயித்தான். இப்படிப் பல கல்வியில் அழிந்தே போயின. காலங்களும் அவர்களைக் கடந்தே போயின...

'காலங்கள் எல்லாக் காயங்களையும் ஆற்றட்டும்'

வயோதிபம்+ வருத்தம்= தங்கராசுவின் தந்தை தன் மகனைத் தேடி வந்தார். பிள்ளைகள் அப்புவின் மேல் அப்பிக்கொண்டனர். அன்று எல்லோரும் முற்றத்தில் கூடி மகிழ்ந்தனர். அப்படி அப்படியே படுத்தும் விட்டனர். தேடிவந்த ஒரு போர் விமானம் வீறு கொண்டது. அக்கிராமத்தைத் தாக்கியழித்தது.

நொடிப்பொழுதில் எல்லாமே நடந்துவிட்டது... புகை கிளம்பி அடங்க முகமிழந்த மனிதர்கள் முகவரி தேடினர். தங்கராசுவின் காலை அவன் தந்தை தூக்கி வந்தார். மகேஸ்வரி சேலையும் சதையும் சேர்ந்த குவியலாய்க் கிடந்தாள். உரு வந்தவளாய் தெருவெங்கும் ஓடினாள் சின்னவள் அகிலா... அகிலனின் தம்பி அரவிந்தன் மயக்கமுற்றான்.

அன்று நடந்த அனர்த்தம் சீராகச் சிலகாலம் பிடித்தது. தாயை இழந்த பிஞ்சுகள் தவித்து நின்றன. காலை இழந்த தங்கராசு கலங்கி நின்றான். இதற்கிடையிலும் இருதரம் இடம் மாறியிருந்தனர்.

'அகிலனாவது படிக்கட்டும்' தங்கராசு தந்தையிடம் பிடிவாதமாய்க் கூறினான். அகிலாவுக்கு மௌன மொழியே




தாய்மொழியாகியது. அவள் கண்ணுக்குள் எப்போதும் தாயின் சதைக்குவியலே தெரிந்தது. மேகத்தை வெறித்துப் பார்த்தபடி அப்புவின் மடியில் கிடந்தாள். அரவிந்தன் தந்தையின் ஒருகாலுக்கு மறுகாலாய் மாறினான். அதனால் படிப்பை நிறுத்தினான். இவர்களும் மனிதர்கள் இங்கேயும் மனிதர்களாக இவர்களது வாழ்க்கை ஓடுகிறது...

.தமிழீழப் பிஞ்சுகள் தரையில் கிடந்தன...

அகிலன், அகிலா, அரவிந்தன்...

அகிலனுக்கும் அரவிந்தனுக்கும் இடையில் அகிலா படுத்திருந்தாள். அனைவரும் அயர்ந்து தூங்கினர். அகிலா மட்டும் அடிக்கடி வாய்புலம்பினாள். வாய்நீர் வடித்தாள். விம்மி அழுதாள். மீண்டும் படுத்தாள். அவர்களின் கனவுகள் ஊதிப் பெருத்தன. விடியும் பொழுது கனவுகள் உடையும். ஆனால் உண்மை விடியலுக்காய்ப் பிஞ்சுகள் ஏங்கின, பிஞ்சுகளுக்கு விடியல் கிடைக்குமென நாமும் நம்புவோம்.

பே. பீற்றர் (வூப்பெற்றால், ஜேர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றித் திருமகள்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 91]

அவர் கூறியது தான் நடந்தது. 05.02.55 இல் P.M.F கவிழ்ந்தார். வழக்கம்போல, கு.அ. தலைவர் கொத்தி பல தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். சிலவாரங்கள் கழித்து அமைச் சரவை அமைந்தது, அதுவும் பின்னர் கவிழ்ந்தது.

புதிய பொதுத் தேர்தல்கள் ஜனவரி 56இல் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது. பிரெஞ்சு மக்கள் ஒன்றிணைப்புக் கட்சியில் இருந்து விலகிய பிறகு, டிகோலுக்கு முன்பே சர்ச்சில், ரூஸ்வெர்ட் முதலிய வர்கள் செய்தது போல், ஜெனரல் தனது 2வது போரின் அனுபவங்களை, நினைவுகளை எழுதினார்.



அக்டபர் 54இல், ‘அறை கூவல்’ [பிரஞ்சில் Appel] என்ற பெயரில், முதல் பகுதியை வெளியிட்டார். ஏறத்தாழ 500 பக்கங்கள் கொண்ட நூல்-அருமையான பிரஞ்சு நடை. உண்மையான, உள்ளத்தில் இருந்து வெளிவந்த கருத்துக்கள், தேசப் பற்று, தியாகம், கடமை உணர்வு ஆகிய சிறப்புக்கள்-இவற்றுடன் அந்த நூல் பெரிய வெற்றி கண்டது. ஒரே மாதத்தில் 95.000 நூல்கள் விற் பனை ஆயின.

டிகோலுக்கு இந்த மகத்தான வர வேற்பு மகிழ்வையும், திருப்தியை யும் அளித்தது. பிரஞ்சு மக்கள் அவரை மறந்துவிட வில்லை. பிரஞ்சு மக்களின் உள்ளத்தில் தேசப்பற்று உள்ளது. தேவை ஏற்படும்போது, அவர்கள் அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவார்கள் என்ற நம் பிக்கை பிறந்தது.

உற்சாகமாக, நூலின் இரண்டாவது பகுதியை, ‘ஒற் றுமை’ (Unité] என்ற பெயரில் எழுத ஆரம்பித்தார்.

1956 ஆரம்பத்தில், நாட்டில் பொதுத்தேர்தல் நடந் தேறியது. பிரஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் அன் றைய பொதுச் செயலாளர் கீ மொல்லே [Guy Mollet). ‘...எங்களுக்குப் நீங்கள் பெரும்பான்மை அளித்தால், உடனே அல்ஜீரியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, சமாதானத்தை ஏற்படுத்து வோம்....’ என்று உறுதி அளித்தார்.

அவர் கட்சி முன்னணியில் வந்தது. அவருக்கு முழு பெரும்பான்மை இல்லை. ஆனாலும், சில சிறு கட்சிகளும் அவரை ஆதரித்தன. அவர் பிரதமர் ஆனார். பேச்சுவார்த்தை, சமாதானம் ஆகிய கருத் துக்களுடன் அவர் அல்ஜீரியா சென்றார். அங்கு, அல் ஜீரியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தக்கூடாது என்று விரும்பிய ‘கருப்புக் காலர்’ [Pieds noirs] என்ற அல்ஜீரியாவில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் ஆர்ப் பாட்டம் நடத்தி, பிரதமர் மீது அழுகிய முட்டைக ளையும் தக்காளிப் பழங்களையும் வீசினர்.

மொல்லே கலவரம் அடைந்தார். அவர் ஒரு உறு தியான தலைவர் அல்ல. அழுகிய முட்டைகளும், தக்காளிகளும் அவரது கருத்தை மாற்றின. பேச்சு வார்த்தை சமாதானம் என்று கூறி ஆட்சிக்கு வந்த வர். போரைத் தீவிரமாக்கினார். கட்டாய இராணுவச் சேவை செய்யும் இளைஞர்கள் அல்ஜீரியாவுக்கு அனுப்பப்பட்டனர். பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது. கேட்ட ஆயுதங்கள் எல்லாம் இராணுவத்துக்கு அளிக்கப்பட்டன. மிக அதிக அள வில் கைதுகள் கைது ஆனவர்கள் மீது சித்திரவதை கள், பெண்கள் மீது பாலுறவுக் கொடுமைகள், கிரா மங்கள் அழிப்புகள் எனக் கொடுமைகள் அதிகரித் தன. [1994-95இல் சந்திரிகா சமாதானம் பற்றி ஆட் சிக்கு வந்த சூழ்நிலை, போரைத் தீவிரப்படுத்தி யமை, இவற்றை வாசகர்கள் ஒப்பிடலாம்]

சித்திரவதைக் கொடுமைகளை, ஜெனரலின் கவனத்துக்கு அவரது அண்ணன் மகள் Geneviève வும், அவரது தோழி Germaine Tillon னும் கொண்டு வந்தனர்.

‘சித்திரவதைக் கொடுமைகளை எதிர்த்து நீங் கள் போராடுங்கள். நான் நேரிடையாகத் தலையிட் டால், அரசினர் ஆத்திரப்படுவர். நிலைமையும் மாறாது’ என்று அவர் தெரிவித்தார்.

1940-44 இல், அவருடன் நாட்டு விடுதலைக்குப் போரிட்ட, அல்ஜீரியாவில் சித்திரவ தைக் கொடுமைகளைப் பகிரங் கமாகக் கண்டித்து, அதனால் பாதிக் கப்பட்ட ஜெனரல் de Bollardière என்பவரும் ஜெனரலைச் சந்தித் தார். எதிர்த்தரப்புப் போராளி ஒரு வரை, அல்லது பொதுமக்களைச் சித்திரவதை செய்வது முறையற்ற, கண்டிக்க வேண்டிய செயல்’ என்று அவரிடம் டிகோல் குறிப்பிட்டார்.

ஒருநாட்டில், ஒரு பலவீனமான அரசு ஆட்சியில் இருந்தால், அந்த நாட்டுக்குப் பல துயர அனுபவங் கள் கிடைக்கும் என்பதும், அதனால் தான், பிரான்சு நாட்டு அரசு பலமானதாய் இருக்க வேண்டும் என்பதும் டிகோலின் நீண்ட நாள் கருத் துக்கள்.

பிரான்சின் நலன்களைப் பாதித்த கடுமையான நடிவடிக்கை ஒன்றை, அன்று எகிப்து நாட்டின் குடி யரசுத் தலைவராய் இருந்த கமால் அப்துல் நாசர் எடுத்தார்.

19-வது நூற்றாண்டில், மத்திய தரைக் கடலை யும், சிவப்புக் கடலையும் இணைத்து, பிரஞ்சு என் ஜீனியர் Ferdinand de Lesseps என்பவர் சூயஸ் [Suez] கால்வாயைத் தோண்டினார். அதனால், அந் தக் கால்வாயைப் பயன்படுத்திய கப்பல் ஒவ்வொன் றும் பிரான்சு அரசுக்கு ஒரு தொகையை அளித்து வந்தது. பின்னால், எகிப்தை இங்கிலாந்து அடிமைப் படுத்தியபோது, பிரான்சுடன் இங்கிலாந்தும் சேர்ந்து கொண்டு, அப்படி ஒவ்வொரு கப்பலும் செலுத்திய தொகையைப் பங்கிட்டுக்கொண்டன.

காய்வாய் எகிப்தில் இருந்தும், இந்தக் கால்வா யால் எகிப்து ஒரு இலாபமும் பெறவில்லை.

எகிப்தின் தென்பகுதியில், நைல் நதி மீது அசு வான் என்ற இடத்தில், பெரிய அணையைக் கட்டி, அதன் மூலம் மின்சார உற்பத்தியை அதிகரிக்கவும், நாட்டின் வட பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் இடம் பெற்ற வெள்ளப்பெருக்கை நிறுத்தவும் எகிப்து திட் டமிட்டது. இதற்குப் பெரிய அளவில் நிதி தேவைப் பட்டது.

எகிப்து, அமெரிக்காவிடம் கடன் உதவிகேட்டது. அமெரிக்கா இக்கடனை அளிக்க மறுத்துவிட்டது.

உடனே, எகிப்தின் தலைவர் நாசர், பிரஞ்சுக்காரர் களுக்கும், ஆங்கிலேயருக்கும் சொந்தமான சூயஸ் கால்வாயை, எகிப்தின் சொத்து என்று தெரிவித்து, அங்கிருந்து பிரஞ்சுக் காரரையும், ஆங்கிலேயரை யும் விரட்டி அடித்துவிட்டு, இனி சூயஸ் கால் வாயைப் பயன்படுத்தும் கப்பல்கள் எகிப்துக்குப் பணம் அளிக்கவேண்டும் என்று அறிவித்தார்.

இந்த நாசரின் முடிவு, இரு மேற்கு வல்லரசுக ளுக்கும் பிடிக்கவில்லை. எதிர் நடவடிக்கை எடுக் கத் திட்டமிட்டன. [தொடரும்]

# கவிக்களம்

## இந்தப் புத்தாண்டு

வாணங்கள் சீறியெழுந்து
வானத்தை எட்டித்தொட்டு
வண்ணமாய் ஒளிகொடுக்க
திண்ணமாய் நாமும்
வரவேற்போம் புது வருடமதை

சித்திரையாளின் வருகையிலே
நியாயங்கள் தைரியமாய்
முன்னெழுந்து வழிவிடவேண்டும்
அமைதித்தென்றல் அவனியில் வீசி
பொங்கும் மங்கலம் எங்கும்
தங்கிடவேண்டும்

மனித இனம் மண்ணில் என்றும்
மாண்புடன் வாழ்ந்திடவேண்டும்
பறக்கின்ற பறவைகளின் மகிழ்ச்சி தன்னை
பாருலகம் கண்டிடவேண்டும்
மனித நேயம் விழித்தெழுந்து
இனிமைகள் எங்கும் மிளிர்ந்திடவேண்டும்

புதுவருட உதயமதில் புதுப்பூமியொன்று
சடுதியாய் மலர்ந்திங்கு சங்கீதம் பாடிவர
தெருவோரம் இன்னலுறும்
தமிழினம் துன்பம் கலைந்து
இன்பத்தில் திளைக்கவேண்டும்

வளம் நிறை வாழ்வு வையகம்தனில் நிலைத்து
பகுத்தறிவு பரந்து பல வளங்கள் சேர்ந்து
சஞ்சலமகன்று சமரசம் நிலைத்து
இதயக் கதவு இயல்பாய்த் திறந்து
ஏற்றங்கள் கண்டு ஏக்கங்கள் தவிர்த்து
இந்தப் புத்தாண்டு வீறுநடைபோடவேண்டும்.

– பகீரதி சுதேந்திரன் (ஜேர்மனி)


சென்–தெனி தமிழ்ச் சங்கத்தின்

**3வது ஆண்டு நிறைவு விழா**

சென்–தெனி தமிழ்ச்சோலை சிறார்களது திறமைகளையும் சங்கச் செயற்பாடுகளையும் கண்டுகளிக்க வாருங்கள்!

காலம்: 28.04.2002 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 3.00 மணிக்கு
இடம்: Bourse de Travail
9/11 Rue Genin
93200 Saint-Denis
Metro: Porte de Paris (Ligne 13)

தமிழ்ச்சோலை நிர்வாகம் சென்–தெனி
தொடர்புகளுக்கு: 06 09 44 93 41
01 48 09 23 94



டென்மார்க் வாழ் அனைத்து தமிழ் மக்களதும் நம்பிக்கையைப் பெற்ற ஓரேயொரு பிரயாண முகவர் நனா ரவல்ஸ்.

Srilankan Airlines இன் டென்மார்க்கின் ஏக விற்பனையாளர்கள் நாமே.

தொடர்புகளுக்கு: **நனா ரவல்ஸ்**

| DENMARK | LONDON | SRI LANKA | INDIA |
|---|---|---|---|
| Mr.Neilwashington<br>Nanna Rejser<br>Fredensgade 1<br>7400 Herning<br>T.P. 0045-97 21 41 47<br>Mobil. 27 44 36 06<br>Fax 00 45 97 21 42 47<br>nannatravels@mail.dk | Mr.S.Thasan<br>Nanna Travels Ltd<br>14 pinglestone close<br>Westdrayton, Middx<br>UB7 0DL, England<br>T.p: 0044-2088979694<br>Mobil-0044-7789268979<br>nannatravels@hotmail.com | Mr.S.Rajan<br>Nanna travels Ltd<br>S-82 Bristol Street<br>Colombo-1<br>Srilanka<br>T.P.0094-74 71 28 35<br>Fax-00 94-74 71 49 90<br>nannatravels@vsnl.com | Mr.Kevin joseph<br>Nanna travels<br>no. 71 Kasiestate<br>Ashokngar, madras 83<br>T.p.0091 44 48 96 325<br>Mobil -0091 98 41 08 98 35<br>fax-0091 44 48 93 991<br>nannatravels@vsln.com |

Pub D **Nanna Travels**

**Denmark**

எமது தற்போதைய விலை விபரங்கள்

**Airlanka**
Billund-Colombo- 5555+Tax
Copenhagen-Colombo- 5055+Tax
Billund-Madras- 5620+Tax
Copenhagen-Madras- 5240+Tax

**Lufthansa**
Billund-Madras- 6300+Tax
Billund-Singapore - 5250+Tax

**Emirates**
Billund-Colombo- 6100+Tax

**GulfAir**
Billund-colombo- 4995+Tax
Billund-Madras- 4875+Tax

நாம் **Airlanka, Kuwait Airways, Gulfair, Singapore Airlines, Emirates, Thai, Maersk** போன்றவற்றின் நேரடி முகவர்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?

அரும்பாகி, மொட்டாகி, பூவாகி, காயாகிக் கனிந்துவரும் காலம் இது. வேர்விட்டு, முளைவிட்டு,தண்டெடுத்து, இலைவிரித்து, கிளைவிட்டு, விழுது ஊன்றி, விருட்சமாகும் காலம் இது. எங்கள் வயலில் எவரையும் உழவிடாக்காலம் இது. எங்கள் கடலில் எவரையும் வலை வீச விடாக்காலம் இது. குளம் வெட்டினதும் நாங்களே. வளம் பெருக்கினதும் நாங்களே. பலம் பெற்றதும் நாங்களே. நிலம் மீண்டதும் நாங்களே. நிலம்தொட்ட காலில் உறுதி இருந்தது. வான் முட்டும் கையில் இறுக்கம் இருந்தது. உணர்வூட்டும் நெஞ்சில் ஓர்மம் இருந்தது. உரப்பேற்றும் முதுகில் கூனல் விழுந்ததில்லை. கைகளை அகல விரித்தோம். அக்காணி நிலம் முழுதும் எமதென்றோம். கால்களால் எட்டி நடந்தோம். பதிந்த சுவடுகளின் பரந்த தேசத்தை நமதென்றோம். நெஞ்சார்ந்து, நினைவு கிளர்ந்து, வந்த வாழ்வை வரவேற்றோம். வசந்தம் அது எனப் பாடினோம். வேப்ப மரக்கிளையில் குயில் கூவியது. மருதமர நிழலில் மயில் ஆடியது. புறாக்கள் குறுகுறுத்துப் பறந்தன வயல் வெளி எங்கும். சிட்டுக்குருவியின் சிறகடிப்பில் குளிரொன்று தடவியது. வண்ணத்துப்பூச்சியின் ஒரு பறப்பில் அழகொன்று வீசியது.

இதற்கு மிஞ்சி என்னால் அதிகம் சொல்ல இயலவில்லை. எங்கள் வாழ்வை அதன் வரண்ட பாலைவனத்துடனும் வளமான நதி ஊற்றுடனும் கண்டுவிட்டேன். கவலைகொண்டேன், களிப்பும் கொண்டேன். எதுவாய் இருந்தாலும் அது எங்களது என்பதில் மகிழ்வே மிஞ்சியது. அனுபவமே ஆசான் என்பதால் கவலைகளையும், கனத்த இதயத்துடன் மகிழ்வாய் செமிக்கப் பழகினேன். எல்லாமும் எமக்காய் இருந்தது. எல்லாவற்றிலும் நாம் இருந்தோம். யாவற்றிலும் வெற்றிகொண்டோம். வீழ்ந்தோம் என்றொரு சொல் வரவிட்டதில்லை. வீழ்ந்த கதை வந்தபோது, வெல்லும் செய்தியின் முதற்படியாய் அதனை மாற்றினோம். இழந்தோம்தான். எத்தனை கோடி கோடி! பெறுமதி மிகுந்த எத்தனை எத்தனை இன்னுயிரை இழந்தோம்! ஆயினும் பெறுவதற்கு ஒன்றுண்டு என்னும் அளப்பெரும் நம்பிக்கையில் அத்தனையும் தாங்கினோம். அவ்வளவும்தான்! எட்டாக்கனி என்று நாம் ஏங்கியிருந்தது, கையில் எட்டும் கனியாகி வரும் போதில் வாழ்வில் இருள்படர்கிறது. ரஷ்யாவிலும், சீனாவிலும், கியூபாவிலும், வியட்நாமிலும், நிக்கரகுவாவிலும் மாத்திரம்தான் நிகழும் என்று நம்பியிருந்தது நம்மூரிலும் நிகழ்ந்து நிறைவுறுகிற நேரம், நமக்கோர் இடி விழுந்தது. நிலம் பிளந்தது.

அஞ்சுகிறேன். அத்தனையும் கைவிட்டு கழன்று விடுமோ என நான் அஞ்சுகிறேன். மெய்யாய் வலுத்தது பொய்யாய் நிலைத்திடுமோ என நான் அஞ்சுகிறேன். பனையாய் நெடுத்தது தினையாய் சிறுத்திடுமோ என நான் அஞ்சுகிறேன். ஆலாய் விரிந்தது அறுகாய் சுருங்கிடுமோ என நான் அஞ்சுகிறேன். கடலாய் பரந்தது குளமாய் குறுகிடுமோ என நான் அஞ்சுகிறேன். என் தந்தை, தந்தைக்கும் தந்தை, அவன் சொன்னான்:

*தண்ணீர் விட்டோ வளர்த்தோம்*
*சர்வேசா இப்பயிரைக்*
*கண்ணீரால் காத்தோம்*
*கருகத்திருவுளமோ*

கருகி விடுமோ? மொட்டிலேயே மூச்சு விட்டு விடுமோ? பழமாகுமுன்னரே அழுகி வீழ்ந்திடுமோ? காலம் நம் கையில் இல்லையா? எல்லாம் எதிராய்ப் போகிறதா? நினைந்து நினைந்து வேதனையும் நீள ஓர் துயருமாய் ஆகிறதா?

எங்கள் வாழ்வு கண்ணீராலும், செந்நீராலும் எழுதப்பட்டது. வரலாற்றின் பக்கங்களைப் புரட்டுகையில் மகிழ்ந்த காலத்திலும் அழுத காலம் அதிகம். எங்கள் வளவினுள் நாம் வாழ்ந்தது கொஞ்சமே! எங்கள் வீட்டினில் நாம் வசித்தது சொற்பமே! எங்கள் வாசலில் நாம் இருந்தது கொஞ்சமே. எங்கள் முற்றத்தில் நாம் திரிந்தது சொற்பமே. எங்கள் கிணற்றினில் நீர் உண்டது குறைவே. அன்னிய வளவினிலும், அன்னிய வீட்டினிலும், அன்னிய வாசலிலும், அன்னிய முற்றத்தினிலும், அன்னிய கிணற்றினிலும், அன்னிய வீதியிலும், எங்கள் காலம் அதிகமாய்க் கழிந்தது. எப்போ எங்கள் வீடேகுவோம், எப்போ எம் வளவில் கால் வைப்போம், எப்போ எம் வாசலில் குந்தி இருப்போம், எப்போ எம் முற்றத்தில் நிலாக் காண்போம், எங்கள் கிணற்றில் எப்போ நீர் உண்போம், எங்கள் வீதியில் எப்போ உலாப்போவோம்? என்று ஏங்கிய வாழ்வாய் நம் நாட்கள் கழிந்தன. நிலம் துறந்து, இடம் பெயர்ந்து, புலம் பெயர்ந்து, காடு தாண்டி, கடல் கடந்து, மலை ஏறி, வேற்று மண்மிதித்து அகதியாகி அல்லல்பட்டு அவலமாய் நாட்கள் நகர்ந்தன. எம் வாழ்வு இதுவல்ல; எல்லோர் வாழ்வும் இதுவாக ஆயிற்று.

வியர்வையும், குருதியும், உயிரும் கலந்து பிசைந்து ஒரு காலம் செய்தனர் நம் தோழர். அக்காலத்தில் வீர காவியம் பாடினர் அவர்கள். செய்தனர்; செயற்கரிய

**மாயோன் எழுதுவது...**

செய்தனர். உலகில் எவரும் பாடாவரலாறு பாடினர் அவர்கள். எத்தனை புயல்கள் வந்தன. 'ஓம்' என்று எழுந்து நின்றனர். எதிர்த்து வென்றனர். எத்தனை எரிமலைகள் வெடித்தன. அதனை அறிந்தோம்தானே! பூகம்பம் புரண்டது; பூமி பிளந்தது. அத்தனையும் தெரிந்ததுதானே? என்ன செய்தனர் எம்தோழர்? எதற்கும் அஞ்சினரா? எதனையும் எதிர்கொண்டனர், வென்றனர். வெற்றி அன்றி வேறு சொல் அறிந்திலர்.

*நஞ்சைக் கழுத்தில் மாலையாய்*
*அணிந்தோரின்*
*நெஞ்சம் நிறைந்த நெருப்பு*

நிறைந்த நெருப்பில் நீறாக்கினர் எதிரிகளை வித்தாய் நிலத்தில் விதைக்கப்பட்டன பதினேழாயிரம் உயிர்கள். பெறுவதற்கு ஒன்றுண்டு என்னும் பெரும் பேற்றில் இத்தனையும் இழந்தோம். இன்னும் இழப்பதற்குத் தயாரானோம். இழந்த உயிர்களின் இலட்சியத்தை இழப்போமா?

*எண்ணமெல்லாம் நெய்யாக*
*எம்முயிரினில் வளர்ந்த*
*வண்ண விளக்கிஃது*
*மடியத் திருவுளமோ*

மடிவோமா? மடிந்துபோகுமா? முடிந்துபோக வேண்டியது; முடித்து வைக்க வேண்டியது மீண்டும் துளிர் விட்டெழுந்து, தளிர்விட்டுத் தழைத்து எம்மைத் தாழச் செய்ய நாம் அனுமதிக்கப் போகிறோமா?

நான் கண்டேன் ஒருநாள். தனித்துப்போன காலொன்றினை. செருப்பும் சப்பாத்தும் அணியாக் கால் அது. காற் சங்கிலி அதில் இல்லை. நகத்தில் சாயப்பூச்சும் இல்லை. புழுதி அதில் இருந்தது. கணுக்காலில் குருதி வடிந்திருந்தது. தனித்துப்போன கால். தண்டவாளத்தின் அருகே அது இருந்தது. உடலிலிருந்து துண்டுபட எறிபட்டகால் அது. அந்தக் கால் என்ன செய்திருக்கும்? கன மைல் நடந்திருக்கும்; கல்லிலும் முள்ளிலும் ஏறி இறங்கியிருக்கும். காடு கடந்திருக்கும். பட்டினி கிடந்து பசியால் மெலிந்து நடக்கும்போது துவண்டிருக்கும். செய்யும் வேலையின் சிறப்பு எண்ணி, அந்த வேலையின் அழுத்தம் கருதி துவண்ட கால் நிலம் ஊன்றி நிமிர்ந்திருக்கும். நேராய் நடந்திருக்கும். செயற்கரிய செய்ய பலம் ஏற்றியிருக்கும். கடுக்கக் காத்திருந்திருக்கும். எங்கள் எதிரியானவனின் உடல் கிழிக்க, உயிர் பறிக்க ஓடிப்போயிருக்கும். உயிர் மூச்சை விட முன்னம் உதறிப் பாய்ந்திருக்கும். இப்படி எத்தனை கால்கள்! எத்தனை தலைகள்! எத்தனை கைகள்! எத்தனை கண்கள்! பல நூற்றுக்கணக்கான உயிர்கள்! இத்தனை உயிர்போக்கி நாம் அடையவேண்டாமா ஆனந்த சுதந்திரம்?

*ஓராயிரம் வருடம்*
*ஓய்ந்து கிடந்த பின்னர்*
*வாராது போல வந்த*
*மாமணியைத் தோற்போமோ*

தோற்கத்தான் போகிறோமா? துவண்டு வீழத்தான் போகிறோமா? ஏற்கத்தான் ஏதுமில்லையே? ஏதும் கேட்க யாருமில்லையே!

இப்போது வருகிறான் எதிரி. என்ன நலம் நோக்கி வருகிறான்? நம் பலம் பார்த்தபோதும் வரவில்லையே! ஒவ்வொரு நாளும் அழுதோம். ஓங்கிக் குழறினோம். ஓவென்று கதறினோம். ஒப்பாரி வைத்தோம். அப்போது ஆரும் இரங்கவில்லையே! இப்போது எதற்கு வருகிறாய்? எங்களில் இரங்கியா? இல்லை, உன்னால் ஏதும் செய்ய இயலாதென்றா? எதையும் நாம் நம்பவில்லை.

ஐம்பத்தெட்டிலிருந்து அடி அடியாய் வாங்கினோமே! உதை உதையாய் மிதிபட்டோமே! வதை வதையாய் சிதைபட்டோமே! இலட்சக் கணக்கில் உயிர்களை அல்லவா இதுவரை இழந்திருக்கிறோம். எதையும் நாம் மறந்ததில்லை. எந்த துரும்பையும் நாம் மறந்ததில்லை. எதை நாம் மறக்க? ஓடிப்போய் ஒளிந்து கொண்ட தேவாலயத்தில் ஒரே நாளில் நூற்றுக் கணக்கில் உயிர்களைச் சிதைத்தாயே!

ஐம்பத்தெட்டென்றும் எழுபத்தேழென்றும், எண்பத்தி மூன்றென்றும் எம்மவர் உயிர் அழிக்க எத்தனை வன்முறைகள். 'போர் என்றால் போர் சமாதானமென்றால் சமாதானம்' என்று சொன்னான் ஒருத்தன்: அவன் மருமோன் இப்போ சமாதானம் என்கிறான். எண்பத்தி மூன்றில் எத்தனை தமிழ் உயிர்களைக் கொன்றாய், குவித்தாய், மறந்தோமா? வன்னிக் கிராமத்தில் வறிய தந்தையொருவன் தன் பிள்ளைச் செல்வங்களின் எலும்புகளை கூட்டி அள்ளினானே! என்ன பாவமடா அவன் செய்தான்? தமிழனாய்ப் பிறந்ததா? கொக்கட்டிச்சோலைக் கொலைகளை மறப்போமா? மருந்திலாது, உணவிலாது மாணடவர் எத்தனை!

***நாயும் பேயும் நிணம் புசிக்க செம்மணியில் வீசுதற்கா எம்மை ஈழத்தாய் பெற்றெடுத்தாள்.***

எத்தனை எத்தனை அக்கிரமம், அநியாயம் செய்தாய்? அதர்மத்தின் தலைவனாய் கொலுவீற்றிருந்தாய். இப்போ என்ன நடந்தது உனக்கு? ஏன் இந்தப் போலிச் சமாதான முகமூடி? உன் அப்பன், அவன் அப்பன், அவன் அப்பன், அவன் அப்பன் காலம் தொட்டு ஏமாந்தோமே! இனியும் ஏமாறுவோமா?

இல்லை. விட்டுக்கொடுக்காத் தலைமை உண்டு. விடுதலை வேட்கை நிறைய உண்டு. சொட்டும் பிசகா இலட்சியம் உண்டு. சுதந்திரம் பெறும் உறுதி உண்டு. தலைவரை நம்புகிறோம். அவர்தம் தளபதிகளை நம்புகிறோம். போர்க்குணம்மிக்க போராளிகளை நம்புகிறோம். உறுதியோடு உணர்வெழுப்பும் மக்களை நம்புகிறோம். மகத்தான காலத்தை நம்புகிறோம்.

*நின்று ஒருதரம் நிமிர்ந்து*
*மூச்சு விடுவோம் என்கிறீர்களா?*
*நன்று அதை நம்புகிறோம்*
*நாளை நம் கையில் நம் தேசம்*
*அப்படித்தானே?*


வோல்த்தம்ஸ் ரோவில் இரண்டாவது வருடத்துக்குள்

எட்ட நின்றாலும்
கிட்ட வந்தாலும்
அதே மாறா
அழகு தரும் நகைகள்
தங்க நகைகளுக்கான
தனியான ஓர் மாளிகை
ATN Jewellery

ATN Jewellery

37, Palmerston Road, E17 6PR
Tel: 020 8521 9767
Fax: 020 8521 1281

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



Pub.Lon.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்வுறும் தமிழ்க்கல்வி...

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலம் கல்வி மொழியாகவும் அரச கருமமொழியாகவும் அமைந்திருந்தது.

பாடசாலைகளில் ஆங்கில மூலமே அனைத்துப் பாடங்களும் [தமிழ்மொழி நாள் தோறும் ஒரு பாடவேளை மட்டும்] கற்பிக்கப்பட்டு வந்தன. அரச அலுவலகங்களில் அலுவல்கள் அனைத்தும் ஆங்கிலமொழியில் இடம்பெற்று வந்தன. அதனால் அன்றைய நம் சிறார்களுக்குத் தாய்மொழிக் கல்வி முற்றாகக் குன்றியிருந்த நிலையில், ஆறுமுகநாவலர் அவர்களின் முயற்சியால் அவர்தம் மாணாக்கராகவிருந்து பலர் அவரிடம் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை இலவசமாகத் துறைபோகக் கற்றனர்.

நாவலர் பெருமான் மட்டுமன்றி இம்மாணாக்கர்களும் தமிழ்மொழியை இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபுற விளங்கிக்கற்று, யாரும், தமிழ்மொழி இலக்கணம் இலக்கியம் தொடர்பான ஐயப்பாடுகளைக் கேட்டறிந்து தெளிந்து கொள்ளும் தமிழ்க் களஞ்சியங்களாக, உரை கற்களாக விளங்கினர். அத்தோடு இத்தமிழ் மாணாக்கர்களே நாவலரவர்களின் வேண்டுகோளின் பெயரில் தத்தம் கிராமங்களில் தம் வீடுகளின் திண்ணைகளில், இரவுகளிலும் பகல்களிலுமாக இளைஞர்களைக் கூட்டிவைத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆர்வத்தோடு இலவசமாகக் கற்பித்து வந்தனர். இக் குருமுதல்வர்களுள் பலர், தத்தம் கிராமங்களுள், ஊர்ச் செல்வந்தர்களின் உதவிகளை, அக்காலம் மக்கள் மத்தியில் தம் சீரிய, நேரிய, கூரிய சமூகதமிழ் சைவப்பணிகளூடு செல்வாக்குப் பெற்றிருந்த ஆறுமுகநாவலர் மூலம் பெற்று, தமிழ்மொழி மூலமாகப் பாடங்கள் கற்பிக்கப்படும் தமிழ்ப்பாடசாலைகளைத் தொடக்கி இலவசமாகத் தமிழ்மொழிக் கல்வி வழங்கித் தமிழறிவு சமூகத்தில் தளர்ந்து போகாது காப்பாற்றி வந்தனர். ஆறுமுகநாவலர், நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர், கோப்பாய்ச் சபாபதி நாவலர், இருபாலைச் சேனாதிராய முதலியார், வித்துவான் ந.ச. பொன்னம்பலபிள்ளை, புன்னாலைக்கட்டுவன் வித்துவான் கணேசையர், இணுவில் மு. வேங்கடாசலம் ஐயர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர், இணுவில் பொன் அம்பிகைபாகர், வித்துவான் ந. சுப்பையாப்பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலானந்தர் முதலியவர்கள் இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தில் தமிழ் இலக்கண இலக்கிய அறிவு தளராமற் காத்த தமிழ்க்காவலர்கள். அந்நிய ஆங்கில மொழியின் மேலாண்மையால் தமிழ்க் கல்வி அழிந்துவிடாமற் காத்த தமிழ் நெஞ்சர்கள் என்பது வரலாற்று உண்மை. இந்த ஈழத் தமிழறிஞர்களின் மாணாக்க மரபில் வந்தவர்களே அண்மைக் காலம்வரை ஒளிவீசிச் சென்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு வித்துவான் வீ.சி. கந்தையாபிள்ளை, இலக்கண வித்தகர் நமசிவாயம் போன்றவர்கள்.

இத்தகைய இரு தலைமுறைகளின் காலத்திலும், ஒரு பகுதி ஈழத்தமிழ் மாணாக்கர்கள் ஆங்கிலக்கல்லூரிகளில் ஆங்கில மொழியூடு கல்வி கற்றிருந்த காலத்திலும், இத்தகைய முறைத் தமிழர்கள் எழுதிய தமிழ்மொழியூடான கட்டுரைகள், கதை, கவிதை போன்ற ஆக்கங்கள், நாளேடுகள், சஞ்சிகைகளிலிடம்பெற்ற எழுத்துரைகள் இலக்கண வழுவற்றவையாகவும் தப்பித்தவறி வழுக்கள் கொண்டமைந்தால் உடனுக்குடன் தமிழுலகால் சுட்டிக்காட்டப்பட்டும் பரிகாசம் செய்யப்பட்டும் திருத்தப் பெற்றவையாகவும் விளங்கி வந்துள்ளன.

தமிழ்மொழிக்கு- தமிழிலக்கணத்துக்கு ஓர் ஊறு ஏற்பட்டால் தங்கள் கண்ணுக்கு ஏற்பட்ட இரத்தக் காயமாகக் கருதித்துடிக்கின்ற தமிழறிஞர்களே அக்காலத்து ஈழத்தில் பெருமளவில் இருந்தார்கள். அன்றைய தமிழ்ப்பற்று அத்தகையது. அதனால் அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள், அச்சிடப்பட்ட நூல்கள் பின்னால் வரும் தமிழ்த் தலைமுறைகளுக்குப் புடமிட்ட தங்க அணிகளாக வழங்கப்பட்டன.

அந்நிய மொழியில் அல்லாமல் தாய்மொழியிலேயே பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கப்படவேண்டும் என்பதற்கு இரு முதன்மையான நோக்கங்கள் உண்டு. முதலாவது, பிள்ளை அந்நிய மொழியைக் கற்றுத் தேறுவதில் அவன் முற்பாக இளமை கழிய, பிற்பாக இளமையிலே கல்விப்பொருளை அதையும் அரைகுறை விளக்கத்துடன் கற்க நேர்வதால் அவன் உயர்கல்வி தாமதிக்கிறது. தாய்மொழியிலெனில் அவன் கல்வி முன்னேற்றம் வேளையோடு ஆரம்பமாகி அவன் உச்சிவரை செல்ல முடிகின்றது என்பது. அடுத்த நோக்கம் தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களும் உயர்கல்வி வரை கற்பிக்கப்படும்போது, அப் பாடங்களில் தாய்மொழியிலமைந்த நூல்களும், அந்நூல்களூடு அவ்வத்துறைக் கலைச்சொற்களும் உருவாக்கப்பட்டு, அம்மொழி காலத்துக்குப் பொருந்தும் வளர்ச்சியை அடைவதோடு, பயிலும் மாணவனும் காலத்தின் கருத்துக்களை அம்மொழியில் தங்கு தடையின்றிச் சரியாக விளங்கவும், சரியாக வெளியிடவும் வல்லமை பெறுவான் என்பதாகும்.

ஆனால் ஈழத்தைப் பொறுத்தமட்டில், தாய்மொழியூடே இன்று தமிழ்ச்சிறார்கள் உயர் கல்விவரை கற்கும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுப் பல ஆண்டுகள் கழிந்த நிலையிலும், இரண்டாவது நோக்கப்படி தமிழ் மாணவர்கள் காலக்கருத்துக்களை வழுவற்ற மொழிநடையில் தாய்மொழியில் வெளியிடும் ஆற்றல் பெற்றிருக்கிறார்களோ என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும். இந்த உண்மையை, இந்தக் காலப்பகுதியில் கல்விபெற்று, இன்று ஆசிரியப்பணியில் உள்ளவர்களும், ஊடகங்களில் பணிபுரிபவர்களும், அரச திணைக்களங்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களும், தமிழ்மொழியை பேச்சில் அன்றி எழுத்திலுமே வழுக்கள் மலிந்ததாகவே கையாளுவதிலிருந்து தெளியலாம். அதிலும் மிகுந்த மனவருத்தத்துக்குரிய செய்தியாவது ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் செம்மைக்கும் காலாக விளங்கும் இலக்கியங்களில் கூட இன்று இங்கு தமிழில் மொழிவழுக்கள் பெருவழக்காகி விட்டுள்ளமைதான்.

இத்தனைக்கும் சமகாலத்தில் ஈழத் தமிழ்த் தலைமுறையிடம் ஏற்பட்டுள்ள அபாயகரமான ஒரு மனப்பாங்குதான் காரணம். அதாவது எதையும்- எவ்வெண்ணக்கருவையும் படிப்பவர் புரிந்துகொண்டாற்போதும் என்று எழுதுபவரும், படிப்பவரும் கருதுவதுதான். அந்தக் கருத்து வெளிப்பாட்டின் செப்பம் பற்றி யாரும் கவலைகொள்வதில்லை. இதனோடு ஒட்டி எழுந்துள்ள இன்னொரு குறைபாடுதான் தமிழில் ஏற்ற சொல் ஞாபகத்துக்கு வராவிட்டால் அல்லது இல்லையென்றால் கூசாமல், ஆங்கில அல்லது சமஸ்கிருதச் சொல்லைப் பயன்படுத்தித் தன்னெண்ணத்தை வெளியிட்டு நிறைவடைவது. இந்தத் தவறுகள் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி அதன் வாழ்விற்குமே காலப்போக்கில் உலை வைத்துவிடும் என்பதை இந்தத் தலைமுறை உணர்ந்துகொள்ளாமை கவலைக்குரிய நிலையாகும்.

> தமிழின்—அதனூடு தமிழனின் நல்லெதிர்காலம் பற்றிய அக்கறையுள்ள சபைகள், கழகங்கள் உண்மையாகச் செய்யவேண்டிய முதன்மைத் தொண்டு தமிழிலக்கணத்தினைக் கரைத்துக் குடித்தவர்—உரைகற்கள் எனச் சிலரை உருவாக்கி ஈழத்தமிழகத்துக்கு அளிப்பதேயாகும்.

இன்றைய நிலையில் சரிபிழைகளைக் கேட்டால் சொல்லித்தரக்கூடிய வல்லமை பெற்ற தலைமுறையின் முதிய எச்சசொச்சங்கள் அடியோடு அற்றுப்போக முன்னர், அவர்களைப் பயன்படுத்தி விரல் விட்டெண்ணக்கூடிய இளையோரையாவது தமிழிலக்கணத்தை எழுத்தெண்ணி, துறைபோகக் கற்கவைத்துத் தமிழ் இலக்கண மொழிமரபைப் பேணவைப்பது யார்? இங்கு நிலவும் தமிழ்ச் சங்கங்கள், [நகைப்புக்குரிய] தமிழ் வளர்ச்சிச்சங்கம் பெயர்கொண்ட அமைப்புக்கள் மூத்த தலைமுறையினரால், இந்தேவையை, இன்றியமையாத் தேவையைக் காலந்தாழ்த்தாது நிறைவேற்ற முற்படும்படி விழாக்களில் பகிரங்கமாகக் கோரப்பட்டும் அவை, விழாக்கள் வைத்துப் பத்திரிகை விளம்பரம் தேடும் தாகத்தில் மட்டும் தீவிரப்பட்டு நிற்கின்றன. எங்கள் இன அடையாளமாக இங்கு நிலவும் தாய்த்தமிழை அழியாமல் காத்து அதனூடு அம்மொழி பேசும் தமிழரைக் காத்து-அவர்கள் வாழும் தமிழீழ மண்ணை மீட்டுக்காத்து, இந்த மக்களை நிம்மதியாக வாழவைப்பதற்காகத் தம்மினிய உயிர்களை இதுவரை எருவாக்கிச் சென்றுள்ள பதினேழாயிரம் மாவீரர்களது உணர்வின் ஆழத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும்-அவர்கள் கனவுகளை நனவாக்கும் பொறுப்பு எங்கள் தலைமுறைக்குள்ளது. தமிழைப்படித்தால் தமிழோடே வினைகெட்டால் கைநிறையச் சம்பாதிக்கும் தொழில் வரமாட்டாதே என்ற காரணத்தால் தமிழைத் தமிழ்ப்பற்றை மறந்த இளைய சமுதாயத்தின் மத்தியில் தமிழ் நயக்கும் மாணாக்கரைத் தேடிப்பிடிப்பது கடினம்தான்.

ஆயினும் தமிழின்-அதனூடு தமிழனின் நல்லெதிர்காலம் பற்றிய அக்கறையுள்ள சபைகள், கழகங்கள் உண்மையாகச் செய்யவேண்டிய முதன்மைத் தொண்டு தமிழிலக்கணத்தினைக் கரைத்துக் குடித்தவர்-உரைகற்கள் எனச் சிலரை உருவாக்கி ஈழத்தமிழகத்துக்கு அளிப்பதேயாகும்.

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாட்டில் தமிழோடு இந்து மதத்தையும் பேணிவளர்த்த மதுரையாதீனம், குன்றக்குடி ஆதீனம் போன்ற ஆதீனங்கள் பணிபுரிந்தன. இன்றும் அங்கே அவை இயங்குகின்றன. இவை போன்ற ஆதீனம், இந்து, கிறிஸ்தவ மதச்சபைகள் இங்கும் இன்றும் இயங்குகின்றன. ஆயினும் இவற்றினால் கூடத் தமிழ்மொழி இங்கு வழுவுற்றுத் தேயும் இழிநிலையைத் தடுக்க முடியவில்லை. தடுப்பது பற்றி இவ்வமைப்புகள் முழுமையான அக்கறை கொள்ளவுமில்லை. அதேவேளை தென்னிலங்கையில் பல்லாயிரக் கணக்கான சிங்களவர்கள் முழுநீளப் பிரமச்சரிய வாழ்வை ஏற்றுத் தம் வாழ்நாட்களில் வேறெப்பற்றுமின்றி, பௌத்த மதமும் சிங்கள மொழியும் மேம்படுவதற்காகவே கணந்தோறும் உழைப்பதாலேயே சிறீலங்கா ஆகிய ஒரு நாட்டில் மட்டும், ஒரு கோடி மக்களால் மட்டும் பேசப்படும் சிங்களமொழி விரைவான வளர்ச்சியடைந்து இலக்கியத் துறையிலும் மேம்பட்டு நிற்கின்றது.

இதுபோல பிரம்மச்சரியம் பேணி இல்லற சுகம், உலகில் நாட்டங்கள்ள முற்றாகத்துறந்து வாழ்ந்த ஆறுமுகநாவலர் சுவாமி, விபுலானந்தர், தாவீது அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர், தனிநாயக அடிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்றோரால் தமிழ் அளப்பரிய மேம்பாட்டை இந்நாட்டில் பெற்றது. புலவர் கருணாலய பாண்டியனார் என்ற தமிழ்பேரறிஞர் கொழும்பு வாழ் தமிழர்களுள் சென்ற தலைமுறையைச் சேர்ந்த பலரை தமிழ் இலக்கண இலக்கிய மேதைகளாக உருவாக்கித் தமிழுலகுக்களித்தார். இவ்வாறான முழுமையான அர்ப்பணிப்புள்ள தமிழார்வலர்கள் சிலராவது இன்று நம் தமிழீழத்தில் தோன்றவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Business for sale E 13

## Counter news/off licence

Turnover £ 7200 p.w கிழமைக்கு (வாரம்)
plus bus pass £ 3300 p.w
plus gas card £450 p.w
Rent £ 13 500 p.a (வதிவிடத்துடன்)
16 year new lease
price lease £ 60.000
Free Hold £ 120 000

மேலதிக தொடர்புகளுக்கு: 02084721758
Mob: 07903422129
Fax: 0208552 0948

# Euro Indian Tourism Consultancy

- ★ விமான நிலையத்திலேயே வரவேற்பு சேவை
- ★ தங்குமிட வசதி
- ★ நீங்கள் விரும்பிய இடங்களைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகள்
- ★ மருத்துவ சேவைக்கான ஏற்பாடுகள்
- ★ வீடு-மனை வாங்குவதற்கான வசதிகள்
- ★ மூத்த பிரஜைகளுக்கு விசேட கவனிப்புகள்

தொடர்புகளுக்கு: **Lavan**
Mobile: 00447812170222
00442088575016

**Euro Indian Tourism Consultancy**
49 Egmore High Road
1st Floor
Egmore, Chennai-8
South India
Phone: 0091448250401
Fax: 0091445512420
Email: issacskeela@yohoo.co

Pub-398

# ஸ்ரீ சிவசக்தி ஜோதிட நிலையம்



இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சாஸ்திரி ரவி சுவாமி அவர்கள் கைரேகை, முகநாடி ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி, ஆரோக்கியம், குடும்பப்பிரச்சினை தீராத வியாதி, ஆகியவை பற்றி விபரமாக அறிந்துகொள்ள இன்றே அவரை நாடுங்கள்.

## Ganapathy Cash & Carry

1st Floor, 44 Ealing Road Wembley, Middx HA0 4TL
தொலைபேசி இல: 07905 767 538
Consultation Hours: Everyday 9.00am to 9.00 pm




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 17 – 04 – 1933

விண்ணில்: 26 – 03 – 2002

# திரு. சபாபதிப்பிள்ளை வேலாயுதம்

**(சுழிபுரம்)**

**(முன்னாள் நாதன் ஸ்ரோர்ஸ் – மொரட்டுவ உரிமையாளர்)**

அன்னார், காலம் சென்ற சபாபதிப்பிள்ளை தெய்வானை தம்பதிகளின் அருமை மகனும், காலம்சென்ற தம்பையா இராமநாதர் (சுழிபுரம்-வியாபாரி) காலம் சென்ற தம்பையா கணபதிப்பிள்ளை (திருகோணமலை) ஆகியோரின் மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும்,

சபாநாதன் (இலண்டன்), இரவீந்திரன் (இலண்டன்) தவமலர் (பிரான்ஸ்), ஜீவா (சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

கனகம்மா, காலம் சென்ற நடராசா, இராசவல்லவர் ஆகியோரின் சகோதரரும், காலம் சென்ற தம்பையா வீரகத்தி (சுழிபுரம் மேற்கு) சோதிலிங்கம், அப்பையா (சுழிபுரம் கிழக்கு) பூமணி (பிள்ளையம்மா மகேந்திரராசா - அவுஸ்திரேலியா), தவராசா B.A (யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி (மணியம்மா சோமசேகரம் - கொழும்பு), மகேஸ்வரி (திரவியம் சிறிதரன்) கொழும்பு, குலவீரசிங்கம் (சுழிபுரம்), சற்குணவல்லி இராசவல்லவர் (சுழிபுரம் மேற்கு) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

சக்திவேல், காலம்சென்ற ஞானவேல், வெற்றிவேல், செந்தூர்வேல், ஜெயவேல், ரமேஸ், ரஞ்சினி, ஜெயந்தினி, மணிவண்ணன், ஜீவகன், குகன், சிவலிங்கம், சிவநேசன், சிவநாதன் ஆகியோரின் பெரியய்யாவும், நாகராசா, காலம்சென்ற சிவராசா, கேந்திரசா சிவகுமார், செல்வகுமார், சிவஜா, சலஜா, சுதாகரன், தனுசன் ஆகியோரின் மாமனாரும், பிரசாத், பாமின் (இலண்டன்), திலகா, தேவகி (பிரான்ஸ்), நிரோசன் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகையில் கலந்து துக்கம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் துயரம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*தகவல்: திருமதி தவமலர் நாகராசா*
**Lyon, France.**

சபா – 0044 208 861 03 46 இலண்டன் (மகன்)
ரவி – 0044 208 488 10 45 இலண்டன் (மகன்)
மலர் – 0033 4 78 69 82 54 பிரான்ஸ் (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசிகாமணி பதில்கள்

## பிரபாகரன் முன்னரிலும் பார்க்கத் தற்போது மிகவும் பலமான தலைவராக இருப்பதாக முன்னாள் இந்தியாவிற்கான தூதுவர் தீக்ஷிட் கூறியிருக்கிறாரே?

★ இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாகரனைக் கைது செய்ய வேண்டுமென தமிழகச் சட்ட சபையில் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றியுள்ளாரே?

*மு. கோகிலன்- பாரிஸ்,10, பிரான்ஸ்.*

❣ ஜெயலலிதா அம்மையாரை நோக்கி நாலு கேள்விகள் கிழியக் கிழியக் கேட்கலாம். ஆனால் பத்திரிகை நாகரிகம் கருதி அதை இங்கே தவிர்த்துக்கொள்கிறேன். ஆனாலும் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான ஜெயலலிதாவின் இந்த அசட்டுத்தனமான அர்த்தமற்ற செயல் ஒவ்வொரு ஈழத்தமிழர் நெஞ்சிலும் ஆறாத வடுவாய் பதிந்திருக்கும். தமிழீழ மக்களின் ஏகோபித்த மாபெரும் தலைவரான பிரபாகரன் அவர்களைப் பற்றிக் கதைப்பதற்குத் தமிழக மக்களின் சொத்துக்களை கோடி கோடியாய் சுருட்டிப் பெருத்த இந்த ஊழல் பெருச்சாளிக்கு என்ன அருகதை இருக்கிறது.

★ அன்னை பூபதியின் நினைவு சமாதியை, மட்டக்களப்பு, நாவலடியில் பௌத்த பிக்கு ஒருவர் திறந்து வைத்துள்ளாரே?

*தா. பூபாலன்-சூரிச், சுவிஸ்.*

❣ இன மத மொழிபேதம் கடந்து அனைத்து மக்களாலும் போற்றுதலுக்குரிய உன்னதமான தியாகத்தைப் புரிந்தவர் தான் அன்னை பூபதி! உலகத்தில் எங்குமே நடைபெற்றிராத அன்னையின் உயிர்த்தியாகம் சிறப்பாக அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவே நடைபெற்றது. ஒவ்வொரு இலங்கைப் பிரஜையுமே இதில் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும். 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் சமாதியைத் திறந்து வைத்து உரைநிகழ்த்திய குருனாகல் புண்ணிய சாரர் தேரர் 'உலகமே வியக்கும் உன்னதமான தியாகத்தைப் புரிந்த வீரத்தாய் அன்னை பூபதி' என வியந்துள்ளனர். வரலாறு இப்படித்தான் அசையும்.

★ கடந்த 21.04.2002 திகதியிட்டு வெளிவந்திருந்த ஆனந்த விகடன் ஆசிரியர் தலையங்கத்தில் ராஜீவ் காந்தியின் மரணம் ஒவ்வொரு இந்தியன் நெஞ்சிலும் கோபத்தீயாய் கனன்று கொண்டிருப்பதாக எழுதியுள்ளதே?

*மு.வேல்ராசா-பாரிஸ்-18, பிரான்ஸ்*

❣ ஓம் ஐயா! விகடனாரே. உங்கள் உணர்வை நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால்... அமைதிப்படையென எம் மண்ணில் கால் பதித்து 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்களை சிறீலங்கா இராணுவத்தைவிட மிக மோசமாக, கொடூரமாகக்கொன்று குவித்தீர்களே. குமரப்பா உள்ளிட்ட பன்னிரண்டு தோழர்களின் சாவிற்குக் காரணமாய் இருந்தீர்களே. எங்கள் திலீபன் மெல்ல மெல்ல உயிர் உருகிச்சாகப் பார்த்திருந்தீர்களே. அன்னை பூபதி ஒருவயோதிபத்தாய். அகிம்சையால் உருகிச் செத்துக்கொண்டிருந்ததை பார்த்திருந்தீரே. எங்கள் தளபதி கிட்டுவும் சக தோழர்களும் சர்வதேச கடற்பரப்பில் வந்தபோது மறித்துச் சாகடித்தீர்களே. இப்படியாய் நீளும் துரோகப்பட்டியலில் ஒவ்வொரு ஈழத் தமிழர் நெஞ்சமும் எரிமலைக் குழம்பாய் தகித்துக் கொண்டிருக்கிறதே. இவற்றையெல்லாம் ஒரு மூலையில் அமுக்கிவைத்தபடிதானே உங்கள் நேசக்கரத்தை நாடினோம். புதிய பாதையொன்றுக்கு வழி சமைக்கவேண்டிய ஊடகங்கள் மீண்டும் பழைய குப்பைகளைக் கிளறுவது நியாயமா?

★ சந்திரிகா அம்மையாரின் இந்தியாவிற்கான பயணத்தின் நோக்கம் எதுவாயிருக்கும்?

*க. சந்திரபாலன் -பொந்துவாஸ், பிரான்ஸ்.*

❣ வேறெதுவாயிருக்கும். சமாதான முயற்சிகளுக்கு எதிராகக் கூப்பாடு போடும் ஜெயலலிதா அம்மையார் உள்ளிட்ட இந்திய தலைவர்களையெல்லாம் தேடிப்பிடித்துக் கட்டியணைப்பதற்காகத்தான் சென்றிருப்பார்.

★ தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் 'தொப்புள்கொடி உறவு' என்று அடிக்கடி கூறுகிறார்களே? ஆனால் நஞ்சுக்கொடியல்லவா அவ்வப்போது வெளிப்படுகிறது?

*அராலியூர் கலைமகள்-பாரிஸ்,பிரான்ஸ்.*

❣ ஆமாம் கலைமகளே, சினிமாவில் தொப்புள் காட்டி, அதில் பம்பரம் உருட்டினால் போதும் என்று நினைக்கிறார்களோ என்னவோ. ஆனாலும் எமக்காகக் குரல்கொடுக்க உணர்வோடும், உயிர்துடிப்போடும் அங்கும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தடா, பொடோ எனத் தொடரும் அடக்குமுறைச் சட்டங்களுக்கு மத்தியிலும் ஈழத்தமிழர்களுக்காக ஓங்கிப் பல குரல்கள் ஒலித்த வண்ணம்தான் இருக்கிறது.

★ அரசுக்கும்– விடுதலைப் புலிகளுக்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து அரசு தாமதங்காட்டுகிறதே?

*வி. தர்மபாலன்-சுட்காட், ஜேர்மனி.*

❣ உண்மைதான். குறிப்பாக படைத் தரப்பில் இருக்கும் தெளிவின்மை, குழப்ப மனோபாவம் எதிர்ப்புணர்வு என்பனவே புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறைப்படுத்தலுக்கான தடங்கலாக இருக்கிறது. படைத் தரப்பில் இருக்க்க்கூடிய பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களும், ஜே.வி.பி. மற்றும் சிங்கள இனவாத கட்சிகளின் ஆதரவாளர்களும் சமாதான முயற்சிகளை விரும்பாத நிலையே காணப்படுகிறது. இதன் வெளிப்பாடுகளையே ஆங்காங்கு காணமுடிகிறது. ஆனாலும் ரணில் அரசு இந்தத் தேக்க நிலையை போக்கி சமாதான முயற்சிகளை உறுதியோடு முன்னெடுக்குமென்றே எதிர்பார்க்கலாம்.

★ 'இப்போது எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் கண்கள் கட்டப்படவில்லை' என யாழ்ப்பாணத்தில் சிரேஸ்ட இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளாரே!

*கனகேஸ்வரன்-பாரிஸ்-17, பிரான்ஸ்.*

❣ யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் பேரெழுச்சியினைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ள முடியாத ஒரு இராணுவ அதிகாரியே இப்படிக் கூறியிருக்கின்றார். மக்களையும் புலிகளையும் புரிந்துவிட்டோம் என்று கனவு கண்டு கொண்டிருந்த படைத்தரப்பு தாயகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் பொங்கு தமிழ் எழுச்சி அச்சத்தையும் ஏமாற்றத்தையுமே கொடுத்துள்ளது. இந்நிலையில் ஆதங்கத்தில் சில படையதிகாரிகள் பலவாறாக உளறிக்கொண்டிருப்பதுடன் மக்களையும் பயமுறுத்த முனைகிறார்கள். மக்கள் எழுச்சிக்கு முன்னால் எல்லாமே தவிடுபொடியாகிவிடும்.

★ பிரபாகரன் முன்னரிலும் பார்க்கத் தற்போது மிகவும் பலமான தலைவராக இருப்பதாக முன்னாள் இந்தியாவிற்கான தூதுவர் திக்ஷிட் கூறியிருக்கிறாரே?

*தா. குகேந்திரன் - பேர்ன், சுவிஸ்.*

❣ இலங்கை, இனப்பிரச்சினையில் நீண்ட பரிச்சயம் கொண்ட அவரின் பார்வையில் தலைவர் பிரபாகரன் அவர்கள் பலமானவராகத் தெரிவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. வன்னியில் ஒரு மூலையில் இருந்துகொண்டு ஊடகவியலாளர்களைச் சந்திப்பதற்கான அழைப்பை விடுத்தபோது உலகமெல்லாம் இருந்து நூற்றுக்கணக்காக வன்னியை நோக்கிப் படையெடுத்தார்களே ஊடகவியலாளர்கள்! இந்த ஒரு நிகழ்வே அந்த ஆளுமையான, பலமான தலைமையின் சக்தியைப் புரிந்துகொள்ளப்போதுமானது.


உலகம் முழுவதும் அழைப்புகளை விரைவில் பெறுவதற்கு

Dialog Calling Card

தெளிவான ஒலி

கூடிய நிமிடங்கள்

குறைந்த விலையில்

Dialog Calling Card







தொடர்புகளுக்கு:

06 88 13 99 91

01 40 40 14 32

| Destination | Local | Vert |
|---|---|---|
| Algerie | 90 | 70 |
| Bangaladesh Dhaka | 92 | 75 |
| Benin | 50 | 40 |
| Cameroun | 60 | 50 |
| Chine | 203 | 128 |
| Colombie | 140 | 100 |
| Cote d'ivoire | 60 | 50 |
| Egypte | 50 | 43 |
| Gabon | 60 | 50 |
| Gambie | 60 | 50 |
| Guinee | 65 | 54 |
| Inde | 45 | 38 |
| Isreal | 250 | 127 |
| Kuwait | 79 | 64 |
| Liban | 70 | 58 |
| Mali | 50 | 40 |
| Pakistan | 45 | 38 |
| Philippines | 106 | 81 |
| Pologne | 200 | 127 |
| Portugal | 300 | 127 |
| Senegal | 75 | 60 |
| Srilanka | 50 | 40 |
| Europe | 600 | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUDBURY
## SUPERMARKET

**773 Harrow Road, Sudbury, Haozlw**
**Tel: 0208 9041110**

சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை தமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

**`Sudbury யில் புதுப் பொலிவுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறது**

## Sudbury Super Market

ஒருமுறை விஜயம் செய்வீர்களானால் நீங்களே கண்டறிந்து செல்வீர்கள்.

அனைத்து இலங்கை மரக்கறி, மீன் பலசரக்கு வகைகளும்



புதிய, பழைய தமிழ் படங்களை *CD, VCD, DVD* களில் அனைத்தையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசமொழியில் பேசவிடு

**➲ 10.04.2002 புதன் இரவு 9.50**

வாழ்தலில் மிகுந்த நம்பிக்கை ஏற்படுகிறது. நாட்களும் நிகழ்வுகளும் அவ்வாறு அமைகின்றன. மிக அவதானமாக எமது தேசம் நெய்யப்படுகிறது. பெரும் பாய்ச்சல் அல்ல! இரு கால்களையும் நிலத்தில் குவித்து பல திசை பார்த்து பலம்கொண்டு எழுகிறது எமது தேசம். எமது தேசம் என்றால் என்ன? புழுதி பறக்கும் வன்னி மண்ணில் இன்று இந்தக் கேள்விக்கு ஒரு முழுமையான விடை கிடைத்தது. உலக வரைபடத்தில் மாங்காய் வடிவில் ஒரு சின்னத் தீவு. அங்கு எமக்கென ஒரு நிலம், காணி, வீடு, கிணறு, தோட்டம், முற்றம் அயல் உண்டு. அனைத்தும் எமக்கே சொந்தம். நாட்களை நான் எண்ணுகிறேன். விரைவில் அது நிகழப்போகிறது. பிறப்பிலிருந்து இறப்புவரை நாமே அனைத்தையும் தீர்மானிப்போம். அந்த உரிமையை நாம் வென்றெடுப்போம். சில பொழுதுகளில் நான் இப்படியும் நினைத்துப்பார்ப்பதுண்டு: என்னை 'அம்மா' என்று சொல்ல ஒரு சொந்தம் வரும். அது எமது தேசத்தில் பிறக்கும், தவழும், உண்டு உறங்கும், நடந்து திரியும், கல்விகற்கும், நெஞ்சு நிமிர்த்தி உலவும், பட்டம்பெறும், பெற்றதைப் பலருடன் பகிரும், வாழ்வை வாழ்ந்து முடிக்கும், சிலவேளை அது தடக்கி விழுந்தால் ஆயிரம் சொந்தம் அதனைத் தூக்கிவிடும். மணல் தட்டி முழகு தடவிவிடும்... புழுதி பறக்கும் வன்னி மண்ணில் இன்று இன்னோர் கேள்வியும் என்னுள் எழுந்தது:

எனது மண்ணில் சிலர் வாழ்ந்து பலர் மடிய நாம் தேசம் விட்டு புலம்பெயர்ந்தோம். நிலம் மாறியது. நிறைய மாறியது. ஒரே இரத்தம், ஒரே இனம், ஒரேமொழி, ஒரே வரலாறு ஆனால் நிலம் வேறு! எமது மண்ணில் திரும்பவும் நாம் போய் வாழும் காலத்தில் நாம் வாழ்ந்த உலகை அவர்களும் அவர்கள் கடந்து வந்த துயர்படிந்த பாதையை நாமும் எந்த எல்லைவரை சென்று புரியப்போகிறோம்?

**➲ 15. 04.2002 திங்கள் மாலை 3.10**

சத்தமில்லாமல் மழை பெய்தது. மரத்திலுள்ள மெல்லிய சின்ன குருத்துக்கள் நீரை உறிஞ்சி சிலிர்த்துப்போயிருக்கின்றன. செய்து முடிக்க வேண்டிய வேலைகள் பட்டியலுடன் எனது பல்கலைக்கழக கோப்பி பாரில் அமர்ந்தபடி மழையின் அழகை இரசித்துக்கொண்டிருந்தேன். ஒரு மாணவன் பாரின் கதவை ஓசைபட திறந்தபடி உள்ளே நுழைந்தான். பார்த்தவுடன் கவரக்கூடிய கூர்மையான மூக்கும் குறும்பான விழிகளும் கொண்டிருந்தான். அனைவரின் மேசையிலும் ஒரு சிறிய துண்டுப் பிரசுரத்தைப் போட்டுவிட்டு எனது மேசை நோக்கி வந்தான். வட்ட மேசையின் ஒரு வளைவில் கொஞ்சம் நீர் கொட்டியிருந்தது. பிரசுரத்தை அதன்மேல் அவன் வைத்தவுடன் அது நீரைக் குடித்தது. 'நான் படிக்கக்கூடாதென்றுதான் நீரின்மேல் போட்டாயா?' என்று நான் கேட்க 'மன்னித்துக்கொள், இது கட்டாயம் படிக்கவேண்டியது' என்று சொல்லி அவன் மறைந்தான். சட்டென நான் அதனை எடுத்துப் படித்தேன். குடித்தகோப்பி வாயை இறுகக்கட்டி கசந்தது.

வ்லாடிமீர் மாயா கொவ்ஸ்கி (Vladimir majakowski) நேற்றுடன் உன்னை நாம் இழந்து 72 வருடங்கள் ஆகிவிட்டதா? அட, நாம் மகிழ்ந்துகொண்டாடும் தமிழ் புத்தாண்டிலன்றுதானா உனது வாழ்வை நீ முடித்துக்கொண்டாய்? உனது பெயரை என்னுள் ஒருமுறை உச்சரித்துப்பார்க்கிறேன். மா-யா-கொவ்-ஸ்கி. சில சொற்கள் எழுந்து மறைகின்றன. கவிஞன், ரஷ்ய புரட்சி, கொம்யூனிசம், காதல்தோல்வி, தற்கொலை... எனினும் இந்தச் சொற்களால் மட்டும் உனக்கும் உன் கவிதைக்கும் சட்டகம் போடுவது சரியல்ல! இந்தப் பிரசுரம் கூட இதுபோன்ற சொற்களைப் பொருத்தியே உன்னை வரைந்திருந்தது. ஆனால் அதற்கும் அப்பால் சென்று சிலவற்றைச் சொல்ல விருப்பம் உண்டு. என்னைக் கொஞ்சம் தேடவிடு!

**இரவு 10.30**

பல்கலைக்கழக நூல் நிலையத்தின் மூன்றாவது மாடியில் ரஷ்ய இலக்கியம் தொடர்பான நூல்கள் இருந்தன. சற்று இருட்டாகவே இருந்த அந்தப் பகுதியில் பலர் உலவித்திரிந்தனர். யன்னல் அருகே அமர்ந்து சில புத்தகங்களைத் தூசி தட்டிப்படித்தேன். மஞ்சளாய்ப்போன ஒற்றைகளில் மாயா கொவ்ஸ்கியின் உலகு என்முன் விரிந்தது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதி. நான் அனைத்தையும் கண்டேன். ஓவியக் கல்லூரியில் சிறிது காலம் அவன் படித்தான். அப்போது அவன் அணிந்திருந்த கறுப்புத் தொப்பி, கறுப்பு பருத்திச்சேட் கழுத்தில் ஒரு துணி. அனைத்தையும் நான் கண்டேன். ரஷ்ய இலக்கியம் எனும் சிகரம்மேல் அங்கங்கே புதிதாய் முடிபதித்தபோதும், கவிதைக்கு புதிய வடிவம் கொடுத்து அதனைத் தனது பாதைக்கு அசைத்து இழுத்தபோதும், அரசியல் கவிதையை அறிமுகப்படுத்தி அதன் வேரிலிருந்து பல திசைகளை அவன் தொட்டபோதும், உழவர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் மார்க்சியத்தை உணர்வு பொங்க புரியவைத்தபோதும், 'நான்' என்ற சொல் 'நாம்' என்ற சொல்லாக மாறாத காலத்தில் அதற்கான அடிக்கல் நாட்டியபோதும் சமுதாயத்திலிருந்து வேகமாக வெடித்துச் சிதறிய ஒரு நெருப்பை அங்கு நான் கண்டேன். ஆனால், இவை அனைத்திற்கும் பின்னால் ஒரு நொருங்கிய இதயம் ஒளிந்திருந்தது. உள்ளுக்குள் அவன் கிழிந்துபோயிருந்தான். பொல்ஷெவிசம் (Bolshewish) என்ற அலை உச்சம் தொட்ட காலத்தில் அவன் நிபந்தனைகளுக்கு உள்ளாக்கப்பட்டான். இயல்பாக தன்னுள் ஊற்றெடுக்கும் உணர்வைத் தள்ளிவைத்து ஸ்ராலினின் (Stalin) ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் பொருட்களின் பெரும் உற்பத்தி (Mass production) பற்றியும் எழுதுவதற்கு உத்தரவு கிடைத்தது. முயன்றுபார்த்தான் முடியவில்லை! முரண்பாடுகளுடன் முட்டி மோதினான். கூடவே காதல் தோல்வியால் நித்தம் துடித்தான். அனைத்தும் ஒன்று சேர்ந்து தற்கொலைக்கு அவனை இட்டுச்சென்றது:

**'The love boat has crushed against**
**The everyday. You and I, we are quits**
**And there is no point in listing mutual**
**Pains, sorrowes and hurts.'**

இந்தக் கடைசி வரிகளை எழுதிவிட்டு இதயத்தைத் துப்பாக்கியால் சுட்டு அவன் செத்துப்போனான். வேகமாக வெடித்துச் சிதறிய ஒரு நெருப்பு அணைந்து போயிற்று. புத்தகங்களை மூடிவிட்டு வீடு நோக்கி வந்தேன். மழை ஓய்ந்தபாடில்லை. சத்தமில்லாமல் பெய்கிறது. இனிய வாழ்வின் தயாரிற்கும் காதல் தோல்வியின் வலிக்கும் துப்பாக்கிதான் முடிவென்றால் நாம் எல்லோரும் இன்று இறந்திருப்போம். எமக்கென இருக்கும் கடமைகளை விட்டு மண்ணோடு மண்ணாகியிருப்போம். தமிழ் கவிஞரான அ.யேசுராசா மிக அழகாக இதனைச் சொல்கிறார்:

*'நொறுங்கியது காதற்படகு*
*வாழ்வும் நானும் பிரிந்தனம்...'*
*ஓ! மாயாகொவ்ஸ்கி*
*துயரினிலாழ்ந்தாய்*
*குண்டுகளால் அதை வெல்லப்பார்த்தாய்...*
*முதிரா இளைஞர் செயலென்று*
*உம்மையெலாம்*
*எள்ளுவார் அணி சேரேன்*
*என்றாலும்*
*உமது வழி தொடரேன்*
*செய்வதற்கு இன்னும்*
*பணிகள் மிக உளதே!*
*செயலற்று வாழ்வில் ஒதுங்கமுடியாது:*
*'பிறத்தியானெல்லாம்*
*உள், நுழையுங்காலம்!*
*முள்முடிகுத்தும்*
*சிலுவை உறுத்தும்தான், என்றாலும்*
*சாவுவரை வாழ்வேன்!*
*சாவுக்கு அப்பாலும்*
*என் செயலிற் கவியில்*
*உயிர்த்தெழுவேன்!*
*உயிர்த்தே எழுவேன்!*

– அம்புலி

# நான் இல்லாத அது

- கந்தையா நவரேந்திரன் -

## தரிசனத்தைத் தடுக்கும் நம்பிக்கை

எங்களால் நம்ப முடியுமானால் நம்பாமலும் இருக்கமுடியும். நம்பிக்கையீனம் இல்லாமல் நம்பிக்கை தோன்றாது. நம்பிக்கையீனத்தை மறைப்பது நம்பிக்கையேயாகும். ஐயம் என்ற மையத்தின் பரிதிதான் நம்பிக்கை, ஐயம் இருக்கும் இடத்திலேயே நம்பிக்கை தோன்றுகிறது.

நாம் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளும் மறுகணமே அதைத் தொடர்ந்து நம்பிக்கையீனம் பிறக்கிறது. நம்பிக்கையீனத்தின் முதல் தேவைப்பாடே நம்பிக்கைதான்.

நம்பிக்கை கொண்டவன் உண்மையை நாடுபவன் அல்லன். நம்பிக்கைகொண்டவன் உண்மையை நாடுபவனாக இருக்கமுடியாது.

உண்மையை நாடுவதைத் தவிர்ப்பதற்காகவே ஒருவன் நம்புகிறான். அதனால்தான் அவனைக் காப்பாற்ற இரட்சகன்-தேவதூதன் ஒருவன் தேவைப்படுகிறான்.

எம்மை எம்மாலன்றி வேறு எவராலுமே காப்பாற்ற முடியாது. நம்பிக்கை என்ற பொறிக்குள் விழுந்தவர்கள்தான் உலகிலேயே ஆக கூடியவர்கள் நுண்ணறிவு அற்றவர்கள். அவர்களுக்கும் காலத்தைக் கடந்த உண்மைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. நம்பத் தொடங்கும் போதே நாம் எம்மையும் அறியாமல் நாமே எமக்குள் பிரச்சினையை உருவாக்கத் தொடங்குகின்றோம்.

ஐயம் புண்ணைப் போல் எமக்கு வலிக்கிறது. ஐயம் எமது அகத்தில் அறியாமையை உணரச் செய்கிறது. இதனை மூடிமறைக்கவே நாம் நம்பிக்கையை உருவாக்குகின்றோம். காயத்தை-புண்ணை-ஏதாவதொன்றால் மறைப்பதால் அது குணமாகிவிடுமா? இப்படிச் செய்வதன் மூலம் மற்றவர்களை வேண்டுமானாலும் நாம் ஏமாற்றலாம். ஆனால் அதனைக்கொண்டு எங்களை நாங்கள் ஏமாற்ற முடியாது.

எவராலும் தன்னைத்தானே ஏமாற்ற முடியாது. மறைக்க உதவும் பொருளை நாம் புறத்தில் இருந்துதான் எடுக்கின்றோம். ஐயம் என்பது ஓர் அகவலுவாகும். ஐயப்படுவது தவறன்று.

அதனைத் தவறு என்று மதப்போதகர்கள் கூறுவர். அவர்களது கூற்றே முழுத்தவறானது.

ஐயம் இயல்பானது. எனவே நாம் அதனை மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் எமது ஐயத்தை மதித்தால் அதனால் காயம் ஏற்படாது. ஐயத்தை நிராகரிக்கும்போதே அது காயமாகிறது. ஆரோக்கியமான ஐயப்பாடு எமக்கு மிகப்பெரிய உதவியைச் செய்கிறது. ஐயமானது எம்மை ஆக்கப்படைப்பாற்றல் உள்ளவர்களாக உருவாக்குகின்றது. அது எங்களை உண்மையை நாடச் செய்கிறது. தேடலின் முதற்படியே ஐயம் தான்.

நாம் எம்முள்ளேயே ஐயப்பாட்டை ஏற்படுத்தி விடையை எமது அகத்திலேயே காண முனைவோமேயானால் எம்முள் செயற்படும் இருமையை நாம் காண்போம். அக்காட்சியின் தரிசனத்தில் காணும் பொருளும், காண்பானும் ஒன்றாகும். அதாவது அத்தரிசனத்தில் நாம் சாட்சியாக இருப்போம். சாட்சியின் இரண்டு அம்சங்களே காண்பானும் காணும் பொருளுமாகும். அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்குள் மற்றொன்று மறையும் போதுதான் முதன்முதலில் சாட்சி இடம்பெறுகிறது. சாட்சியைப் பலர் 'காண்பான்' என்று நினைக்கின்றனர். சாட்சியின் ஒரு பகுதியாகவே காண்பான் இருக்கின்றான். காண்பவன் அகத்தில் உள்ளவன். காணும் பொருள் புறத்திலுள்ளது. சாட்சியம் நிகழும்போது சாட்சி இருக்கமாட்டார். காணும் பொருள் இராது.

ஒரு செயற்பாடு முடிந்து மற்றது நிகழ்வது இல்லை. கரைதலும் ஒன்றிணைதலும் ஒன்றாகவே நிகழ்கிறது. காண்பான் என்ற நிலை கரைந்து காணும் பொருளுடன் ஒன்றிணைதல் ஒரே கணத்தில் இயல்பாகவே நிகழ்கிறது. காண்பவனைப் பயிற்றுவிக்கலாம். ஆனால் சாட்சியைப் பயிற்றுவிக்க இயலாது. காரணம் அது ஒரு நிகழ்வாகும். தனது புலனை-கவனத்தை ஏதாவதொன்றில் குவிப்பவனே காண்பான் ஆவான் எனவே 'காண்பான்' என்னைப் பிரிக்கிறது. 'தான்' என்ற எனது முனைப்பை என்னுள் தூண்டிப்பலப்படுத்துபவன் தான் காண்பான். எவ்வளவுக் கெவ்வளவு நான் காண்பான் ஆக இருக்கின்றேனோ அவ்வளவுக்கவ்வளவு நான் ஒரு தீவைப் போல் தனிமைப்படுத்தப்படுகின்றேன்.

ஆண்டாண்டு காலமாக உலகெங்கும் உள்ள மதகுருமார் காண்பானுக்குப் பயிற்சி அளிப்பதையே 'செய்து வருகின்றனர். அதோடு மட்டுமல்லாமல் காண்பானையே சாட்சியெனப் பிழையாகப் போதித்துக்கொண்டும் வருகிறார்கள். விஞ்ஞானியைக் காண்பான் எனலாம். ஆனால் ஞானியோ ஒரு சாட்சி. காண்பவன் காலத்திற்குள் சிக்குண்டு தனது சொந்த 'தான்' என்னும் முனைப்பினுக்குள் சிறைப்படுகின்றான். சாட்சியம் ஒரு கணத்தில் முழு விளைவாகும். எனவே அது அக்கணநிகழ்வாகும். இந்த ஒரு கண முழு விளைவிலேயே சாட்சியத்தின் தரிசனம் நிகழ்கிறது.

விஞ்ஞானம் புறமானது. கலை அகமானது. ஆனால் சமயமோ இரண்டுமற்றது. அகம் புறம் ஆகிய இரண்டின் சங்கமமே சமயமாகும். இந்த அகத்தையும் புறத்தையும் பிரிக்கமுடியாது. இவை இரண்டும் ஒன்றாய் இருப்பவை. இந்த ஒன்றான தன்மையை நாம் எம்முள் அனுபவிக்கும்போதுதான் சாட்சியம் நிகழ்கிறது. நம்பிக்கை எங்களது மனங்களின் உள்ளடக்கங்களாக இருக்கும்வரை இருமையும் அதனால் காண்பானது அகந்தையும், அறியாமையும் ஊதிப்பெருகிக்கொண்டே போகும். இந்நிலையில் எங்களது சுயம் நசுக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணம்

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

# 2002

## சீனா

- உலகின் உயர் மக்கள் தொகை நாடு
- உயர் பொருளாதார வளங்கொண்ட நாடு
- ஆதிக்கவாதிகளின் அரசியல் பழிவாங்கலுக்குள்ளான நாடு

உலகின் அதிகூடிய தொகையாக நூற்றுமுப்பது கோடி மக்களைக்கொண்ட நாடு. ஆசியாவின் முதல்நாடு-முன்னணிநாடு. இத்தகைய வளம் இருந்தும் உலகக் கிண்ணப்போட்டியின் நீண்ட வரிசையில் 1998 வரை இடம்பிடிக்கமுடியவில்லை. 1931ம் ஆண்டு முதல் 1979ம் ஆண்டு வரை ஆதிக்கவாதிகளின் அரசியல் பழிவாங்கல்க ளால் குறிப்பாக உதைபந்தாட்டத் துறையில் தடைகள் ஏற்பட்டுவந்தன. 1931-ம் ஆண்டு முதல் தடவையாகச் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்றவர்கள் மீண்டும் 1958இலும் தொடர்ந்து 1979-இலும் அங்கத்துவம் பெற்று இன்றுவரை நிலைத்துவருகின்றனர்.

நாற்பத்துமூன்று இலட்சம் வீரர்கள் உதைபந்தாட்டம் விளையாடும் தகுதி பெற்றுள்ளனர். உலக வரிசைப்படுத்த லில் ஐநூற்று அறுபத்தெட்டுப் புள்ளிகளுடன் ஐம்பத்துமூன் றாம் இடத்தை வகிக்கும் இவர்கள் ஆசியப்பிராந்தியத்தில் இருந்து முதல் முறையாக உலகக்கிண்ண இறுதிச்சுற்றிற் குத் தெரிவாகியுள்ளனர்- இதுவரை காலமும் உலகக் கிண்ண இறுதிச்சுற்றிற்கான பிராந்தியக் குழுநிலைத் தெரிவுப்போட்டிகளில்-அறுபத்தெட்டு ஆட்டங்களில் நாற்பத் தைந்தில் வெற்றியும், எட்டில் சமநிலையும், பதினைந்தில் தோல்வியும் அடைந்ததுடன், நூற்று நாற்பத்துநான்கு கோல்களை அடித்து நாற்பத்தொன்பது கோல்களை எதிரணி யிடமிருந்து தமது பிராந்தியத்தில் முதலாவது குழுநிலைப் போட்டியில் இந்தோனேசியா, மாலைதீவு, கம்பூச்சியா ஆகிய மூன்று அணகிளுடனான இருவழி ஆட்டங்கள் அனைத்திலும் வெற்றிபெற்று முதலிடத்தைப் பெற்றனர். இப்பிராந்தியத்தில் முதலாவது குழுநிலைப்போட்டிகளில் அனைத்துப்போட்டிகளிலும் வெற்றிபெற்ற அணிகள் ஈரான் (குழு 2) சீனா(குழு 9), சவுதி அரேபியா(குழு 10) என்பனவே ஆகும். 21.06.2001 அன்று பாங்கொக் (Bangkog)-இல் நடைபெற்ற இரண்டாவது சுற்றுக்கான குலுக்கலில் (Draq) சவுதி அரேபியா, ஈரான், ஈராக் போன்ற பலம் பொருந்திய நாடுகள் குழு அ இற்குத் தெரிவானமையும் குழுஆ இல் ஐக்கிய அரபுக் குடியரசு, உஸ்பெகிஸ்தான், கட்டார், ஓமான் போன்றவை தமது குழுவில் இடம்பெற்றமையும் இவர்களிற் குப் பெரும் நம்பிக்கையைக் கொடுத்தது. இருப்பினும் 1990ம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற பதின்நான்காம் உலகக்கிண்ணத்திற்குத் தெரிவான ஐக்கிய அரபுக்குடியரசு (United Arab Emerates) தமது குழுவில் இடம்பெற்றது சிறிய சலனத்தைக் கொடுத்தது.

இந்நிலையிலேயே இரண்டாவதும் இறுதியுமான குழு நிலைப்போட்டியில் பங்குகொண்ட இவர்கள் ஐக்கிய அரபுக் குடியரசிற்கெதிரான முதலாவது ஆட்டத்திலேயே (குழு நிலையில் முதலாவது ஆட்டம்) 3:0 எனும் கோலடிப்படை யில் தமது மண்ணில் வெற்றிகொண்டதானது பதினேழாவது உலகக்கிண்ண இறுதிச்சுற்றிற்குப் பெருவழி சமைத்துக் கொடுத்ததோடு அவர்களது உலகக்கிண்ணத் தெரிவு எனும் கனவு நனவானது.



### இரண்டாவது குழுநிலைப்போட்டிகள்

குழு B

| | | |
|---|---|---|
| சீனா | ஐக்கிய அரபுக்குடியரசு | 3:0, 1:0 |
| சீனா | ஓமான் | 2:0, 1:0 |
| சீனா | கட்டார் | 1:1, 3:0 |
| சீனா | உஸ்பெகிஸ்தான் | 2:0, 0:1 |

இக்குழுநிலைப்போட்டிகளில் ஆறில் வெற்றியும், கட்டா ருடனான ஒரு ஆட்டத்தில் சமநிலையும், உஸ்பெகிஸ் தானுடன் அவர்கள் நாட்டில் இடம்பெற்ற ஆட்டத்தில் 1:0 எனும் கோல்நிலையில் தோல்வியும் அடைந்து பத்தொன்பது புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்று 2002-ம் ஆண்டிற்கான உலகக்கிண்ண இறுதிச்சுற்றிற்குத் தகுதி பெற்றுள்ளனர். இதற்கு முன்னர் ஐந்து தடவைகள் முயற்சித்தும் இரண்டாம் சுற்றில் வெற்றி பெறாமையால் துவண்டிருந்த இவர்கள் தமது இந்த ஆறாவது முயற்சியில் வெற்றிகண்டுள்ளனர். இனி வருங்காலங்களில் இவர்கள் ஆதிக்க சக்திகளிற்குப் பெரும் சவாலாகவே இருக்கப்போகின்றனர். 1990ம் 2000ம் ஆண்டிற்கான ஆசியக்கிண்ணப் போட்டிகளில் இறுதிச்சுற் றிற்குத் தகுதி பெற்றிருந்ததே இற்றைவரை இவர்களின் அதியுயர் பெறுபேறாகும். சுமார் பன்னிரண்டு இலட்சம் ஆதரவாளர்கள் 2002-ம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந் தாட்டத்தை நடாத்தும் சுற்றுப்போட்டிக் குழுவிடம் தமக்கு அனுமதிச்சீட்டு வேண்டுமென்று விண்ணப்பத்தை முன் வைத்துள்ளனர். ஐம்பதினாயிரம் ஆதரவாளர்களுக்கு அச் சந்தர்ப்பம் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பயிற்சியாளர்

யூகோசிலாவியாவைச் சேர்ந்த வொறா மிலுரினேவிக் (Bora Milutinovic) என்பவர் பிரான்சில் நடைபெற்ற பதினா றாவது உலகக்கிண்ணத்தை அடுத்து (ஒகஸ்ட் 1998) உடனடியாகச் சீன அணியின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற் றார். 1986, 90,94,98ம் ஆண்டுகளில் நடைபெற்ற பதின்மூன் றாம், பதின்நான்காம், பதினைந்தாம், பதினாறாம் உலகக் கிண்ண இறுதிச்சுற்றில் பங்குபற்றிய மெக்சிக்கோ, கொஸ் ரறீகா, ஐக்கிய அமெரிக்கா, நைஜீரியா ஆகிய அணிகளின் பயிற்றுநராக இருந்த இவரிற்கு இது தொடர்ச்சியான ஐந்தா வது உலகக்கிண்ணம் ஆகும். இதுவரையில் எந்த ஒரு பயிற்சியாளரும் தொடர்ந்து ஐந்து உலகக்கிண்ண இறு திச்சுற்றிற்கு தமது அணியை பங்குபெற வைக்கவில்லை. அந்த ஒப்பற்ற சாதனையாளனாகத் திகழும் இவ் இளவலின் வயது ஐம்பத்தேழு ஆகும். அத்துடன் ஐந்து வேறுபட்ட நாடுகளின் பயிற்சியாளன் என்ற பெருமைக்கும் உரியவர் ஆவார்.

### பலம் (+)

அ) பயிற்சியாளரின் உலகளாவிய திறமை
ஆ) அதியுயர் தேக வலு (Fitness) கொண்ட வீரர்கள்
இ) ஜேர்மனி இங்கிலாந்தில் விளையாடும் வீரர்கள் தனித் திறன்

### பலவீனம் (—)

அ) ஐரோப்பியர்களின் திறனுக்கேற்ற தன்மையற்ற நிலை
ஆ) பெரும் சுற்றுப்போட்டிகளின் அனுபவமின்மை
இ) தென்கொரியா, ஜப்பான் ஆதரவாளர்களிடமிருந்து ஒன்றுபட்ட ஆதரவு இல்லாமை.

## டென்மார்க்

ஐரோப்பிய பிராந்தியத்தில் குழு மூன்றில் செக்குடியரசு, பல்கேரியா, ஐஸ்லாந்து, வட அயர்லாந்து, மோல்ற் என்பவற்றுடன் குழுநிலையில் இரு வழி ஆட்டங் களில் விளையாடி ஆறு ஆட்டங்களில் வெற்றியும், நான்கில் சமநிலைப்பெறுபேறுடன் இருபத்திரண்டு புள்ளிகளினூடே தமது குழுவில் முதலாமிடத்தைப் பெற்று மூன்றாவது தடவையாக உலகக்கிண்ண இறுதிச்சுற்றிற்குத் தகுதிபெற் றுள்ளனர்.

### குழுநிலைப்போட்டிகள்

| | | |
|---|---|---|
| டென்மார்க் | ஐஸ்லாந்து | 2:1, 6:0 |
| டென்மார்க் | வட அயர்லாந்து | 1:1, 1:1 |
| டென்மார்க் | மோல்ற் | 2:1, 5:0 |
| டென்மார்க் | செக்குடியரசு | 0:0, 2:1 |

1904ம் ஆண்டு சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத் தில் அங்கத்துவம் பெற்ற இவர்கள் இன்றைய நிலையில் உலக வரிசைப்படுத்தலில் அறுநூற்று எழுபது புள்ளிகளு டன் இருபதாவது இடத்தை வகிக்கின்றனர்.

ஒலிம்பிக் போட்டியில் 1908ம் 12ம்,60ம் ஆண்டுகளில் இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றிருந்த இவர்கள் 1992ம் ஆண்டு ஐரோப்பியக் கிண்ண இறுதிப்போட்டியில் ஜேர் மனியை எதிர்பாராத விதமாக வெற்றிகொண்டதோடு, 1984ம் ஆண்டு அரையிறுதி ஆட்டத்திற்கும் 1964ம் ஆண்டு கால் இறுதி ஆட்டத்திற்கும் தகுதி பெற்றிருந்தனர்.

1986ம் ஆண்டு முதல் முறையாக உலகக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றிய இவர்கள் அரைகால் இறுதி(1/8) ஆட்டம் வரை முன்னேறியிருந்தனர். இரண்டாவது தடவை யாக பிரான்சில் நடைபெற்ற பதினாறாவது உலகக்கிண்ணப் போட்டிக்குத் தகுதிபெற்ற இவர்கள் அரைகால் இறுதி யாட்டத்தில் நைஜீரியாவை வெற்றிகொண்டு கால் இறுதி ஆட்டத்துடன் போட்டியில் இருந்து வெளியேறினர். 1995ம் ஆண்டிற்கான கொன்படரேசன் (Confedaration) கிண்ணத் தையும் வெற்றிகொண்டனர்.



### பலம் (+)

அ) இடைநிலை (Midfield) வீரர்களின் தாக்குதல்திறன்
ஆ) முன்னணி வீரர்கள் அனைவரும் ஐரோப்பாவின் முக்கிய கழகங்களில் விளையாடுவது
இ) ஒரு முகப்படுத்தப்பட்ட தாக்குதல் யுத்தி

### பலவீனம் (—)

அ) பெரிய சுற்றுப்போட்டிகளின் அனுபவக்குறைவு.
ආ) இலகுவான போட்டிகளின் சிலவேளைகளில் கவனக் குறைவான ஆட்டம்
இ) குழுநிலைப்போட்டிகள் ஒட்டுமொத்த திறமையை வெளிக்காட்டாமை.

- ஜே. ஜே.

Restaurant
Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet,
75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

★ இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
★ உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

தர்ஷனா & பிரஷா
உணவகங்கள்




இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant
Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc,
75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நிகழ்வுகள்

## தமிழிசைக்கோர் அரங்கேற்றம்!

ஜேர்மனியில் முதல் இசை அரங்கேற்றம். இசையை காதலிக்கும் பதினெட்டு வயது நிரம்பிய ஸ்ரெபான் கிலிவ் வலன்ரைன் தம் இசைக்கோர் மகுடம் சூட்டுகின்றார். ஜேர்மனியில் பிறந்து வளர்ந்தவர், ஏராளமான தாயக உணர்வு நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்.

விடுதலையை நேசிக்கும் ஸ்ரெபான் விடுதலைப் பாடல்களை மாத்திரமே பாடிவருபவர். அவர் பாடிய முதல்பாடல் 'சூடுசுரனை கொஞ்சமும் இல்லை...' என்ற பாடல்தான். தேனிசை செல்லப்பா கலந்துகொண்ட மேடையில் பாடி அவரின் பாராட்டையும் பெற்றவர்.

உலகத் தமிழர் இயக்க கல்விப்பணியின் கீழ் இயங்கும் கசிலிங்கவுசன் தமிழாலயத்தில் பத்தாம் ஆண்டுவரை தமிழ் மொழிக்கல்வி பயின்று சித்தியடைந்தவர். மேலைத்தேச தாளவாத்தியத்தை முறைப்படி பயின்றனர். நகரின் இசைக்கல்லூரியில் பத்து ஆண்டுகள் பயின்று சான்றிதழும் பெற்றவர். தமிழர் புனர்வாழ்வுக்கழகம், செஞ்சோலை, ஆகியவற்றுடன் அமைப்பு நிகழ்ச்சிகளிலும் நடனக் கலைஞராகவும், பாடகராகவும், மேலைத்தேச தாளவாத்தியக் கலைஞராகவும் பணியாற்றி வருகின்றார்.

ஏழுவயதில் மாவீரர்நாள் மேடையில் உரையாற்றி பலரின் பாராட்டைப்பெற்ற ஸ்ரெபான் ஸ்வராகா இசைக்கலாலயத்தின் அதிபரான இசைக்கலைமணி திருமதி. தர்மினி தில்லை நாதனிடம் சங்கீதம் பயின்று ஏழாம் தரத்தில் வாய்ப்பாட்டிலும் எழுத்துப் பரீட்சையிலும் தோற்றி சித்தியடைந்துள்ளார். அவரின் அரங்கேற்றம் 27.04.02 சனியன்று மாலை நான்கு மணிக்கு ஜேர்மன் வியூப்பற்றால் வியூப்பர்கல மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் திரு. இ. நாகலிங்கம் இவ்விழாவிற்குத் தலைமை தாங்குவதுடன் பிரதம அதிதியாக பேராசிரியர் அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவேல் கலந்துகொள்ளவுள்ளார்.



சிறப்பு விருந்தினர்களாக இன்னிசை வேந்தர் சங்கீதபூசணம் திரு. பொன் சுந்தரலிங்கம் (கனடா), சங்கீத வித்தகி கானபூசணம் திருமதி. அம்பிகா தாமோதரம் (லண்டன்) திரு. சி. காராளபிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

- வீ. ஆர். வரதராஜா.

## மாணவர் தன்னாற்றல் பட்டறை 2002 - பிரான்ஸ்



பாரிசிலிருந்து தென்-கிழக்கே கிட்டத்தட்ட 200 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சிறு நகரமாகிய Gien இல் கடந்த 13ம் 14ம் திகதிகளில் பிராங்கோ தமிழ் மாணவர் அமைப்பினால் 'மாணவர் தன்னாற்றல் பட்டறை' ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்பட்டறையை பேராசிரியர்கள் சிறிஸ்கந்தராஜா, ஜோன் மரி ஜூலியா, சிறிதேவி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் சிறப்பாக நடாத்தியிருந்தனர்.

தன்னாற்றல் பட்டறையில் பாரிசிலிருந்து 25 மாணவர்களும், Gien நகரிலிருந்து 15 மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர். பாரிஸ் மாணவர்கள் வெள்ளிக்கிழமை 12.04.2002 இரவு 9 மணியளவில் பேருந்து மூலம் Gienக்குச் சென்று ஞாயிறு இரவு பாரிஸ் திரும்பியிருந்தனர்.



எம் தமிழ் மாணவர்களிடேயே தன்னாற்றல் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதுடன் தமிழ் மாணவர்களுக்கிடையே சிநேகித உறவை வளர்க்கவும் அவர்கள் நேரிடும் பிரச்சனைகளை முன்வைத்து ஆராயவும் மற்றும் அவர்கள் வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் இப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பெரிய நகராகிய பாரிசைச் சுற்றி வாழும் மாணவர்கள் கிராமப்புற வாழ்வுமுறைகளைக் காணும் சந்தர்ப்பத்தை வழங்கும் விருப்பத்துடனும் ஒரு மாற்றுச் சூழலுக்காகவும் Gien நகரம் தேர்வு செய்யப்பட்டது.

சனிக்கிழமை காலை மாநகர உப நகரபிதா, அருட்தந்தை மற்றும் பேராசிரியர்களின் வரவேற்புடன் பட்டறை ஆரம்பமாகியது. இப்பட்டறையின்போது, சனி, ஞாயிறு தினங்களில் தமிழர் வரலாறு, இயற்கையை பாதுகாக்கும் அவசியம், தமிழ் இளைஞர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் எதிர்நோக்கும் நன்மைகள் சிக்கல்கள், தலைமை தாங்குவதற்கு தெவையான தரங்கள், ஈழத்தில் விவசாய அபிவிருத்தி, நாட்டு முன்னேற்றம், ஈழத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சி - அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், புலம் பெயர்ந்தோர் செய்யக்கூடிய உதவிகள் மற்றும் ஆண்கள்-பெண்களுக்கிடையே சமத்துவ அவசியம் என்பன போன்றவை கலந்துரையாடப்பட்டன.



பங்குகொண்ட மாணவர்கள் அனைவரும் மிகவும் ஆர்வத்துடன் தத்தமது சிந்தனைகளை, பிரச்சினைகளை முன்வைத்துப் பேராசிரியர்களின் அறிவுரைகளை, அனுபவங்களைக் கேட்டறிந்திருந்தனர். தன்னாற்றல் பட்டறையில் பங்குகொண்ட அனைவரையும் Gien வாழ் தமிழ் மக்கள் சிறப்பே வரவேற்று உபசரித்திருந்தனர். அச் சிறிய நகரில் 25 தமிழ் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். பட்டறைக்குச் சென்றோரை தாம் பணியாற்றும் பண்ணை ஒன்றுக்கு அழைத்துச் சென்று அவர்கள் காட்டியிருந்தனர். நகரத்தில் வாழ்ந்துவரும் மாணவர்களுக்கு கிராமப்புறம் சென்று பன்றி, பசு, கன்று, கோழி, தோட்டம் எனப் பார்த்து மகிழ்வான விடயமாகும்.

(நிரந்தரி மற்றும் மயூரனின் தொகுப்பு)

பிரான்ஸ்

பொங்குதமிழ் 2002

காலம் - 19.05.2002 ஞாயிற்றுக்கிழமை.
தொடர்புகட்கு: 01 43 58 11 42 (தொலைபேசி)
01 43 58 11 91 (தொலைநகல்)

மே 1 மேதின அணிவகுப்பு - பிரான்ஸ் -

உலக தொழிலாளர்கள் முன்னே எங்கள் எழுச்சி அணிவகுப்பு
இடம்: Place de la Republique
(Bld. du Temple - Bld. Voltair ஆகியனவற்றிற்கு இடையேயான சந்திப்பு இடத்தில்)
மாலை 2.30 மணிக்கு அனைவரும் ஒன்று திரண்டு பேரணியில் இணைந்திடல் வேண்டும்.
தொடர்புகளுக்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
தொலைபேசி இல: 01 43 58 11 42

இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை தமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்!

Ruby's Food Store

52 high St., Southall, UBI, Middx.
Tel: 0209 813 96 63



உங்கள் தேவைகள் எதுவென அறிந்து அவற்றைப் பூர்த்திசெய்யக் காத்து இருக்கிறார்கள்
Ruby's Food Store

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருகோணமலை*

# காணாமற்போன திரியாய்க் கிராமத்தைக் கண்டுபிடிக்க முன்வந்துள்ள இடம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள்

கடந்த வாரம், புதன்கிழமை காலை நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தில் ஒரு கூட்டம் நடந்தது.

நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் பங்குபற்றினர்.

அவர்களில் பலரின் முகங்கள் எப்போதோ • பார்த்தவையாகக் காணப்பட்டன.

வாடி வதங்கிய தோற்றம். எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்குமா? அல்லது இருள்மயமானதாகவே தொடருமா?

இதற்கான பதிலைத் தேடும் இவர்கள் யார்?

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே 32 மைல் தொலைவில் திரியாய் என்றொரு கிராமம்.

எண்ணூறுக்கும் அதிகமான தமிழ்க் குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்தன. நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்டது அக்கிராமம். இரண்டு தடவைகள் திரியாய்க் கிராமம் கூண்டோடு இடம்பெயர்ந்தது.

1983 இல் ஒரு தடவை மக்கள் இடம்பெயர்ந்தனர் 1990 இல் இரண்டாவது தடவை இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள் எல்லாம் திக்குத் திக்காகத் திசை மாறிச்சென்றனர். இந்தியா சென்றன சில குடும்பங்கள். திருகோணமலை நகருக்குத் தப்பி வந்த சில குடும்பங்கள் தங்களின் உறவினர்களுடன் வசித்து வருகின்றன. பெரும்பாலான குடும்பங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிராந்தியத்திற்குச் சென்று வசித்து வந்தன.

பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது. அதனை அடுத்து வன்னியில் தங்கியிருந்த திரியாய் மக்கள் மீண்டும் திருகோணமலைக்குத் திரும்பினர்.

மீண்டும் திரியாய் செல்ல வேண்டும், அங்கு கைவிடப்பட்டிருக்கும் சொந்த நிலபுலன்களைப் பார்க்க வேண்டும், அங்கு குடியமர வேண்டும், நிம்மதியாக வாழ வேண்டும்--- இந்த ஆசையுடன் வந்தவர்கள் எல்லாரும் அன்று நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தில் குழுமியிருந்தார்கள்.

திரியாய் எவ்வாறு தற்சமயம் காட்சியளிக்கின்றது?

ஒரே காடு. மக்கள் குடியிருந்த இடமா? என்பது கண்டுபிடிக்க முடியாத அளவுக்குப் பற்றைக் காடுகளால் மூடப்பட்டு திரியாய் காட்சியளிக்கின்றது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக மனித நடமாட்டம் இல்லாத அக்கிராமத்தை எவ்வாறு புனர்நிர்மாணம் செய்வது?

திரியாய்க் கிராமத்தின் கிணறுகளினுள் மனித எலும்புக்கூடுகளும் இருக்கக்கூடும் என்ற தகவலும் அக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

அக்கூட்டத்தில் திரியாய்க் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் பலர் பேசினார்கள்.

நாங்கள் விரைவாக அங்கு குடியேற ஏற்பாடு செய்து கொடுங்கள்.

ஆஸ்பத்திரி, பாடசாலை, நல்ல வீதி ஆகியனவற்றைச் செய்து தந்த பின்னர் எம்மைக் மீளக் குடியமர்த்த வேண்டும் என்று நாம் கோரவில்லை.

முதலில் நாம் அங்கு சென்று ஓலைக் கொட்டில் ஒன்றைப் போட்டு எமது காணிகளைத் துப்பரவு செய்வதற்கு அனுமதி பெற்றுத் தாருங்கள்.

இவ்வாறு திரியாய் மக்கள் அக்கூட்டத்தில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரா.சம்பந்தன், விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் ஐங்கரன் ஆகியோரைக் கேட்டுக்கொண்டார்கள்

திரியாய் மக்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்டால்----

தாம் பிறந்த சொந்த மண்ணைக் காணும்போதுதான் திரியாய் மக்களிடம் ஆனந்தக் கண்ணீரைக் காண முடியும் என்பது அவர்களின் பேச்சில் இருக்கும் வேகத்தைப் பார்க்கும்போது தெரிகிறது.

திரியாயில் அவர்கள் மீளக் குடியமரும் காலம் விரைவில் வருமா?

இருபது வருட கால யுத்தத்தில் திருகோணமலை மாவட்டத்தில் காணாமற் போன தமிழ்க் கிராமங்களில் ஒன்று திரியாய். திரியாயைச் சுற்றி வர உள்ள பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்த பின்னர்தான் திரியாயைப் புனர்நிர்மாணம் செய்யத் தொடங்க வேண்டும் என்ற கருத்து அக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இதெல்லாம் எப்போது சாத்தியமாகும்? அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அத்தனை துறைகளின் அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்படும்போதுதான் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அழிந்து போன கிராமங்கள் அனைத்தும் புனர்நிர்மாணம் செய்யப்படக் கூடியதாக இருக்கும். இக் கந்த்தே அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

*– திருமலையிலிருந்து நாதன்*

Rani

ரூட்டிங்கில் தரமிகு ஜவுளி மாளிகை



பட்டு சாம்ராஜியத்தின் வெற்றி நிறுவனம்!

குழந்தைகளுக்கான, ரெடிமேட் ஆடைகள், வைபவ அணிகள்!!!

பெண்மைக்கு அழகு சேர்க்கும் பட்டுச் சேலைகளும், தினசரி விரும்பி அணியும் ஃபாஷன் பேன்ஸி சேலை உலகம்!!

எம்மிடம் புடவைகள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் 24 மணி நேரத்தில் சாறி பிளவுஸ் இலவசமாக தைத்துக்கொடுக்கப்படும்.

33,Upper Tooting Road
London SW17 7TR
Tel- 020 8767 8081
Fax- 020 8767 3784

RANI FASHION DESIGN & TAILORING

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகள் பற்றிய அமெரிக்க கொள்கையில் பாதிப்பில்லை

## - இரு அமைச்சர்களிடம் ஆர்மிரேஜ் வாஷிங்டனில் வாக்குறுதி-

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்குவது தொடர்பாக சிறீலங்கா அரசாங்கம் எடுக்கக்கூடிய முடிவு அமெரிக்காவின் கொள்கையைப் பாதிக்காதென அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆர்மிரேஜ் மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறார்.

அரசியலமைப்பு விவகார, தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருடனான சந்திப்பின் போதே அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆர்மிரேஜ் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் அமைச்சர்கள் பீரிஸ், ரவி கருணாநாயக்க இருவரும் பிரதி அமைச்சர் ஆர்மிரேஜுடன் கலந்துரையாடியுள்ளனர்.

# இளைஞர்களைத் தாக்கிய படையினர் புலிகளிடம் மன்னிப்புக் கோரினர் !

அக்கரைப்பற்று ஆலயடி வேம்புப் பகுதியில் இளைஞர்கள் இருவரைத் தாக்கிய அதிரடிப் படையினர் ஊர்ப்பிரமுகர்களின் தலையீட்டினால் இப்பகுதி விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனைக்குச் சென்று மன்னிப்புக் கோரிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விளைஞர்கள் அதிரடிப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை இவ்வூர்ப் பிரமுகர்கள் இப்பகுதிக்கு அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்தே படையினர் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனைக்குச் சென்று இவ்வாறான சம்பவங்கள் இனி வரும் காலங்களில் நடைபெற மாட்டாது எனக் கூறி இச்சம்பவத்தினை மன்னிக்கும்படியும் கேட்டதாகக் கூறப்படுகிறது.

# பொங்குதமிழுக்கு எதிராக சிஹலுங்கே பிபி தீம

'பொங்கு தமிழுக்கு' இணையாக சிங்கள மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'சிஹலுங்கே பிபி தீம' என்ற நிகழ்வை நடத்த முடிவு செய்திருப்பதாக சிஹல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

சகலரும் சௌஜன்யத்துடன் வாழ்வதற்காக இந்த நிகழ்வை நடத்தப்போவதாக சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ன கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியையும் விடுதலைப் புலிகளின் நோக்கத்தையும் முறியடிக்கவே தாங்கள் விரும்புவதாக திலக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இது நாட்டுக்கு...

தெரிவித்தார்.

ஊர்காவற்படையினரின் ஆயுதங்கள் கூட அவர்களிடமிருந்து களையப்பட்டன. ஆனால் விடுதலைப் புலிகள் ஓர் ஆயுதத்தைக் கூட கீழே வைக்கவில்லை என மற்றொரு உறுப்பினர் ஆதங்கம் வெளியிட்டார்.

இப்பாரளுமன்ற உறுப்பினர்கள் புதிய குழுவொன்றை அமைத்துச் செயற்பட தற்போது முடிவு செய்துள்ளதாக இக்குழுவின் இணைப்பாளர் தினேஸ் குணவர்த்தன கூறினார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இது இறுதி...

இடம்பெற்ற சமதான அணிவகுப்பை ஆரம்பித்து வைக்கும் போதே அவர் இவ்வாறு உரையாற்றினார்.

தற்போது சிங்கள கடும்போக்காளர்கள் எழுப்பியவரும் தீவிர இனவெறி போக்கையே அவர் இப்பேச்சில் மறைமுகமாக எச்சரித்ததாக அவதானிகள் கூறுகின்றனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இந்தியாவின்...

பட்டியலிட்டு இந்தியாவின் ஆதரவை அவர் கோரக் கூடும் என டில்லியின் பிரபல ஆங்கில ஏடான தி ஹிண்டுஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவது பற்றிய விடயங்களிலும் புலிகளுக்கு எதிரான சந்திரிகாவின் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றுடனும் இந்திய உயரதிகாரிகள் சிலர் ஒத்துப் போவதாகவும் அது எழுதியுள்ளது.

இதேவேளையில் சந்திரிகாவின் முயற்சிகளை எதிர்த்து பரப்புரை செய்வதற்காக அமைச்சர் ஜி.எல்.பீரிஸை பிரதமர் ரணில் டில்லிக்கு அனுப்புகின்றார். எதிர்வரும் யூன் முதற்பகுதியில் ரணில் நேரடியாக டில்லி சென்று பிரதமர் வாஜ்பாஜை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆபாசத் திரைப்பட...

யாளர்கள், வீடியோ நாடா வாடகைக்கு விநியோகிப்போர் மற்றும் கலைஞர் களுக்கான கலந்துரையாடல் ஞாயிறன்று கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் 'நிதர்சனம்' பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றிய புலிகளின் பிரமுகர் புதுவை இரத்தினதுரை, குடா நாட்டில் தலை யெடுத்திருக்கும் சமூகச் சீரழிவுச் செயல்கள் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகள்...

காப்பாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கனடா, அவுஸ்ரேலியா என்பனவும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னே போர் நிறுத்தத்தை வரவேற்று உரையாற்றியுள்ளன.


உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Pega Star -Co Verleger
Mr. A. Thevaraj
Böblinger str. 87
70199 Stuttgart/ Germany
Tel: 0049+711 - 6157028 / Fax: 0049+711-6157030
E-Mail: theva@t-online.de

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 60 DM, 60 Swiss FR, 170FF மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்

Fullname: ..................
Date of Birth: .................. Time of Birth: ..............
Place of Birth: ..................
Address: ..................
..................
City/ Date: ..................
Signature

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

Pub.Gr


## 31வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 12.05.1932



உதிர்வு: 25.03.2002

### திரு. அப்புப்பிள்ளை தேவராசா (கலைநகர் சித்தங்கேணி)

கலைநகர் சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு முகத்துவாரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த அப்புப்பிள்ளை தேவராசா அவர்களின் 31ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் 24.04.02 அன்று பாரிசில் நடைபெறும்.

இவர் புவனேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், வசந்தநிதி (இலங்கை), பத்மநிதி (பிரான்ஸ்), கோமதி (பிரான்ஸ்), குணசேகரம் (கனடா), சிவசேகரன் (பிரான்ஸ்), பிறேமாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி, செல்வநேசன் (பிரான்ஸ்), மௌனசிங்கம் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), ஏகாம்பரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜிகரன் (பிரான்ஸ்), கஜினா, சர்மிளா, சுகந்தி, லோஜிக்கா (இலங்கை), அமலன், கோமேதகன், கஜமுகி, சரண்யா, அருட்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நாகம்மா, நவரட்ணம் மற்றும் கதிரவேலு, பவளம் இந்திரப் பகவதி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இத்துயரச் செய்தி அறிந்து நேரில் கலந்துகொண்டவர்களும், தொலைபேசியில் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*தகவல்: செல்வநேசன்*
*தொலைபேசி: 01 53 80 1669*

15, Rue Bellier Dedouvre, 75013 Paris.


இங்கே ! இப்போதே !! ஆரம்பமாகி விட்டது SALE
ஓவியா ENTERTAINMENT
மார்ச் 20 முதல் ஏப்ரல் 20 வரை
3 DVD For ƒ 34.95 முதல் 39.80
3 video For ƒ 13.95 முதல் 18.10
3 VCD (Songs) for ƒ12.95 முதல் 15.10
3 Song CD For ƒ 11.95 முதல் 13.30
3 Isaithenral For ƒ 18.95 முதல் 21.10

ஓவியா ENTERTAINMENT
14 Ealing Road
Wembley, Hao 4TL
Tel: 02087953003 www.oviyavideo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# இது நாட்டுக்கு அழிவாக முடியும்!

## புதிதாக உருவாகிய சிங்கள எம்.பிக்கள் குழு எச்சரிக்கை

விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டிருக்கும் தடைநீக்கப்படும் சாத்தியம் உருவானால் அது நாட்டுக்கு கொடூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இது குறித்து ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எடுத்துக் கூறப்போகிறோம் என சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவில் இடம்பெறும் முன்னாள் பிரதமரான ரத்னசிறி விக்கிரமநாயக்கா உட்பட பல எம். பிக்களும் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு வெறுமையான காசோலை என்று முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா கூறினார்.

இடைக்கால நிர்வாகசபை ஒழுங்குமுறையில் வடக்கு-கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்களவர்களைப் பற்றி ஒரு வார்த்தையேனும் கூறவில்லையே - என்று கேள்வி எழுப்பினார் விக்கிரமநாயக்கா. வடக்கு - கிழக்கு சிங்களவர்களின் நிலை ஒரு பாரதூரமான விடயம் -என்று ம.ஐ.மு.தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறினார்.

இந்த நாட்டிலுள்ள 76 சதவீதமான சிங்களவர்களின் சார்பாக ஒருவருமே அக்கறையுடன் பேசவில்லை என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. ஏ.டி.எஸ்.குணவர்த்தனா கூறினார்.

கிழக்கு மாகாண சிங்களவர்களுக்கு எதிர்காலமில்லை என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேவரப்பெரும

(☞ 31ம் பக்கம்)

# இந்தியாவின் ஆதரவை சந்திரிகா கோருகின்றார்

(22.04.02)

புலிகளுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை ஆதரிக்குமாறு கோரியே இந்தியத் தலைவர்களை டில்லியில் சந்தித்து வருகின்றார் என டில்லி உள்நாட்டு, வெளிநாட்டு செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. புலிகளின் நிர்வாகத்தின் கீழ் திருகோணமலை உட்பட வடக்குக்கிழக்கு பகுதிகள் இயங்கவுள்ள புதிய சூழலில் இம்முயற்சிகளை தனது சனதிபதி அதிகாரத்தைப் பாவித்து நிராகரிக்க சந்திரிகா முயல்வதாகவும், தனது இந்நிலைப்பாட்டிற்கு சர்வதேச எதிர்ப்புக்கள் உருவாகும் என்பதால் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதன் மூலம் தப்பிக்கலாம் என அவர் எண்ணுவதாகவும் மேலும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

மறைந்த முன்னாள் காங்கிரஸ் தலைவர் மாதராவ் சிந்தியா ஞாபகார்த்த பேருரையை ஆற்றுவதற்காகவே சந்திரிகா டில்லி செல்வதாக கூறப்பட்டாலும் தற்போது சந்திரிகாவின் பயணம் ஒரு வேலைசார் பயணம் என விபரிக்கப்படுகின்றது. அவர் ஒரு வாரம் டில்லியில் தங்கி சனதிபதி, பிரதமர், பல்வேறு அமைச்சர்கள், எதிர்கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்து பேசிவருகின்றார். சந்திரிகாவுடன் அவரது நம்பிக்கைக்குரிய முன்னாள் அமைச்சர் கதிர்காமர் பயணம் சென்றுள்ளதால் இச்சந்திப்புக்களின் போது நோர்வே இணக்க முயற்சிகளுக்கு எதிராக உள்நாட்டில் தான் உருவாக்கும் அணி பற்றிய விளக்கங்களை அவர் இந்தியாவுக்கு விளக்க முற்படலாம் என ஊகிக்கப்படுகின்றது.

சந்திரிகா புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுப்பதற்கான தனது ஆட்சேபங்களை

(☞ 31ம் பக்கம்)

# ஆபாசத் திரைப்பட ஆவணங்கள் முற்றாக அழித்தொழிக்கப்படும்!

## – யாழ்ப்பாணத்தில் புலிகள் –

சமுதாய முன்னேற்றம், மக்களின் வாழ்வு மேம்பாடு போன்றவற்றுக்கு ஊறு விளைவித்து, நாட்டைச் சீரழிக்கும் ஆபாசப்பட ஆவணங்கள் முற்றாக அழித்தொழிக்கப்படவேண்டும். இதற்கு குடாநாட்டு மக்கள் முழு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கூறியுள்ளார்.

சினிமா அரங்குகளின் உரிமை

(☞ 31ம் பக்கம்)

# இது இறுதி வாய்ப்பு

## – ரணில் எச்சரிக்கை –

(22.04.02)

தற்போது இடம்பெறும் புலிகளுடனான இணக்க முயற்சிகள் நிரந்தர சமாதானம் உருவாகுவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார். தனது அரசு பேச்சுக்கள் மூலம் ஒரு ஒற்றுமையான நாட்டை உருவாக்க முயல்வதாகவும் தனது அரசு நாட்டை பிரிக்க ஒருபோதும் அனுமதிக்காது எனவும் கூறிய அவர், கடந்த காலங்களில் இராணுவத்தால் தீர்வு காண முயற்சிக்கப்பட்டது, ஆனால், இப்போது இராணுவத்தைப் பலப்படுத்தியவாறு பேச்சுக்கள்மூலம் தீர்வு காண முயல்கின்றோம் என அவர் கூறினார். கண்டியில்

(☞ 31ம் பக்கம்)

# பிரபாகரன் ஒரு சக்திமிக்க தமிழ்அரசை உருவாக்கிவிடுவார்!

## - பிரதான பௌத்த பீடாதிபதிகள் போர்க்கொடி -

(22.04.02)

மல்வத்த மற்றும் அஸ்கீரிய பீடாதிபதிகள் புலிகளுக்கு எதிரான சிறீலங்காவின் தடைச்சட்டத்தை நீக்க வேண்டாம் என சனக்திபதி சந்திரிகா, பிரதமர் ரணில் ஆகியோரிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்போதுள்ள தடை எக்காலகட்டத்திலும் நீக்கப்படக் கூடாது எனவும், வடக்கும், கிழக்கும் இணைக்கப்படக் கூடாது எனவும் கோரும் இப்பீடாதிபதிகள் இடைக்கால அரசு வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கப்படக் கூடாது எனவும் கோரியுள்ளனர்.

2500 வருடகால ஒற்றையாட்சி முறை தற்போது உடைபடும் அபாயம் உள்ளதாக கூறும் இப்பீடாதிபதிகள் பிரபாகரனின் பேட்டி அமைதிக்கான சாத்தியத்தை இல்லாதாக்கிவிட்டதாகவும் கூறியுள்ளனர். நாங்கள் எதிர்க்காவிட்டால் சக்திமிக்க ஒரு சுயராஜ்ஜியத்தை பிரபாகரன் சிறீலங்காவினுள் உருவாக்கிவிடுவார் எனக் கூறும் இவர்கள் இதனால் சிங்கள இனமே அழிந்துவிடும் எனவும் எச்சரித்துள்ளனர்.

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org